மே 06, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்

# வடக்கை அதிரவைத்த அகோரப் போர்!



கனரக ஆட்டிலறிகளை இயக்கும் புலி வீரர்கள்.



அரச படை வீரர் ஒருவர் எதிர் அணி மீது குறி வைக்கும் காட்சி.



கனரக மோட்டார்களை (20 மில்லி மீட்டர்) களம் நோக்கி நகர்த்தும் பெண் புலிகள்.



போருக்குப் புறப்படுவதற்கு முன் புலிகளின் அதி விசேட படையணியின் அணி வகுப்பு.

## வகுப்பறையில் சாக்கடை நீர்!




## ஆழம் அறியாமல் காலை வைத்தால் அவதிதான்!

## சொல்ஹெய்மின் கொழும்பு வருகை

## ஆயர்கள்—புலிகள் சந்திப்பு

## வடக்கில் காணாமல் போவோர் பிரச்சினை

## சார்ஜா கிரிக்கெட்: சுடர் ஒளி நடத்திய போட்டி முடிவுகள்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நூலகத்துறைப் படிப்பகம்

# மாணவனின் சடலத்தை பூநகரி அனுப்புவதில் ஏற்பட்ட இழுபறி!

தேரடியில் அனைவரும் வந்தமர்ந்த கையோடு, ''மாஸ்டர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஸ்டேசன் வைச்சிருக்குதோ?'' நமுட்டுச் சிரிப்புடன் கேட்டாள் சின்னாச்சி.

ஏதோ கதைக்கு சின்னாச்சி அத்திவாரம் போடுவதைப் புரிந்து கொண்டு ''ஏன் என்ன விஷயம்?'' என்று கேட்டான் டானியல்.

மணிக்கூட்டிலை இலங்கை நேரம் பத்துமணியைக் காட்டினா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரம் 9மணி 30 நிமிடம் என்ற பழைய நேரத்தை சொல்லுது அதுதான் கேட்டனான்'' விளக்கினாள் சின்னாச்சி.

''நீ வடிவாகக் கேட்கவில்லை. அது தமிழ்ச் சேவை இல்லை. சர்வதேச ஒலிபரப்பு. அரை குறையாகக் கேட்டுப்போட்டு வந்து எங்களைக் குழப்பாதை கிழவி''

சின்னாச்சியை கவிழ்க்க சந்தர்ப்பம் கிடைத்ததாக எண்ணிக் கூறினான் லோகன்.

''சின்னாச்சி தமிழ்நாட்டு விளம்பரதாரர்களை முக்கியத்துவப்படுத்தி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சர்வதேச சேவையை நடத்திறபடியால் இந்திய நேரத்தை சொல்லுகினம் இதில் என்ன தப்பு?''

நண்பனுக்கு ஆதரவாகப் பேசினான் டானியல்.

இதனைக் கேட்டு நக்கல் சிரிப்பொன்றை உதிர்த்த சின்னாச்சி ''சர்வதேச வானொலி என்று கூறி இந்திய நேரத்தைக் ஒலிபரப்பினால் எப்படிச் சரியாகும், பி.பி.ஸி தமிழோசையில் சொல்வது போல எல்லா நாடுகளுக்கும் பொதுவான கிரீன்விச் நேரத்தையும் சொல்லி, தேவைப்பட்டால் இந்திய நேரம் என்று குறிப்பிட்டு சொல்லலாமே''.

''நாங்கள் எங்கடை கைக்கடிகாரங்களிலை பழைய நேரத்தை வைச்சிருந்தால் மட்டும் சந்தியிலை நிற்கிறவைக்கு கோவம் வருகுது. அவையின்ரை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மட்டும் பழைய நேரத்தை இலங்கை நேரம் என்பது போல சொல்லலாமா'' என்று பொரிந்து தள்ளினாள்.

சின்னாச்சியிடமிருந்து இப்படி எதிர்த் தாக்குதல் கிடைக்கும் என்று எதிர்பாராததால் இளைஞர்கள் இருவரும் விழித்தனர்.

''பலவீனமானவை என்று நினைச்சுச் சொட்டிப்பார்த்தால் இப்படித்தான் சின்னாச்சியிட மிருந்து வரும் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் துண்டைக் காணம் துணியைக் காணம் என்று ஓட வேண்டி வரும்'' பொடி வைத்துப் பேசினார் விநாசியர்.

அவர் சொன்னதை ஆமோதிப்பது போல, 'ஷெல்' சத்தம் ஒன்று கேட்டது.

''சர்வதேசம் உள்ளூர் பிரச்சினை நேரத்திலை மட்டுமே.....'' இழுத்தார் மாஸ்டர். ''வேற ஒரு பிரச்சினையும் இருக்கோ'' கேட்டார் விநாசியர்.

தொடங்கினார் மாஸ்டர்.

''நெஞ்சு வலியால் யாழ்ப்பாணத்தில் இறந்த பலாலிஆசிரியர் கலாசாலை மாணவனின் சடலத்தை சொந்த ஊரான பூநகரிக்கு எடுத்துச் செல்ல முதலில் சிவப்புக் கூட்டல் குறிக்காரரின் சர்வதேசக் குழுவினரை அணுகினவையாம். யாழ்ப்பாணக் கரையிலிருந்து மிஞ்சி



## தேரடி அரட்டை

மிஞ்சிப் பார்த்தாலும் 5 மைல் குறுக்குத் தூரத்தில் இருக்கும் பூநகரிக்கு ஒரு மாணவனின் சடலத்தை, அவனது பெற்றோரிடம் ஒப்படைக்க தமது பொறுப்பில் எடுத்துச் செல்ல முடியாது என்று கைவிரிக்கப்பட்டதாம். தங்களது செயற்திட்டத்தில் இப்படிப்பட்ட வேலைகள் இடம்பெறவில்லை என்று காரணம் கூறப்பட்டதாம்''

''இறுதியாக மேலதிக கல்விப் பணிப்பாளர், தமிழர் ஆசிரியர் சங்க துணைப் பொதுச் செயலாளர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைவர், கலாசாலை சமூகத்தினர் ஆகியோரின் விடா முயற்சியால், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் துணையுடன் மீன்பிடி வள்ளம் ஒன்றில் மாணவனின் சடலம் பூநகரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இருக்கு'' மாஸ்டர் சொல்லி முடித்தார்.

''இதிலை என்ன பிரச்சினை, சர்வதேச மட்டக்காரர், தங்கடை செயற்திட்டப்படி பணியாற்றுவது ஒத்துக்கொள்ளக் கூடியதுதானே?'' கேட்டான் லோகன்.

''இப்ப பிரச்சினை அதில்லை தம்பி, சடலத்தை ஒப்படைப்பதில் முன் நின்ற உள்ளூர் மட்டத்துக்கு சிக்கல் ஏற்படுகிற மாதிரி பிரச்சினைகள் எழுப்பப்படுகுதாம்.''

''சிவப்புக் கூட்டல் குறிக்கொடியைஎடுத்துப் போனது தவறு என்று பிரச்சினைப்படுத்துகினமாம். அதுவும், சிக்கலைக் கிளப்புவதில் சர்வதேச மட்டத்தில் பணிபுரியும் எங்கடை ஆள்கள் தான் முன்நிற்கினமாம். உதவி செய்யாது போனாலும்; உபத்திரவம் செய்யாமலாவது இருக்கலாமே என்று உள்ளூர் மட்டம் கவலைப்படுகுதாம்'' முடித்தார் மாஸ்டர்.

''சிவப்புக்கூட்டல் குறிக்கொடியை சர்வதேச, உள்ளூர் அமைப்புகள் இரண்டும் பயன்படுத்தலாம்தானே எழுத்துக்கள் தானே வித்தியாசம், வெள்ளைக்காரனுடன் வேலை செய்தால் எங்கடை ஆள்களில் சிலருக்கு கண் மண் தெரியாது போல'' என்றார் விநாசியர்.

''இந்த விஷயத்தில் உதவி செய்யப்போன ஒருவர் உபத்திரவத்திலை மாட்டுப்பட்ட கதை தெரியுமோ? கேட்டான் டானியல்.

''அது என்ன கதை'' கேட்டனர் மற்றவர்கள்.

ஆரம்பித்தான் டானியல், ''மாணவனின் சடலத்தை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விமானம் மூலம் கொண்டு போய் பின்னர் அங்கிருந்து வன்னிக்குள்ளாலை பூநகரிக்கு கொண்டு போக முன்னர் திட்டமிடப்பட்டதாம்.''

''இதுக்காக மேலதிகமாக பாதுகாப்பில் செயலாற்றுபவரிடம் யாழ்ப்பாணத்தின் பச்சைக்கட்சி தமிழ் எம்.பி அனுமதி கேட்டாராம், ஏகப்பட்ட சாட்டுகள் கூறி அனுமதி மறுக்கப்பட்டதாம்.''

''இதனால் கோபமான எம்.பி உங்களைப் பற்றி தெரியாதோ என்று தொடங்கி கண்டபடி பேசிப் போட்டாராம்.''

''ஓம் அவையின்ரை தவறுகளைத் துணிவாகச் சுட்டிக் காட்ட ஒரு தமிழ்க்குரல் அவசியம்தான்'' என்றாள் சின்னாச்சி.

''சரி நேரமாகுது'' என்று கூறியபடி எழுந்தார் மாஸ்டர்.

''4 மாதமா நிம்மதியாக சந்திகளில் இருந்தவை, இப்ப ஆப்பிழுத்த குரங்கு போல அவதிப்படுகினம். இந்த நேரத்திலை நாங்கள் ஏன் வேட்டாகப் போய் மாட்டுப் படுவான்'' என்றபடி மாஸ்டருடன் நடந்தார் விநாசியர்.

தொலைவில் கற்பூரம் ஏற்றுமிடத்தில் தணிந்து கொண்டிருக்கும் அக்கினிச்சுவாலையைப் பார்த்து வணங்கிவிட்டு கடலைக் கடையை கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி

— ஏகலைவன்.

# வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் 'ட்ராப்ட்' புத்தளத்தில் கையாடல்

'' குடும்பத்தினரின் வறுமை நிலையைப் போக்க— கண்ணுக்கெட்டாத தேசத்துக்கு கடல் கடந்து சென்று— உடம்பை சாறாய்ப் பிழிந்து உழைக்கும் பணத்தை தாய் நாட் டுக்கு அனுப்பி வைக்கும் போது அதனை மோப்பம் பிடித்து கையாடல் செய்யும் துரோகி களுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் தகும்''.

இவ்வாறு மனம் வெதும்பிக் கூறினார்கள் புத்தளம் நகரிலுள்ள இரு குடும்பஸ்தர்கள்.

புத்தளத்தில் இடம் பெற்ற இரு ''ட்ராப்ட்'' மோசடிகள் குறித்து தெரிவிக்கப்படுவ தாவது:—

புத்தளம் மஸ்ஜித் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கு அவரது மருமகன் ஓமான் நாட்டிலி ருந்து 1999 ஆம் ஆண்டு பத்தாயிரம் ரூபா பெறுமதியான ''ட்ராப்ட்'' ஒன்றை புத்தளம் இலங்கை வங்கிக்கிளைக்கு அனுப்பி இருந்தார்.

பணம் அனுப்பி வைக்கப்பட்டதற்கான ரசீது மாத்திரமே இவரது கைக்குக் கிடைத்தது.

''ட்ராப்ட்'' கிடைக்கவில்லை. இது குறித்து அவர் பொலிஸிலும் இலங்கை வங்கியிலும் முறைப்பாடு செய்தார்.

எனினும் நாட்கள் நகர்ந்தனவே தவிர எந்த விதமான தகவலும் கிடைக்க வில்லை. தனது முறைப்பாட்டை குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து புலனாய்வுத் துறையினர் மேற்கொண்ட தீவிர தேடுதல் காரணமாக புத்தளத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட ''ட்ராப்ட்'' பலப்பிட்டி தொகுதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளை ஒன்றில் பணமாக மாற்றப்பட்டமை தற்போது தெரியவந்தது.

இதில் இன்னொரு விசேஷம் என்ன வென்றால் ''ட்ராப்ட்'' உரியவரின் பெயரை உடைய ஒருவராலேயே அக் காசோலை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் வங்கியின் பெயர் பொறிக்கப் பட்ட அந்தக் ''ட்ராப்ட்'' எவ்வாறு மற்றொரு வங்கிக் கிளையில் மாற்றப்பட்டது என்பது புரியாத புதிராக இருக்கும் இவ்வேளையில் மற்றொரு ''ட்ராப்ட்''டும் இதே பாணியில் மாற்றப்பட்டமை தெரிய வந்துள்ளது.

புத்தளம், ஐந்தாம் குறுக்குத் தெருவில் வதியும் ஒருவருக்கு அவரது உறவினரால் சவூதி அரேபியாவிலிருந்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ''ட்ராப்ட்'' ஒன்று 1999 இல் அனுப்பிவைக்கப்பட்டது. புத்தளம், இலங்கை வங்கிக் கிளையின் கணக்குக்கு இது அனுப்பி வைக்கப்பட்டபோதிலும் இக்''ட்ராப்ட்''டும் மோசடி செய்யப்பட்டது.

என்ன ஆச்சரியம்! இதே ''ட்ராப்ட்''டும் பலப்பிட்டித் தொகுதியில் உள்ள அதே இலங்கை வங்கிக் கிளையில் பணமாக மாற்றப்பட்டிருப்பதை புலனாய்வுத்துறையினர் கண்டு பிடித்துள்ளனர்.

இந்தப் புரியாத புதிருக்கு வங்கி நிர்வாக பதில் தருமா?

—ஏ.எஸ்.புல்கி

# நிவாரணத்தில் மோசடி அமைச்சரிடம் முறையீடு

வடபகுதியில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது புத்தளம் பகுதியில் வாழ்ந்து வருவோரில் சிலர் பொய்யான விவரங்களைக் கொடுத்து நீண்ட காலமாக விசேட திருமணக் கொடுப்பனவு மற்றும் உலர் உணவு நிவாரணம் ஆகியவற்றைப் பெற்று வருவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

புதிதாகத் திருமணம் செய்யும் தம்பதியருக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு பல்லாயிரக்கணக்கான ரூபா பணத்தை விசேட திருமண ஊக்குவிப்பு நிதியாக வழங்கி வருகின்றது.

இந்த விடயத்திலும் இடம் பெயர்ந்தவர்களில் சிலர் பொய்யான பெயர்களைப் பதிவு செய்து அமைச்சின் நிதியினை மோசடி புரிந்துள்ளதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம்.

மேலும் ஓர் இடத்தில் குடியமர்ந்து கொண்டு இன்னொரு இடத்திலும் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டு சிலர் இரட்டிப்பு மடங்கு உலர் உணவு நிவாரணம் பெற்றுவருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இந்த மோசடிகள் குறித்தும் அரச நிதி வீண்விரயம் செய்யப்படுவது குறித்தும் பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ.எம்.முஸ்தபா சமூக சேவைகள் மற்றும் மீனவர் வீடமைப்பு அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதன் பிரதிகள் பிரதி விவசாய அமைச்சர் டீ.எம்.தஸநாயக்கா, புத்தளம் மாவட்ட செயலாளர் ரவி ஜயலத் திஸநாயக்கா ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரசுக்கு பெரும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் இந்த மோசடி குறித்து விசாரணை செய்து நடவடிக்கைகள் மேற் கொள்ளுமாறு அக்கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# கற்பிட்டியில் இந்து மயானம் இல்லை

கற்பிட்டியில் வாழும் இந்து மக்களுக்கு நீண்ட காலமாக இருந்து வரும் பெரும் குறை அவர்களுக்கென்று இந்து மயானம் ஒன்று இல்லாமையாகும்.

அங்கு வாழும் பொது நலன் விரும்பிகளால் இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட் டும் அவை கைகூடாத நிலையிலேயே உள்ளன.

இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த மதத்தவர்களுக்கு அவர்களது சமய அனுஷ்டானப் படி ஈமக்கிரி யைகள் செய்வதற்கு மயான வசதி உள்ளது. ஆனால் இந்துக்களுக்கு அந்த வசதி இல்லை.

இந்த நெடுங்காலக் குறைபாட்டை உணர்ந்து சமய அமைப்புக்கள், தொண்டர் அமைப்புக்கள், புத்தி ஜீவிகள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் தகுந்த நடவடிக்கையினை மேற்கொண்டு கற்பிட்டிப் பிரதேச இந்து மக்களுக்கென்று மயானம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் என 'சுடர் ஒளி' பத்திரிகை வாயிலாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

— எம்.எச்.எம். சியாஜ்

# வேலை வழங்குவதில் மன்னாரில் பாகுபாடு

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் பலர் மன்னாரில் இன்னும் வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள்.

சமீபத்தில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்ட போது, சரியான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கும் போது, இளைஞர் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு தகுதியான இளைஞர்களை தெரிவு செய்து வேலை வழங்குமாறு மன்னார மாவட்ட இளைஞர் கழகங்களின் தலைவர் ஏ.டி.வசந்தன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

— ஜெ. பிரேம்குமார்

# பாரிய இழப்புகளுடன் அணைந்த அக்கினிச் சுவாலை நடவடிக்கை!

சுமார் மூன்று மாதங்களுக்கு மேலாக வடபகுதிப்போர் முனையில் நிலவி வந்த அமைதி கடந்த வாரம் வெடித்த பாரிய சமருடன் முடிவுக்கு வந்தது.

தென்மராட்சிக்குத் தெற்கே எழுதுமட்டுவாழ், முகமாலை ஆகிய பகுதிகளில் நிலை கொண்டிருந்த படையினர் புலிகளின் யுத்த நிறுத்தம் முடிவடைந்த கையோடு ''அக்கினிச் சுவாலை — 1'' என்னும் பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றைப் பெருத்த எடுப்பில் ஆரம்பித்தனர்.

இலங்கை இராணுவத்தின் 55ஆவது பிரிவு படையணிகளும் 53ஆவது பிரிவு படையணிகளும் இந்த இராணுவ நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்டன.

வட பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவின் நேரடிக் கண்காணிப்பு—

55ஆம் பிரிவின் பிரதான கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக் கோனினதும், 53 ஆவது பிரிவின் பிரதான கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் சிவலி வணிகசேகரவினதும் வழி நடத்தல்—

ஆகியவற்றின் கீழ் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

கிளாலி— நாகர்கோவில் — எழுதுமட்டுவாழ் பகுதிகளில் இருந்து படையினர் 25ஆம் திகதி புதன் அதிகாலை சுமார் 1.45 மணியளவில் ஒரே சமயத்தில் பளையை நோக்கி முன்னேற முயன்றனர்.

மும்முனைகளாலும் முன்னேற முயன்ற படையினர் மீது புலிகளின் பீரங்கிப் படையினர் கடும் தாக்குதலை நடத்தினர்.

படையினருக்கு உதவியாக விமானப் படையினரின் நவீன இஸ்ரேலியத் தயாரிப்பு கிபீர் மற்றும், ரஷ்யத் தயாரிப்பு மிக்—27 ரக மீயொலித் தாரைக்குண்டு வீச்சு ஜெட் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின.

முகமாலைக்கு அப்பால் புலிகளின் நிலைகள் என்று சந்தேகிக்கப்படும் நிலைகள் மீது விமானப்படை விமானங்கள் பலதடவைகள் குண்டுகளை வீசின.

48 மணித்தியாலங்களில் சுமார் 80க்கும் மேற்பட்ட தடவைகள் இந்த விமானங்கள் குண்டு வீச்சுக்களில் ஈடுபட்டன.

இதேவேளை கடல்மார்க்கமாக புலிகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவிகளையும் வழங்கல்களையும் தடுப்பதற்காகவும்—

கடல் மார்க்கமாக புலிகளின் புதிய படையணிகள் களமிறங்குவதைத் தடுப்பதற்காகவும் —

டோரா அதிவேக தாக்குதல் படகுகள் நாகர் கோவிலுக்கும், வெற்றிலைக் கேணிக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் கடும் காவல் ரோந்துக்கடமையில் ஈடுபடுத்தப்பட்டன.

மொத்தத்தில் இது ஒரு கூட்டுப்படை நடவடிக்கை. அத்துடன் படைத்தரப்பு தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து, நன்கு திட்டமிட்டு மேற்கொண்ட ஓர் இராணுவ நடவடிக்கையாக இது கருதப்படுகிறது.

உயர் படைத் தரப்புத் தகவல்களின்படி, 26ஆம் திகதி வியாழக்கிழமை புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றைக் கிளாலி— நாகர்கோவில் — எழுதுமட்டுவாழ் இராணுவ கடற்படை கூட்டு முகாம்கள் மீது நடத்த இருப்பதாகப் படையினருக்கு புலனாய்வுத் துறை அறிக்கைகள் கிடைத்திருந்தன என்று கூறப்படுகிறது.





புலிகளின் பாரிய அழித்தொழிப்பில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே படையினர் முந்திக்கொண்டு முன்னெச்சரிக்கைத் தாக்குதலாக அக்கினிச் சுவாலை —1 இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படை நடவடிக்கையின் ஆரம்பத்தில் புலிகள் எதிர்ப்புக் காட்டினர். எனினும் பாரியளவில் கனரக தாங்கிகள் மற்றும் கவச வாகனங்களின் துணையுடன் பல்லாயிரக் கணக்கில் படையினர் முன்னேறினர்.

படையினர் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை பளை நோக்கிய பாதையில் முன்னேறியதும் ஆட்டிலறி மோட்டார் மற்றும் பல்குழல் ரொக்கெட் தாக்குதல்களில் புலிகள் மூர்க்கத்தனமாக ஈடுபட்டனர்.

களமுனைத் தகவல்களின்படி புலிகளின் ஆட்டிலறிப் பிரிவு தளபதி கேணல் பானு தலைமையிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பானுவுக்கு உதவியாக லெப். கேணல் லோறன்ஸ் தாக்குதல்களை வழிநடத்தினார்.


படையினரின் நவீன ரி—55 ரக டாங்கிகளில் ஒன்று.

அக்கினிச் சுவாலை ஆரம்பிக்கப்பட்ட சில மணித்தியாலங்களுக்குப் பின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவும் கூட்டுப் படை தலைமைத் தளபதி ஜெனரல் ரொஹான் தலுவத்தையும், விசேட விமானப்படை விமானம் மூலம் பலாலி விரைந்தனர்.

அங்கு அவர்கள் தாக்குதல்களை நேரடியாகவே மேற்பார்வை செய்து கொண்டிருந்தனர்.

நண்பகலில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடியும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும் அங்கு சென்றனர்.

பிற்பகல் சுமார் இரண்டு மணியளவில் யாழ்—கண்டி ஏ—9 பிரதான பாதையில்— எழுதுமட்டுவாழில் இருந்து பளையை நோக்கிய பாதையில்— சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமும் தெற்கே சமாந்திரமாகச் செல்லும் பழைய கண்டி வீதியில் சுமார் ஒன்றே முக்கால் கிலோ மீற்றர் நீளம் கொண்ட எட்டு சதுர கிலோ மீற்றர் பரப்பளவை படையினர் கைப்பற்றியதாக தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் மிகப்பலமான பிரதேசத்தைக் கைப்பற்றி அங்கு காணப்பட்ட அவர்களின் பாதுகாப்பு நிலைகளையும் பதுங்கு குழிகளையும் படையினர் அழித்தனர்.

மேலும் முன்னேற முயன்ற படையினரை புலிகள் தமது தாக்குதல்களின் மூலம் தடுத்து நிறுத்தினர்.

இராணுவத்தினர் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளைப் பலப்படுத்த முடியாதவாறு ஆட்டிலறி மற்றும் மோட்டார் தாக்குதல்களில் புலிகள் ஈடுபட்டனர்.

புலிகள் இம்முறை பாரியளவில் பல்குழல் ராக்கெட் தாக்குதல்களில் ஈடுபட்டனர் எனப் படையினர் கூறுகின்றனர். இவை புலிகளிடம் புதிதாக வந்தடைந்திருக்கும் ஆயுதங்களில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. புலிகளின் பல்குழல் ரொக்கட் லோஞ்சர்கள் 62 சுடுகுழாய்களைக் கொண்டவை எனப் படைத்தரப்புக் கூறுகின்றது.

ஆங்காங்கே காணப்பட்ட கண்ணி வெடிகளையும் பொறி வெடிகளையும் அகற்றிய படையினர், சுமார் 2 கி.மீ. தூரம் வரை முன்னேறிய போதும் மிகவும் ஒடுக்கமான பிரதேசத்தினூடாகவும் பிரதான தெருக்களின் வழியாகவுமே நகர்வினை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

புலிகள் கடும் தாக்குதலை திடீரென ஆரம்பிக்கவே படையினர் நிலைகுலைந்தனர். சிதறியோடிய படையினர் பலர் புலிகளின் பொறி வெடியாலும் மிதிவெடியிலும் சிக்குண்டு பெரும் இழப்புகளைச் சந்தித்தனர்.

புலிகளின் ஆட்டிலறித் தாக்குதல்கள் குறைந்த பாடில்லை. நிமிடத்திற்கு சுமார் 10க்கும் மேற்பட்ட ஷெல்கள் படையினரின் நிலை மீது வீழ்ந்து கொண்டிருந்தன. இரவிரவாக இருதரப்பினரும் பரஸ்பர ஷெல் வீச்சுக்களில் ஈடுபட்டனர்.

புதன்கிழமை பின்னிரவுப் பொழுதில் புலிகள் இரண்டு தடவைகள் மனித அலை வடிவிலான (Human Wave) தாக்குதல்களை நடத்தி படையினரை பின்வாங்கச் செய்ய முயன்றனர்.

இதனால் இருதரப்பிலும் இறந்தவர்களின் எண்ணிக்கையும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தன.

இரண்டாவது நாளான வியாழக் கிழமையும் ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன, படையினர் முன்னேறும் முயற்சி எதிலும் ஈடுபடவில்லை.

வியாழக்கிழமை இரவும் புலிகள் இரண்டு தடவைகள் தாக்குதலை மேற்கொண்டு படையினரைப் பின்தள்ள முயன்றனர்.

புலிகளின் ஆட்டிலறித் தாக்குதல்களால் காயமடையும் படையினரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இறந்த மற்றும் காயமடைந்த படையினருக்கு பிரதியீடாகக் கொழும்பில் இருந்து இரண்டு தடவைகளுக்கு மேலாக விமானப் படையின் ஹேக்குலிஸ் — C — 130 ரக சரக்கு விமானம் பயன்படுத்தப்பட்டது. அதே விமானத்தில் காயமடைந்த படை யினர் கொழும்புக்கு எடுத்து வரப்பட்டனர்.

புலனாய்வுத்துறை அறிக்கை ஒன்றின் படி புலிகளின் ஆட்டிலறி புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த தமிழரசி, எங்கெங்கு அதிகமாக படையினர் நிலைகொண்டிருக்கிறார்கள் என்பதை யுத்த முனையில் இருந்து வோக்கி டோக்கி மூலம் புலிகளுக்கு அறிவித்துக் கொண்டிருந்ததாக அறியப்படுகிறது.

தமது தரப்பில் எதிர்பாராத இழப்புக்களை சந்தித்த படையினர் முன்னேறிய நிலைகளில் இருந்து மீண்டும் பழைய நிலைகளுக்குத் திரும்புவதென முடிவெடுத்தனர்.

வெள்ளிக்கிழமை மதியநேரம் படையினர் பழைய காவல் அரண்களுக்குத் திரும்பினர்.

இராணுவத் தரப்பு அறிக்கைகளின் படி 5 அதிகாரிகள் உட்பட 221 படை வீரர்கள் கொல்லப்பட்டும் சுமார் 12 அதிகாரிகள் உட்பட 800ற்கு மேற்பட்ட வீரர்கள் காயமடைந்தும் இருக்கிறார்கள்.

அதேவேளை புலிகள் தரப்பில் 190 பேர் கொல்லப்பட்டும் 400ற்கு மேற்பட்டோர் காயமடைந்தும் இருக்கிறார்கள் என்று இராணுவத்தினர் கூறுகின்றனர்.

ஆனால் புலிகளோ தமது தரப்பில் 75 பேர் கொல்லப்பட்டதாகவும் படையினர் தரப்பில் 400 பேர் கொல்லப்பட்டும் 1600 பேர் வரை காயமடைந்தும் இருக்கிறார்கள் என்று கூறுகின்றனர். அத்துடன் 57 படையினரின் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக புலிகள் கையளித்துள்ளனர்.

இதேவேளை இறந்த எட்டுப் புலிகளின் சடலங்கள் செவ்வாய் இரவு யாழ் வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டன.

மொத்தத்தில் அக்கினி சுவாலை இராணுவ நடவடிக்கை படைத்தரப்பில் சுமார் 1500 ற்கும் மேற்பட்டோரை யுத்த களத்திலிருந்து வெளியேற்றியிருக்கிறது. (Out of the Battle Field) புலிகள் தரப்பிட்லும் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் இருக்கிறார்கள். ஆனாலும் புலிகளுடன் ஒப்பிடும்போது படையினருக்கு அக்கினி சுவாலை—1 ஒரு பலத்த இழப்பு ஆகும். அத்துடன் படையினர் தமது இலக்கை எட்ட முடியாமல் பழைய நிலைக்கே திரும்பியமை மாபெரும் தோல்வி என்றே கூறலாம்.

கடந்த நான்கு மாதங்களாகப் புலிகள் அரசையும் அரசு புலிகளையும் மாறி மாறிக் குற்றம் சாட்டி வந்தனர். இருதரப்பினருமே தம்மைப் பலப்படுத்துவதிலேயே அதிக கவனம் செலுத்தி வந்தனர்.

அத்துடன் புலிகள் இம்முறை யுத்த நிறுத்தத்தை நீடிக்க மாட்டார்கள் என்று முன்கூட்டியே ஊகித்த படைத்தரப்பு பாரியதொரு படை நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஏற்கனவே திட்டமிட்டிருந்தது.

அதுமட்டுமின்றி புலிகளின் தயார்படுத்தல்கள் பற்றியும் ஆயுதக்கொள்வனவுகள் பற்றியும் நன்கு அறிந்து வைத்துக் கொண்டே தாக்குதலை அரசு தயார்படுத்தியது.

இருந்தும் தாக்குதல் தோல்வியில் முடிந்திருக்கிறது.


தலைநகரில்

Maths / Science & Technology
O/L 2001, O/L 2002

| Subject | O/L 2001 | Grade 10 |
|---|---|---|
| Maths | Fri 5.00-7.00 | Fri 3.00-5.00 |
| Science | Thu 5.00-7.00 | Thu 3.00-5.00 |

விரிவுரை W.L.Rajaratnam

EPI

316, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி:075-516790
(St. Peters பஸ்தரிப்பு முன்னால்)

மலைநாட்டில்

Maths / Science & Technology
O/L 2001, O/L 2002, Grade 9

| Subject | O/L 2001 | O/L 2002 | Grade 9 |
|---|---|---|---|
| Maths | Sat 1.30-330 | Sun 10:30-12.30 | Mon / Tue 4.45-5.30 |
| Science | Sat 11.30-130 | Sun 8.30-10.30 | Mon / Tue 4.45-5.30 |

விரிவுரை W.L.Rajaratnam

EPI

87 / 1A, கட்டுகஸ்தோட்ட வீதி,
கண்டி. தொலைபேசி:072-500475
(வித்தியார்த்த கல்லூரி முன்னால்)

அவசர திருத்தங்கள்






Guaranteed repair & service by trained technicians

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

உங்கள் அபிமான 'சுடர் ஒளி'யில்
உள்ளத்தை உருக்கும் சம்பவங்களுடன்
நெஞ்சம் நிறைந்த தொடர்கதை
வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

அவசர திருத்தங்கள்






Guaranteed repair & service by trained technicians

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

சுடர் ஒளி

6 மே. 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com

# அணைந்து விட்ட அக்கினிச்சுவாலை

ஒரு வருடத்துக்கு முன்னர் ஆனையிறவைப் புலிகளிடம் பறிகொடுத்ததன் பின்னர் அரசாங்கம் ஆனையிறவுச் சிந்தனையிலேயே இருந்து வருகிறது.

முதலில் பளையில் நிலை கொள்வது. அப்புறம் அங்கிருந்து ஆனையிறவைப் பிடிப்பது. இந்த நோக்கிலேயே அரச படைகள் அக்கினிச் சுவாலை —1 என்ற பெயரில் கடந்த வாரம் பரந்த அளவில் தாக்குதலை ஆரம்பித்தன.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நல்ல சூழலை ஏற்படுத்தும் வகையில் ஒரு தலைப்பட்சமாக 4 மாதங்கள் யுத்த நிறுத்தத்தை அனுஷ்டித்து வந்த புலிகள் சும்மா இருந்தார்களா? இல்லை.

முன்னேறி வந்த படைகளை நோக்கி எதிர்த்தாக்குதல் நடத்தினார்கள்.

தரைப்படையின் அகோரமான ஆட்டிலறி, மோட்டார் தாக்குதல்கள், விமானப்படையின் சரமாரியான குண்டு வீச்சுக்கள், கடற்படையின் பீரங்கிச் சீறல்கள் — இவற்றிற்கெல்லாம் ஈடுகொடுத்து புலிகள் ஆக்ரோஷமாக எதிர்த் தாக்குதல் நடத்தினார்கள்.

படையினர் தாம் புறப்பட்ட இடங்களுக்கே திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று.

மொத்தத்தில் அக்கினிச் சுவாலை —1 அணைந்துவிட்டது.

அதற்கு முன்னர் இரு தரப்பிலும் அதிக உயிர் இழப்புகள். படுகாயமடைந்த பலர் உயிராபத்தை எதிர்நோக்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

நட்டம் எந்தத் தரப்பில் ஏற்பட்டாலும் அது நாட்டுக்கு ஏற்பட்ட நட்டம்தான்.

ஆக, நாம் நாட்டை நேசிக்கிறோம், நாட்டு மக்களை நேசிக்கிறோம் என்றெல்லாம் கூறி வருபவர்கள், இந்தக் கட்டத்திலாவது தெளிவாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரக்கூடாதா?

ஒரு சிலரின் குறுகிய நலன்களுக்காகவும் சுயகௌரவத்துக்காகவும் மனித உயிர்கள் பலியாவதா?

போரினால் பிரச்சினை தீராது, நல்லெண்ணத்துடன் கூடிப் பேசித்தான் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று வெறுமனே சொல்லிக்கொண்டிருந்தால் போதுமா?

பேச்சுவார்த்தைக்கான கதவுகள் எப்பொழுதும் திறந்தே இருக்கின்றன என்று ஓயாமல் கூறிவிட்டால் எல்லாம் சரியாகி விடுமா?

உள்ளே போவதற்கு வழி சரியில்லாவிட்டால் கதவு திறந்திருந்தும் என்ன பயன்?

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான வழியைத் திறந்துவிடும் முயற்சியில் நோர்வே அரசாங்கம் ஈடுபட்டு இருக்கிறது. நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நம்பிக்கையுடன் சுறுசுறுப்பாகத்தான் இருக்கிறார்.

அவருடைய முயற்சிகளை முன்னேற முடியாதபடி முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு இருந்தால் எப்படி?

சொல்ஹெய்மின் நோர்வே அரசு சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நல்ல சூழலை ஏற்படுத்துவதற்காகத் தயாரித்த புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி புலிகள் தென்னிலங்கையில் தாக்குதல்களை நடத்தாமல் இருந்தார்கள்.

ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தையும் அறிவித்து, நான்கு மாதங்கள் அதைக் கடைப்பிடித்தும் வந்தார்கள்!

அரசு அந்த உடன்படிக்கையின்படி எதையும் சரிவரச் செய்யவில்லை, மாறாக உடன்படிக்கையின் பெயரையும் நோக்கத்தையும் மாற்றியது. யுத்த நிறுத்தம் செய்ய முடியாது என்று கூறி வருகிறது.

புலிகள் நிபந்தனைகள் விதித்து வருவதாகவும் அரசு குற்றம் சாட்டுகிறது.

''நாம் சமாதானப் பேச்சுக்கான முன்தேவைகள் என்று குறிப்பிடுவனவற்றை, எல்லாம் முன்நிபந்தனைகள் என்கிறது அரசு. அப்படியானால் யுத்த நிறுத்தம் இல்லாமலே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அரசு கூறுவது நிபந்தனை இல்லையா'' என்று புலிகள் கேட்கிறார்கள்.

சண்டையும் சமாதானமும் இருளும் ஒளியும் போன்றவை. இரண்டும் ஒரே நேரத்தில் இருக்க முடியாதவை. சண்டை பிடித்துக் கொண்டு உண்மையான சமாதானம் பேச முடியாது என்கிறார்கள் புலிகள்.

புலிகள் ஏமாற்றுக்காரர்கள். முன்னர் ஏமாற்றியவர்கள். அவர்களை நம்ப முடியாது என்கிறது அரசு. தான் சண்டையை நிறுத்தினால், புலிகள் தம்மை நன்றாகப் பலப்படுத்திக் கொள்வார்கள் என்று அரசு சந்தேகிக்கிறது.

அரசு யுத்த நிறுத்தம் செய்யாமல் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தபோதே, புலிகள் பலமான எதிர்த்தாக்குதல் நடத்தி அக்கினிச் சுவாலையை அணைத்தார்களே, அது எப்படி? எண்ணிப்பார்க்க வேண்டும்.

மொத்தத்தில், சமாதானம் தூர விலகிச் செல்கிறது. சண்டைதான் தொண்டைக் குழியைப் பிடிக்கிறது.

# தவறான கணக்கினால் குறிதவறிய தாக்குதல்!

கடந்த வருட ஆனையிறவுப் போரைப் போன்று இந்த வருடப் பளைப் போரும் ஈழப்போர் வரலாற்றில் முக்கிய இடம் பெறுகிறது.

ஆனையிறவுப் போரைத் தொடக்கியவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள்.

அந்தப்போரில், படையினர் வசமிருந்த ஆனையிறவைப் புலிகள் கைப்பற்றினார்கள். படையினர் எதிர்த்துப் போர் புரிய முடியாமல் யாழ். நோக்கிப் பின்வாங்கிச் சென்றனர்.

பளைப்போரை அக்கினிச்சுவாலை —1 என்ற பெயரில் ஆரம்பித்தனர் படையினர்.

பளையை முதலில் பிடித்துவிட்டு அங்கிருந்து பின்னர் முன்னேறி ஆனையிறவைக் கைப்பற்றுவதே படையினரின் நோக்கமாக இருந்தது.

ஆனால் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை.

புலிகளின் ஆக்ரோஷமான எதிர்த் தாக்குதலால் படையினரால் அதிக தூரம் முன்னேறிச் செல்ல முடியாமல் போய்விட்டது. மீண்டும் ஆரம்பித்த இடத்துக்கே திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

இதற்குப் படைத் தரப்பில் கொடுக்கப்பட்ட விலை அவர்களின் தகவல் படி 221 படை வீரர்களின் உயிர்கள். எண்ணூறுக்கும் அதிகமானோர் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களில் பலர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.



புலிகளின் கனரக ஆயுதக் குழு ஒன்று களம் நோக்கி நகருகிறது

புலிகள் தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இறந்தோர், மற்றும் காயமடைந்தோரின் எண்ணிக்கை போரின் கொடூரத்தைக் காட்டுமே தவிர போரின் வெற்றி — தோல்விக்கு அது எடுத்துக்காட்டாக அமையாது.

மொத்தத்தில் அக்கினிச் சுவாலை —1 படையினரைத் தமது நிலைபற்றிச் சிந்திக்கவைத்திருக்கிறது.

படையினர் என்றைக்கு ஆனையிறவை இழந்தார்களோ அன்றே மீண்டும் ஆனையிறவைக் கைப்பற்றுவது என்று அவர்கள் உறுதி பூண்டார்கள்.

படையினரின் மேலிடம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.

ஆனையிறவுப் போரின் போது தம்மிடம் ஆள்பலம் இருந்ததே தவிர நவீன ஆயுத பலம் இருக்கவில்லை என்று படைத்தரப்பு அரசிடம் தெரிவித்தது.

அதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன.

தேவையான நவீன யுத்த உபகரணங்கள் எல்லாம் கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டி உலக நாடுகள் பலவற்றில் இருந்தும் பெறப்பட்டன.

படையினருக்குப் புதிதாகப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

அரசாங்க அல்லது அரசியல் தலையீடு எதுவுமின்றி தாக்குதல் நடவடிக்கையைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்குப் படைத்தலைமைக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

படைத்தலைமைக்கு ஜனாதிபதி ஓர் உறுதிமொழியையும் அளித்திருந்தார். அதாவது அரசு எக்காரணம் கொண்டும் யுத்தநிறுத்தத்தை அறிவிக்காது. படைத்தலைமை தங்குதடையின்றித் தாக்குதல் நடவடிக்கையில் இறங்கலாம் என்பதே அந்த உறுதி மொழி.

தவிரவும் தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்து எவ்வளவு காலத்திற்குள் வெற்றியீட்ட வேண்டும் என்று அரசு காலக்கெடுவும் விதிக்கவில்லை.

இப்படியான மிகவும் சுதந்திரமான சூழ்நிலையில்தான் படைத்தலைமை அக்கினிச்சுவாலை —1 தாக்குதல் நடவடிக்கையை நீண்டகாலமாகத் திட்டமிட்டு இறுதியில் கடந்த 25ஆம் திகதி அதிகாலை ஆரம்பித்தது.

ஆரம்பித்த நேரத்திலும் ஒரு விசேஷம் இருக்கிறது. புலிகள் தங்களுடைய ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை நான்கு மாதங்களின் பின்னர் இனி நீடிப்பதில்லை என்று அறிவித்த கையோடு படைத்தலைமை அக்கினிச் சுவாலை 1 தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்துவிட்டது.

புலிகள் யுத்தநிறுத்தத்தை அனுஷ்டித்து வந்த காலத்தில் படையினர் ஆங்காங்கே புலிகள் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

புலிகள் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்களே தவிர பதில் தாக்குதலில் இறங்கவில்லை.

சில இடங்களில் அவர்கள் தற்பாதுகாப்பு நடவடிக்கையில் கூட இறங்காமல் தாம் இருந்த இடங்களிலிருந்து வெளியேறினார்கள்.

இந்த வகையில் அவர்கள் யுத்தநிறுத்த காலத்தில் படையினரின் தாக்குதலின் விளைவாகச் சில போராளிகளை இழந்துவிட்டார்கள்.

புலிகள் பலவீனம் அடைந்திருப்பதாலேயே, அந்தப் பலவீனத்தை மறைப்பதற்கும், தாம் சமாதானப் பிரியர்கள் என்று ''ஷோ'' காட்டி சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவித்தார்கள் என்று அரசு சதா கூறிவந்தது.

படையினரின் தாக்குதல்களின் போது புலிகள் சில இடங்களிலிருந்து வெளியேறியதும் தங்கள் போராளிகள் சிலரை இழந்த நிலையிலும் திரும்பித் தாக்குதல் நடத்தாமல் இருந்ததும் அரசு கூறிவந்ததை உறுதிப்படுத்துவதுபோல அமைந்துவிட்டன.

உண்மையில் புலிகள் பலவீனமாகத்தான் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையிலேயே படைத்தலைமை திடுதிப்பென்று 25ஆம் திகதி அக்கினிச் சுவாலை —1 தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்தது.

தாக்குதலை ஆரம்பித்த பிறகு புலிகளின் அகோர எதிர்த் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத நிலைமை படையினருக்கு ஏற்பட்டு பின்வாங்க வேண்டிய சூழ்நிலை வந்த போதுதான் தமது கணிப்பு தவறானது என்பதும் தாம் அறியாமல் காலை வைத்து விட்டார்கள் என்பதும் படைத்தலைமைக்குப் புரிந்தன. என்ன செய்வது? அது காலம் கடந்த ஞானம் ஆகிவிட்டது. அதற்கிடையில் இழப்புகள் ஏராளம் ஏற்பட்டுவிட்டன.

இது யார் செய்த தவறு? எங்கே பிழை நடந்தது?' என்பன குறித்து இப்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

அரசு யுத்தநிறுத்தம் செய்யாதபோதும் புலிகள் தங்கள் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த காலத்தில் தங்களை வெகுவாகப் பலப்படுத்திக்கொண்டார்கள்.

புதிதாக நவீன ஆயுதங்களைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டார்கள்.

போராளிகளைப் புதிதாகச் சேர்த்து அவர்களுக்குத் திறமான பயிற்சியும் அளித்துவிட்டார்கள் என்று படைத்தலைமை இப்போது கூறுகிறது.

இந்த யுத்தத்தில் புலிகள் 62 குழல்கள் கொண்ட பல்குழல் ரொக்கட் லோஞ்சர்களைப் பயன்படுத்தி உக்கிரமாகப் போர் புரிந்தார்கள் என்று படைத்தரப்பு வர்ணனையும் செய்கிறது.

புலிகள் தாம் ஆனையிறவைக் கைப்பற்றிய பொழுதே படையினர் ஆனையிறவை மீட்பதற்குப் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவார்கள் என்று அறிந்து அதற்குத் தயாராகவே இருந்தார்கள்.

தாங்கள் எதிர்பார்த்திருந்த தாக்குதல் தொடங்கியதும் புலிகள் அதில் தங்கள் கைவரிசையைக் காட்டிவிட்டார்கள்.

யாராக இருந்தாலும் ஆழமறியாமல் கால் வைத்தால் அவதிதான். என்ன செய்வது?

# சொல்ஹெய்மின் கொழும்பு விஜயம்: குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டம்!



சொல்ஹெய்ம்

அக்கினிச் சுவாலை —1 இன் போர்ச்சூடு ஆறு முன்னரே நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்து சேர்ந்தார்.

நடந்து முடிந்த போர், சமாதான முயற்சிகளுக்குப் பெரும் பின்னடைவு என்று பேட்டி ஒன்றில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துவிட்டே அவர் வந்து சேர்ந்தார்.

லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்துடன் பேசி எல்லா விடயங்களையும் மனதில் பதித்துக் கொண்டே சொல்ஹெய்ம் கொழும்பு வந்தார்.

புலிகள் என்ன சொல்லி அனுப்பினார்கள்?

புதிதாக ஒன்றும் இல்லை. எல்லாம் முன்னர் சொன்னவைதான்.

அவை?

- பேச்சுவார்த்தை நடப்பதற்கு இலங்கை அரச புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்.
- யுத்த நிறுத்தம் செய்து விட்டே பேச்சுவார்த்தை ஒன்றைத் தொடங்கவேண்டும்.
- எதுவித கட்டுப்பாடும் இன்றி எரிபொருள், சிமெந்து உட்பட எல்லாப் பொருட்களையும் தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்ப வேண்டும்.
- புரிந்துணர்வு உடன்படிக்கையின் பெயரையும் நோக்கத்தையும் மாற்றாமல் அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவற்றை இலங்கை அரசிடம் சொல்ஹெய்ம் தெரிவித்து அதன் இணக்கத்தைப் பெற வேண்டும். அவ்வளவுதான். இது லண்டனிலிருந்து கிடைத்த தகவல்.

''இணங்க அரசாங்கம் மறுத்தால்...?''

''பிணக்குத்தான். எதற்கும் சொல்ஹெய்ம் இலங்கை அரசுடன் பேசிவிட்டு வந்து சொல்லட்டுமேன்! எங்களைப் பொறுத்தவரையில் சமாதானம் என்றால் சமாதானம். சண்டை என்றால் சண்டை. எதற்கும் தயார். எத்தனை அக்கினிச் சுவாலைகளையும் அணைக்க எங்களால் முடியும்'' இப்படித் திடமான பதில் கிடைத்தது.

சொல்ஹெய்ம் உண்மையிலேயே மிகவும் பொறுமைசாலி. இலங்கை அரசுத் தலைவர்களிடம் திரும்பத் திரும்ப ஒரே விடயத்தை எடுத்து ஓதி வருகிறார். அவர்கள் எல்லாவற்றையும் ஊதித் தள்ளிவிடுகிறார்கள்.

அதிலும் அக்கினி சுவாலை—1 இன் தோல்விக்குப் பிறகு படி இறங்கினால் அரசின் கௌரவம் என்ன ஆகும்?

அதனால் பழைய இறுக்கம் இப்போதும் காட்டப்படுகிறது.

சொல்ஹெய்ம் பாவம்! குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டம் நடத்துகிறார்.

சமாதானப் பேச்சு வார்த்தை என்று சொல்லிக்கொண்டு ஏட்டிக்குப் போட்டியாக இருதரப்பும் போருக்குத் தம்மைத் தயார் செய்துகொண்டு இருந்தால் சொல்ஹெய்ம்தான் என்ன செய்வார்?

# ஒருசாராருக்கு அள்ளிக்கொடுப்பு மறுசாராருக்குக் கைவிரிப்பு!

## வவுனியாவில் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டோர் நஷ்ட ஈட்டுக்கு அலைகின்றனர்

கடமையிலிருக்கும் போது படைவீரர் ஒருவர் இறந்துவிட்டால் அவருக்கு மரணப் பணிக்கொடை, நட்டஈடு, 55 வயதுவரை சம்பளம், அதன் பின் ஓய்வூதியம் என்று அந்தப் படை வீரரின் குடும்பத்துக்கு, வேண்டாம் வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு பணத்தை வாரி வாரி வழங்குகிறது அரசு.

இதேபோன்று தென்பகுதியில் உள்ள ஓர் அரசாங்க ஊழியர் கடமை நேரத்தில் இறந்தால் அவரது வீடு தேடிப்போய் இவ்வாறான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

ஆனால் வடபகுதியில் தமிழர் வாழும் பகுதிகளில் கடமை நேரத்தில் குண்டு வெடிப்பில் சிக்கி இரு அரசாங்க ஊழியர்கள் இறந்தும், 8 பேர் காயமடைந்துமுள்ளனர்.

ஆயினும் சம்பவம் நடந்து ஒரு வருடத்துக்கு மேல் கழிந்துவிட்ட நிலையிலும் இதுவரை அவர்களது குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இரு அரச ஊழியர்கள் இறந்து, எட்டு ஊழியர்கள் காயமடைந்த சம்பவம் வவுனியா தபால் நிலையத்தில் கடந்த வருடம் ஜனவரி 27ஆம் திகதி நிகழ்ந்த குண்டுவெடிப்பிலேயே இடம்பெற்றது.

இவர்களுடன் 20க்கு மேற்பட்ட படையினரும் சிவிலியன்களும் இறந்தும் காயமடைந்தும் போயினர்.

இதில் கொடுமை என்னவென்றால் இவர்களில் படை வீரர்களுக்கு அரசும் சிவிலியன்களுக்கு பொது நிறுவனங்களும் கொடுப்பனவுகளை வழங்கித் தீர்த்துவிட்ட நிலையில் — குண்டு வெடித்த தபால் நிலையத்தில் கடமையிலிருந்த தபால் நிலைய ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் நிவாரணம் எதுவுமின்றிப் பரிதவித்துப் போயிருப்பதுதான்.



வவுனியா தபால் நிலையம்

பாதிக்கப்பட்ட தபால் ஊழியர்கள் அனைவரும் தமிழர்கள் என்ற காரணத்தாலேயே இவ்வாறு அலைக்கழிக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

இவர்களை அலைக்கழிப்பவர்களும் தமிழ் அதிகாரிகள் என்பதுதான் ஜீரணிக்க முடியாத உண்மை.

இதுபற்றி எமது விசாரணைகளை மேற்கொண்டோம். நெஞ்சு ரணமாக வலித்தது.

தற்போதைய அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களைத் தெரிந்த தமிழ் அதிகாரிகளே இவ்வாறான அலைச்சல்களை ஏற்படுத்துவதை அறிந்து ஆத்திரமாக இருந்தது.

இனி பாதிக்கப்பட்டவர்களின் பரிதாபக் கதையைப் பார்ப்போம்.

சம்பவத்தில் காயமடைந்த தபால் ஊழியர் ஒருவர் சொன்னார்.

''வவுனியா தபால் நிலையத்தில் குண்டுவெடித்து ஒன்றேகால் வருடங்கள் ஓடிவிட்டன. எமது தபால் நிலைய ஊழியர்கள் இரண்டு பேர் அதில் கொல்லப்பட்டனர். பாஸ்கரலிங்கம் என்ற தபாலதிபரும், சந்திரசேகரம் என்ற சிற்றூழியருமே கொல்லப்பட்டவர்கள்.''

''இவர்களில் பாஸ்கரலிங்கத்தின் மனைவி, பிள்ளைகள் யாழ்ப்பாணம், கரணவாய் பகுதியிலே இருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி வவுனியாவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாஸ்கரலிங்கத்தின் கொடுப்பனவுகள் ஏதாவது வந்ததா என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.''

''சந்திரசேகரத்தின் வீடு வவுனியாவில் உள்ளது. அவரது 70 வயதான தந்தை தினமும் வந்து ஏதாவது நல்ல சேதியுண்டா என விசாரித்துவிட்டுச் செல்கிறார்.''

''அடுத்து சம்பவத்தில் காயப்பட்ட ஊழியர்கள் நான் உட்பட 8 பேர் இருக்கிறோம்.''

''எமக்கு இதுவரை எந்தச் சலுகையும் வழங்கப்படவில்லை. காயப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாட்களுக்கு லீவு கூட எமக்கு வழங்கப்படவில்லை. நட்டஈடோ வேறெந்தக் கொடுப்பனவோ எமக்கு வழங்கப்படவில்லை.''

''இவ்வாறான விபத்துகள் ஏற்படும்போது உதவுமென நம்பி எமது தொழிற்சங்கம் ஊடாக 'அக்ரஹார' என்ற காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்து மாதாந்தப் பணம் கட்டிவந்தோம்.''

''ஆனால் அந்தத் திட்டத்தில்கூட எமக்கு நல்ல பலன் கிடைக்கவில்லை. எமது சிகிச்சைக்கான செலவுகளை பற்றுச்சீட்டு இணைப்புகளுடன் வழங்கியிருந்தோம். ஆனால் அவர்கள் ஆளுக்கு இரண்டாயிரம் ரூபா வீதம் அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

''காயப்பட்ட எமக்கு நட்டஈடு தாருங்கள் என்று கேட்டுக்கொண்டே இருக்கிறோம். வவுனியாவில் உள்ள ஓர் அதிகாரி, அப்படி ஒன்றும் வழங்க முடியாது என்கிறார். ஆனால் இன்னொரு அதிகாரி கொடுப்பனவுகள் வழங்கப்படுமென்கிறார். அவரது கதையைக் கேட்டு பல்வேறு ஆவணங்களையும் சேர்த்து அனுப்பினோம்.''

''ஆனால் தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள வடபிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்திருக்கிறது. இவர்கள் அனைவரும் குண்டுவெடிப்பில்தான் காயமடைந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தும் கடிதங்களை அனுப்பும்படி கோரியிருக்கிறார்கள்.''

''இவ்வளவு காலத்தின் பின்பு நாம் அவ்வாறான உறுதிப்படுத்தல் கடிதங்களை எங்கே தேடுவது — அதேவேளை காயமடைந்த எமது பெயர் பத்திரிகைகளிலெல்லாம் வந்தது ஊருக்கே தெரிந்த விடயம்.''

''இந்த நிலையில் குண்டுவெடிப்பில்தான் காயமடைந்தாரா என்பதை உறுதிப்படுத்துங்கள் என்றால்... எமது காயங்கள் கூட மாறிவிட்ட நிலையில் இது முடியுமா?''

இப்படி அவர் கேட்டார் வேதனையுடன்.

இறந்தவர்களில் ஒருவரான சந்திரசேகரத்தின் வீடு வவுனியாவில் தோணிக்கல் பகுதியில் இருக்கிறது. அங்கு சென்று கொடுப்பனவுகள் பற்றி விசாரித்தோம்.

சந்திரசேகரத்தின் தந்தை நாங்கள் சென்றபோதும் மகனின் ஆவணங்களை எடுத்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்.

''சந்திரசேகரம் இறந்தபின் எமக்கு வருமானமென்று எதுவுமேயில்லை. எனவே தினமும் காலையில் எழுந்து இந்த ஆவணங்களை ஒழுங்குபடுத்தி எடுத்துக்கொண்டு அலுவலகம் அலுவலகமாக ஏறி இறங்கி அதிகாரிகளைக் கெஞ்சுவதுதான் வேலை. ஆனால் எதுவும் நடப்பதாக இல்லை. எவரும் இரங்குவதாகவும் இல்லை'' என்று அவர் கூறினார்.

''கொடுப்பனவு ஒன்றும் கிடைக்கவில்லையா?'' என்று கேட்டோம்.

''எதுவுமே கிடைக்கவில்லை. சம்பளமும் தொடர்ந்து ஓய்வூதியமும் தருவதாகச் சொன்னார்கள். அதற்காக ஏராளமான ஆவணங்களைக் கேட்டார்கள். அலைந்து திரிந்து எடுத்துக்கொடுத்தோம்.''

ஆனால் இப்போது அவரது பதவிக்காலம் 5 வருடம் முடிந்திருந்தால்தான் அவ்வாறான கொடுப்பனவுகளை வழங்கமுடியும் என்கிறார்கள். ஆனால் சந்திரசேகரம் 5 வருடங்கள் பூர்த்தி செய்வதற்கு ஒரு மாதம் இருக்கும்போதே இறந்துவிட்டார். அதனால் கஷ்டம் என்கிறார்கள்.''

''அதேபோன்று நட்டஈட்டுக்கான கொடுப்பனவு பெரும் சிக்கலில் மாட்டி நிற்கிறது. ஒரு வருடத்துக்குப் பின் இவ்வளவு ஆவணங்களைத் தேடிப் பிடித்து அனுப்பிய பின் இப்போது அந்த ஆவணங்கள் எல்லாம் தொலைந்து விட்டன என்றும் வேறு ஆவணங்களை எடுத்து அனுப்பும்படியும் கூறுகிறார்கள்'' என்றார்.

இந்தத் தகவல்களுடன் வவுனியா தபால் அத்தியட்சகரைச் சந்தித்தோம்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரான அந்த அதிகாரி ''இது தொடர்பாக சகல விடயங்களையும் யாழ் வடமாகாண தபால் அத்தியட்சகர் அலுவலகமே மேற்கொண்டு வருகிறது. எனவே எனக்கு எதுவும் தெரியாது. யாழ் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டுப்பாருங்கள்'' என்றார்.

அடுத்து இறந்த மற்றொருவரான பாஸ்கரலிங்கம் என்பவரின் மனைவியான சரஸ்வதியை யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் உள்ள கரணவாய் — சாளம்பன் பகுதியில் சந்தித்தோம்.

கொடுப்பனவுகள் பற்றிக் கேட்டபோது...

''இதுவரை எதுவும் கிடைக்கவில்லை. தபால் அதிபர்களின் தொழிற்சங்கம் ஒன்றுதான் 13 ஆயிரம் ரூபா தந்திருக்கிறது. மற்றப்படி மரணப் பணிக்கொடையும் இன்னும் ஒரு சில தினங்களில் கிடைத்துவிடும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் நட்டஈட்டுக்குத்தான் பெரும் அலைச்சலாக இருக்கிறது. எல்லா ஆவணங்களையும் ஒப்படைத்து விட்ட நிலையில் வவுனியா பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸ் றிப்போர்ட் எடுத்துத் தரும்படி கூறுகிறார்கள்.''

எனக்கு நான்கு பிள்ளைகள். அவர்களில் இரண்டு பெண் பிள்ளைகள் திருமணம் முடித்துப் போய்விட்டார்கள். இரு மகன்கள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு வயது 55. எனது மகன்களும் நானும் எனது கணவரின் வருமானத்தில்தான் தங்கியிருந்தோம். இப்போது வாழ்க்கைபாடே பெரும் கஷ்டமாக இருக்கிறது.

''இந்த நிலையில் என்னை வவுனியா போய் பொலிஸ் றிப்போர்ட் எடுத்துவா என்றால் நான் எப்படிப் போவது? எனக்கு அங்கே எவரையும் தெரியாது. தவிர நான் போனால் பிள்ளைகளை யார் கவனிப்பது? வவுனியா போய் வருவதென்றால் ஒன்று அல்ல இரண்டு நாட்களில் முடிகிற காரியமா?'' என்றார்.

அடுத்து வடமாகாண தபால் ஆணையாளர் சிவஞானசுந்தரத்தை யாழ் மணிக்கூட்டு வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தோம்.

''சிற்றூழியரான சந்திரசேகரத்தின் சம்பளக் கொடுப்பனவுகளுக்கான ஆவணங்கள் பிரதம தபாலதிபர் நாயகத்துக்கு அனுப்பப்பட்டு விட்டன. அவரது நட்டஈடு தொடர்பான ஆவணங்கள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை.''

''இறந்த தபாலதிபர் பாஸ்கரலிங்கத்தின் நட்ட ஈட்டுக்கு மிக முக்கியமான ஆவணம் பொலிஸ் றிப்போர்ட்தான். அது இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. அவரது மனைவி எப்படியாவது அதனை எடுத்துத் தரவேண்டும். எமது திணைக்களத்திற்கென்று சில சட்டதிட்டங்கள் உண்டு. அதன்படிதான் நாம் செயற்பட முடியும்.''

''அடுத்து காயமடைந்த ஊழியர்களுக்கு லீவும், சம்பளமும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நட்டஈடு தொடர்பாக எவரும் விண்ணப்பிக்கவில்லை. விண்ணப்பித்தால் அவர்களுக்கான நட்டஈடு வழங்கப்படும்'' என்றார்.

இந்தத் தகவல்களுடன் வவுனியா தபால்நிலையத்தில் கடமையாற்றும் தபால் திணைக்கள தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவரை சந்தித்தோம். நாம் பேச ஆரம்பித்ததும் ''இவர்கள் இப்படித்தான் நேரத்துக்கு ஒன்று கதைப்பார்கள். காயப்பட்டவர்களுக்கு உடல் அவயவங்களை இழந்தால்தான் நட்டஈடு வழங்கப்படும். சும்மா காயத்திற்கெல்லாம் வழங்க முடியாதென்கிறார்கள்.''

''மற்றும் இறந்தவர்களின் மரணப் பணிக்கொடை, நட்டஈடு என்பவற்றை வழங்குவதற்கு நூலிலே பிழை பிடித்துக்கொண்டிருக்கிறது யாழ். பிராந்திய அலுவலகம். இவர்களது இந்த சட்ட திட்ட நுணுக்கங்களின் படி பார்த்தால் வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணிக்கொடையோ, நட்டஈடோ கிடைக்கவே கிடைக்காது'' என்றார்.

அதிகாரிகள் இறங்கி வருவார்களா?

இப்படி ஏங்கித் தவிக்கிறார்கள் அந்தக் குடும்பத்தினர்.

—வன்னி மைந்தன்

# நீச்சல் குளத்திலே சைக்கிள் சவாரி

நீச்சல் குளத்திலே நீந்தி விளையாடலாம். தண்ணீருக்குள் மூழ்கித் திளைக்கலாம். யோகாசன விற்பன்னர்கள் தண்ணீரில் மிதந்தும் காட்டுவார்கள். ஆனால் இந்த அழகியோ நீச்சல் குளத்தில் சைக்கிள் சவாரி செய்கின்றார். தண்ணீரில் நகரும் விதத்தில் தயாரிக்கப்பட்ட சைக்கிள் இது. நீச்சல் குளத்தில் சைக்கிள் சவாரி செய்வது உடல் ஆரோக் கியத்திற்கு சிறந்தது என்று கருதப்படுகிறது.



# கோதுமை புல் மூலம் தேக நலன் பெறலாம்



கோதுமைமா சத்து நிறைந்தது. மக்கள் மத்தியில் பட்டினியை ஒழிக்க கோதுமையே துணை புரிகிறது. கோதுமை நெல்லை ஊறவைத்து துணியில் சுற்றி முளை கட்டவைத்துப் பின் அது புல்லாக வளர்ந்தால் மிகவும் சத்து நிறைந்த உணவாகிறது.

கோதுமைப்புல்லின் சாற்றினை அருந்துவோர் மிகவும் தரமான உயிர்ச்சத்துக்களைப் பெறுகிறார்கள். அமெரிக்காவில் நோயாளிகளுக்கும் கோதுமைப்புல் சாற்றினைக் கொடுத்து அவர்களின் நோய்களைத் தீர்ப்பது இயற்கை வைத்தியமாகும். கோதுமைப் புற்கள் வளர்ந்து எழிற்கோலம் பூண்டுள்ள காட்சி இது.

# புகை விடுவதின் மூலம் மனிதருக்கு என்ன லாபம்?

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்பார்கள். ஆனால் இன்றோ மனிதனிடமிருந்து தான் குரங்குகள் தீய பழக்கங்கங்களைப் பழகிக் கொள்ளும் நிலை இருக்கிறது. இந்தப் படத்தில் காட்சி தரும் ''மூதாதை''க்கு யாரோ ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொடுத்து விட்டார்கள். புகையை ஊதி இழுத்த முப்பாட்டனாருக்கு அதன் சுவை பிடிக்கவில்லை என்பது அவர் முகத்தைப் பார்த்தாலே புரியவில்லையா? புகை விடுவதன் மூலம் இந்த மனிதர்களுக்கு என்ன லாபம்தான் கிடைக்கிறதோ? என்று எண்ணிப் பார்க்கத் தொடங்கிவிட்டார் இவர்.





# முகர்ந்து பார்த்தாலே மதுவின் தரம் தெரியும்

தேயிலையில் பல ரகங்கள் இருக்கின்றன. அவற்றின் தரங்களைக் கண்டறிந்து கூறுவதற்கு நிபுணர்கள் இருக்கிறார்கள். தேயிலைச் சாயங்களை நாவினால் சுவைத்து அவற்றின் தரம் பற்றிக் கூறுபவர்கள் அவர்கள். ஆனால் மதுவின் தரம் பற்றி அறிவதற்கு முகர்ந்து பார்க்க வேண்டும். வெவ்வேறு கிண்ணங்களில் சேகரிக்கப்பட்ட விதம்விதமான விஸ்கி மது வகைகளை முகர்ந்து பார்த்து தரம் அறிகிறார் இந்த ஸ்கொட்லாந்து நிபுணர். அதிக அளவு மதுக் கிண்ணங்களை முகர்ந்து பார்த்தால் மது மயக்கம் வந்துவிடாதா இவருக்கு?

## MASALA மிக்ஸ்

## ஒளிந்திருக்கும் முகம் எது?



ஏப்ரல்—22, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் கார்த்திக்கினுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:—

1. ம.கலைச்செல்வி, டிக்கோயா.
2. ஜே.ஏ.பாயிஸில், புத்தளம்.
3. ச.கிருசாந்தன், மானிப்பாய்.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (29.04.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? அப்பாவி முகம். காதல் தேசத்தில் அறிமுகமாகி படையப்பாவில் மாப்பிள்ளையானவர்.



இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு — 06.

# கையும் மெய்யுமாக பிடித்து விடும் சாகசம்

மேற்கு நாடுகளில் நவீன வசதிகள் அதிகரித்திருக்கின்றன. அதன் காரணமாக அங்கெல்லாம் குற்றச் செயல்களும் விஸ்வரூபம் பெற்றிருக்கின்றன. இருந்த போதிலும் அந்தக் குற்றவாளிக் கும்பல்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிடும் சாகசத்தில் பொலிஸார் வல்லமையுடையவர்களாக இருக்கிறார்கள். இது ஒரு திரைப்படக் காட்சி அல்ல. அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள கொலரோடா நகரில் ஏழுபேர் கொண்ட பயங்கர கொள்ளையர் கோஷ்டியைப் பொலிஸார் வளைத்துப் பிடித்தனர். துப்பாக்கி முனையில் ஒரு கொள்ளையன் மடக்கப்படும் காட்சி இது.



# தலைநகரில் கம்பன் விழா

கொழும்பு கம்பன் கழகத்தின் நான்காவது கம்பன் விழா 4.5.2001 தொடக்கம் 8.5.2001 வரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் காலை, மாலை இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

காலை அமர்வுகள் பத்து மணிக்கும் மாலை அமர்வுகள் 5 மணிக்கும் ஆரம்பமாகும்.

இந்த விழா தொடர்பான ஊர்வலம் 4ஆம் திகதி மாலை நாதஸ்வர, தவில் வித்துவான்களின் இன்னிசையுடனும் கல்லூரி மாணவர்களின் கீழைத்தேய வாத்திய இசையுடனும் மங்கையர்களின் நிறைகுட பவனியுடனும் இராமகிருஷ்ண வீதி முகப்பில் இருந்து ஆரம்பமாகி விழா மண்டபம் வரை நடைபெறும் ஊர்வலத்தில் கம்பன் திருவுருவப் படமும் எடுத்துச்செல்லப்படும்.



வி.கயிலாசபிள்ளை

கொழும்பு கம்பன் கழகத் தலைவர் தெ.ஈஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால கிருஷ்ணகாந்தி திறப்புரையும் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தொடக்கவுரையும் தமிழகப் பேராசிரியர் சாலமன் பாப்பையா சிறப்புரையும் நிகழ்த்துவார்கள்.



வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை



சாமி விஸ்வநாதக் குருக்கள்

இவ்வருட கம்பன் விழாவில் தனியுரை, இளைஞர் அரங்கு, பட்டிமண்டபம், ஐயந்தெளி அரங்கு, கவியரங்கம், இலக்கிய ஆணைக்குழு, வழக்காடு மன்றம், மாதர் அரங்கம், ஆடல்வேள்வி ஆகிய முத்தமிழ் நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

விழாவில் தமிழ்நாட்டின் சிறப்புமிக்க முன்னணிப் பேச்சாளர்களும், கவிஞர்களும், நாட்டிய மாமணிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.



தமிழகத்தின் தலை சிறந்த சொற்பொழிவாளர் பேராசிரியர் சாலமன் பாப்பையா, நாட்டிய கலாநிதி செல்வி பத்மா சுப்பிரமணியம், கவியரசர் இளந்தேர், இலக்கியச் சுடர் த.இராமலிங்கம், பேச்சாளர் இரா.மாது, கவிஞர் பாரதி அருணாசலம் ஆகியோர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கின்றனர்.

இவர்களோடு சென்னை கம்பன் கழகம், புதுவை கம்பன் கழகம், கோவை கம்பன் கழகம், வேலூர் கம்பன் கழகம் ஆகியவற்றில் இருந்தும் பேராளர்களாக பல அறிஞர்கள் விழாவில் கலந்துகொள்கின்றனர்.

நாட்டிய மேதை டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்களின் 'இராமாயணம்' நாட்டிய நாடகம் கம்பன் விழா நிறைவு நாளில் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது.

நம்நாட்டின் பிரபல அறிஞர்கள், நிர்வாகிகள், சமுதாயப்பிரமுகர்கள், வர்த்தகப் பெருமக்கள் முதலிய பெரியோர்கள் பலரும் இந்த விழாவில் கலந்துகொள்கின்றனர்.

'கம்பகாவலர் விருது' இம்முறை கோவை கம்பன் கழகத் தலைவர், 'கம்பன் அறநெறிச் செம்மல்' ஜி.கே.சுந்தரம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.



கம்ப காவலர் விருது பெறும் ஜி.கே.சுந்தரம்

தம் செயற்பாடுகளால் நாட்டுக்குப் பெருமை சேர்த்த அறுவர் ஆண்டுதோறும் கொழும்பு கம்பன் கழகத்தால் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர்.

தனது அறிவொழுக்கங்களால் அந்தணர் குலத்தை விளங்கச் செய்யும் பிரம்மஸ்ரீ சாமி.விஸ்வநாதக்குருக்கள் – ஈழத்து ரசிகர்களுக்கு ஆற்றல் சான்ற தமிழகத்து அறிஞர் பெருமக்களை அறிமுகப்படுத்தி செவிச்செல்வம் வழங்கியதோடு பல சமயத் தமிழ் சமூகப் பணிகளை ஆற்றிவரும் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் அறங்காவலர் வி.ரி.வி.தெய்வ நாயகம்பிள்ளை.

இன்றைய நெருக்கடிக் காலத்திலும் சரித்திரப்புகழ் பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயத்தின் உயர்வுக்காக உழைப்பதோடு பல சித்தாந்த நூல்களை வெளியிட்டுப் பெருமை கொண்ட, திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் செயலாளர் இ.நமசிவாயம்.

தன் கல்விப் பணி மூலம் ஆளுமைமிக்க கல்விச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்ட முன்னைநாள் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி பத்மாசனி ஆறுமுகம்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக பல வருடங்கள் இருந்து சமய சமுதாயப் பணிகளை ஆற்றிவரும் வி.கயிலாசபிள்ளை.

அறிவிப்புத்துறைமூலம் தனக்கெனஓர் தனியிடத்தை வகுத்து நம் ஈழத்தமிழை உலகம் பூராகவும் ஒலிக்கச் செய்த பெருமைக் குரியவருமான பி.எச்.அப்துல்ஹமீத்.

இவர்களே இம்முறை கௌரவிக்கப்பட உள்ள அறுவரும் ஆவர்.

தமிழுலகின் தன்னிகரற்ற இலக்கண அறிஞராகவும், அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஆலோசகர்களுள் ஒருவராகவும் விளங்கிய பேராசான், இலக்கண வித்தகர் இ.நமசிவாய தேசிகர் அமரரானதைக் குறித்து அன்னாரின் திருவுருவப்படத் திறப்பும், அவர் பற்றிய நினைவு உரையும் விழாவின் மூன்றாம் நாள் மாலை இடம்பெறவுள்ளன.

விழாவின் முதல் நாள் அன்று இலக்கிய உலகில் சர்ச்சைக்குரிய பகுதியாக விளங்கும் வாலி வதை பகுதியினைப் பற்றிய இந்திய – இலங்கை அறிஞர்களின் கட்டுரைத் தொகுப்பு, யார் வியவாதார் என்ற பெயரில் நூலாக வெளியிடப்படும்.



பி.எச்.அப்துல் ஹமீத்

அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட உடன் தலைப்பு வழங்கும் பேச்சு, கவிதைப் போட்டிகளில்வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்குப் பரிசில்கள் ஆகியவையும் அன்று வழங்கப்படவுள்ளன. முதலிடம் பெற்றவர்களுக்கு உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களால் தங்கப்பதக்கங்கள் வழங்கப்படும்.



பத்மாசனி ஆறுமுகம்

கம்பன் கழகம் ஆண்டுதோறும் சமுதாயப் பணிக்காக நிதியுதவி வழங்கி வருவது வழக்கம். இம்முறை புதுக்குடியிருப்பில் உள்ள செவிப்புலன், கட்புலன் குறைந்த மாணவர் பராமரிப்பு நிலையமான 'இனிய வாழ்வு இல்லத்திற்கு' இந்த உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. போராட்டச் சூழ்நிலையால் அவதியுறும் இம்மாணவர்களின் இனிய வாழ்வு வேண்டி லண்டன் நண்பர்களின் உதவியோடு கம்பன் கழகம் இச்சமுதாயப் பணியை மேற்கொள்கிறது.



இ.நமசிவாயம்

## கலையமுதம்

கே.விஜயன்

'அவனும் சில வருடங் களும்' நாவல் பற்றியதொரு ஆய்வரங்கு பெண்களுக்கான கல்வி ஆய்வு நிறுவன மண்டபத்தில் அண்மையில் எழுத்தாளர் வ.இராசையாவின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நாவலை லண்டனில் வாழ்ந்து வரும் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதியுள்ளார்.

''தேம்ஸ் நதிக்கரையில்'', ''ஒரு கோடை விடுமுறை'', ''பனி பெய்யும் இரவுகள்'', ''தில்லையாற்றங்கரையில்'', ''வசந்தம் வந்து போய்விட்டது'' ஆகிய நாவல்களையும், ''உலகமெல்லாம் வியாபாரிகள்'', ''நாளைக்கு இன்னொருவன்'', ''அம்மா என்றொரு பெண்'', ''ஏக்கம்'', ''அரைகுறை அடிமைகள்'' ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் எழுதி வெளியிட்டிருப்பவர் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்.

விபவி கலாசார மையம் ஒழுங்கு செய்திருந்த இந்த ஆய்வரங்கில் நூலின் உருவும் உள்ளடக்கமும் குறித்து ஜனாப் முஹம்மது சமீமும்–

பாத்திரவார்ப்பு குறித்து கே.எஸ்.சிவகுமாரனும்–

பெண்நிலை நோக்கு குறித்து திருமதி சுதர்ஷினி ஜீவாஹரனும்–

நடையும் உத்தியும் குறித்து கே.விஜயனும், சமூக நோக்கு குறித்து சோ.தேவராஜாவும் ஆய்வுரை நிகழ்த்தினர். உரைகளின் பின்னர் கலந்துரையாடலும் இடம் பெற்றது.

நூல் பற்றிய ஆய்வுரைகளின் போது அவனும் சில வருடங்களும் நாவல் இலங்கை அரசியலை வெளிப்படுத்தும் வரலாற்று நாவல் என்றார் சமீம்.

டெவீனா என்ற பிரதான பாத்திரம் சிறப்பாகவுள்ளது. ஆனால் அது முழுமை யானதாக இல்லை என்றார் சிவகுமாரன்.

பெண்ணியம் சரியாக சொல்லப்பட வில்லை என சுதர்ஷினி வாதிட்டார்.

இலங்கை அரசியல் முதல் பல்வேறு விஷயங்கள் சொல்லப் பட்டாலும் கதையின் நடையும் உத்தியும் அதனை பெண்ணியம் சம்பந்தமான முழுமையான நாவலாக மாற்றி விடுகிறது என விஜயனும் நாவலில் சமூக நோக்கு கொச்சைப்படுத்தப் பட்டுவிட்டது என சட்டத்தரணி சோ.தேவராஜாவும் வாதிட்டனர்.

கலந்துரையாடல் காரசாரமாக அமைந்தது. ந.பார்த்தீபன் முதல் இலக்கிய ஆர்வலர் கைலாயர், எழுத்தாளர்களான காவலூர் ராஜதுரை, நீர்வை பொன்னையன் வரை பலரும் காத்திரமான கருத்துக்களை முன்வைத்தனர்.

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஒரு சிறந்த எழுத்தாளர் அல்லர் என்பதாக ந.பார்த்தீபன் வாதிட்டார். இராஜேஸ்வரி வசதியானவர். மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர். இவருடைய கதைகள் ஆழமான சமூக நோக்கு அற்றவை என அவர் குறிப்பிட்டார்.







ஒரு நூலின் உள்ளடக்கத்தைப் பல அம்சங்களாகப் பிரித்து அது குறித்து ஆய்வுரைகள் மேற்கொள்ளப்படுவது அதன் நிறை குறைகளை அறிவதற்கே ஆகும். இத்தகையதொரு ஆய்வின் மூலமே ஒரு நூலைப் பற்றிய முழுத்தகவலையும் அறிய முடிவதுடன் நூலை முழுமையான ரசனைக்கும் உட்படுத்த முடியும்.

கலந்துரையாடலில் கலந்து கொள்பவர்கள் இதனைப் புரிந்து தமது கருத்துக்களை முன்வைத்தால் மாத்திரமே கூட்டம் சிறப்புற அமையும். இதனைப் புரிந்து கொள்ளாத சிலர் எல்லோரும் பேசுகிறார்களே நாமும் நாலு வார்த்தைகளைச் சொல்வோமே என்று முந்திரிக்கொட்டைகளாக முன்னே பாய்ந்து சொல்கின்ற சில வார்த்தைகள் சபையில் வெடிச் சிரிப்புகளை எழுப்பிவிடுகின்றன. இந்த ஆய்வரங்கிலும் அப்படியொரு சுவையான சம்பவம் நிகழ்ந்தது.

'இந்த நாவலில் எக்கச்சக்கமான பாத்திரங்கள். பெயர்கள் கூட ஆங்கிலப் பெயர்கள் மனதில் பதியவே இல்லை ...' என்று ஓர் இலக்கிய ஆர்வலர் சொன்னபோது லண்டன் மாந்தரின் பெயர்கள் ஆங்கிலத்தில் இல்லாமல் தமிழில் எப்படி ஐயா இருக்கும்? என்று இன்னொரு இலக்கிய ஆர்வலர் கடுவன் பூனையாக சஞ்சாரியின் காதில் சிடு சிடுத்த போது சிரிக்காமல் இருக்க முடியவில்லை.










# புலிகளின் அன்பு, பரிவு, பண்பு.... ஆஹா! "அண்ணே" என்றுதான் அழைப்பர்!

"விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கான நல்லெண்ணத்துடனும் திறந்த மனதுடனும் இருக்கிறார்கள். இனி சமாதானத்துக்கான சமிக்ஞையைக் காட்ட வேண்டியது அரசாங்கம் தான்."

விடுதலைப்புலிகளினால்அண்மையில் விடுவிக்கப்பட்ட கே.பி.ரிச்சட் சுடர் ஒளி செய்தியாளரிடம் மேறகண்டவாறு கூறினார்.

1995ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் திகதி அதிகாலை இரண்டு மணியளவில் முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து 'ஐரிஷ் மோனா' பயணிகள் கப்பல் கடற்புலிகளினால் கைப்பற்றப்பட்டது.

அன்றைய தினம் பயணிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். கப்பல் பணியாளர்கள் மட்டும் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டனர். சில காலங்களின் பின்பு அவர்களில் மாலுமி உட்பட அறுவர் விடுவிக்கப்பட்டனர்.

மீதமாக இருந்த இருவரும் 'எம்.பி.மிஷன்' என்னும் பயணிகள் கப்பலில் பணிபுரிந்த ஒருவருமாக மூவர் தடுத்து வைக்கப் பட்டிருந்து ஏப்ரல் 9ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் ஒன்றாகவே புலிகளால் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

'ஐரிஷ் மோனா' கப்பலில் பணிபுரிந்த கே.பி.ரிச்சட் திருகோணமலைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

அவர் விடுதலையானதைக் கேள்விப் பட்டதும் உப்புவெளி, கேணியடியில் இருக்கும் அவரின் இல்லத்துக்கு விரைந்தோம்.

46 வயது நிரம்பிய கே.பி.ரிச்சட் இளமைத் தோற்றத்தோடு சுறுசுறுப்பாகக் காணப்பட்டார். மனைவி அமர்லதா களபதியோடும் தனது மூன்று பிள்ளைகளோடும் ஆனந்தமாக அவர் இருந்தார்.

படப்பிடிப்பாளருடன் சென்றிருந்த என்னை அவர் அன்போடு வரவேற்றார்.

சுடர் ஒளி பத்திரிகைக்காக ரிச்சட் பிரத்தியேகமாக அளித்த பேட்டியின் சுருக்கமான தொகுப்பினை இங்கு தருகிறோம்.

கேள்வி : நியுகோ சிப்பிங் தனியார் கம்பனிக்குச் சொந்தமான 'ஐரிஷ் மோனா' பயணிகள் கப்பலில் எவ்வளவு காலமாகப் பணிபுரிகிறீர்கள்?

பதில் : 1995 ஜுன் 26 இல்தான் இக்கப்பலில் நியமனம் கிடைத்தது. இரண்டரை மாதங்கள்தான் பணிபுரிந்தேன்.

கே : ஐரிஷ் மோனா கப்பலை கடற்புலிகள் சூழ்ந்து கொண்டதை அறிந்ததும் உங்கள் உணர்வு எப்படி இருந்தது?

ப: பெரிதாக ஒரு வித்தியாசமும் எனக்கு ஏற்பட வில்லை. இது பயணிகள் கப்பல். பயணிகள் தமிழர்கள். பயணம் தமிழ் பிரதேசத்துக்கானது. என்னுடன் இருந்த பணியாளர்களில் மூன்று தமிழர்களும் இருந்தனர். அதைவிட நானும் ஒரு சிவிலியன். அதனால் அச்ச உணர்வோ அல்லது பயமோ எனக்கு ஏற்படவில்லை.

கே : புலிகள் உங்களைப் பிடித்ததும் உடனே விசாரித்தார்களா? எங்கு உங்களைக் கொண்டு சென்றார்கள்?

ப : விசாரணை பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. முதலில் என்னை வன்னிக்குக் கொண்டு சென்றார்கள். பின்பு கிளிநொச்சிக்கு அனுப்பினார்கள்.

கே : விசாரணையின்போது புலிகள் உங்களுடன் கடுமையாக நடந்து கொண்டார்களா? படையினரின் விசாரணைக்கும் புலிகளின் விசாரணைக்கும் இடையில் வித்தியாசம் தெரிந்ததா?

ப : ஆம்தெரிந்தது. எந்த விசாரணையிலும் கடுமையோ அல்லது கடுகூடுப்போ இருக்கவில்லை. சித்திரவதையோ,துன்புறுத்தலோ இருக்கவில்லை. ஏன் 'டேய்' என்று கூட ஒரு போதும் அவர்கள் அழைக்கவில்லை. தேவைப்படும்போது 'அண்ணே' என்றுதான் கூப்பிடுவார்கள். மிகவும் பண்பாகவே என்னை அவர்கள் நடத்தினார்கள்.

கே : உங்களைத் தடுத்துவைத்திருந்தபோது கைவிலங்கிட்டு வைத்திருந்தார்களா? சிறையில் அடைத்துவைத்திருந்தார்களா?

ப : எங்களை முகாமுக்குள் அவர்கள் வைத்திருக்கவில்லை. முகாமுக்கு வெளியில் கிராமத்தில்தான் இருந்தோம். ஆற்றில் மீன்பிடிக்கவும் காட்டில் வேட்டையாடவும் எமக்குச் சுதந்திரம் தந்தார்கள். அக்கிராமத்தில் நாம் எங்கு வேண்டுமானாலும் நடமாட முடியும்.

கே : புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறுகிறார்கள். நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

ப : மன்னிக்கவும். இதற்குப் பதில் சொல்ல நான் விரும்பவில்லை. பொதுவாகப் புலிகள் நல்லவர்கள். எங்களோடு மனிதாபிமானத்தோடு நடந்து கொண்டார்கள். அவ்வளவுதான் என்னால் சொல்லமுடியும்.

கே : நீங்கள் புலிகளிடம் கைதியாக இருந்தபோது உங்கள் வீட்டாருடன் தொடர்புகள் இருந்தனவா? அதற்காக விசேட ஏற்பாடுகள் செய்து தந்தார்களா?

ப : விசேட ஏற்பாடு எதுவும் செய்து தரவில்லை. ஆனால் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மூலம் எமது குடும்பத்துடன் கடிதத் தொடர்புகளை வைத்துக்கொள்ள முடிந்தது. எமக்கு வரும் கடிதங்களை அவர்கள் உடைத்துப் பார்த்ததே கிடையாது.

கே : மாவீரர்தின நிகழ்வுகளைக் காணும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தது உண்டா?

ப : ஆம், இரண்டு தடவைகள் அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. விசுவமடு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் மாவீரர் நிகழ்வுகளைக் கண்டோம். மிகவும் உணர்வு பூர்வமாக அவை இருந்தன. சில சம்பவங்கள் மனதை வருடுவதை உணர முடியாமல் இல்லை. அப்போது நடைபெற்ற பழைய நினைவுகளை மீட்டிப் பார்ப்பதுண்டு அதனை இப்போது சொல்ல முடியாது.

விடுதலைப் புலிகளினால் 1995 இல் கைப்பற்றப்பட்ட ஐரிஷ் மோனா பயணிகள் கப்பல் பணியாளர்களில் ஒருவரான திருகோணமலையைச் சேர்ந்த பி.ரிச்சட் ஏப்ரல் 9ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார். ஆறு வருடங்கள் இவர் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்துள்ளார். விடுதலைப் புலிகள் பற்றி இவர் கூறுவதை வாசித்துப் பாருங்கள்.
இவரைச் சந்தித்துப் பேட்டி கண்டவர்
திருமலை சுடர் ஒளி
செய்தியாளர் எஸ். எஸ் ஆர்.

கே : உங்களை விடுதலை செய்யுமாறு நீங்கள் கோரவில்லையா?

ப : ஆம் பலதடவைகள் கோரியதுண்டு. விடுதலைகோரி புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நூற்றுக்கு மேற்பட்ட கடிதங்கள் எழுதி இருக்கின்றேன். ஒரு பதிலும் கிடைக்கவில்லை. இதே கோரிக்கையை முன் வைத்து தண்ணீர், தேநீர், இளநீர் மட்டும் அருந்தி நாங்கள் மட்டுப்படுத்தப்பட்ட உண்ணாவிரதம் இருந்திருக்கின்றோம். 1996 டிசம்பர் 31ஆம் திகதி எங்களை விடுதலை செய்வதாக உறுதி அளித்தார்கள். வைத்தியர்கள் வந்து எம்மைப் பரிசோதித்து எமது உடல்நிலை மோசமாக இருப்பதாக கூறி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்கள். அதன் பின் "சண்டை நடக்கின்றது" "இன்று" "நாளை" என காலம் கடந்து விட்டது.

கே : புலிகளின் பாதுகாவலில் நீங்கள் இருந்தபோது உங்களைப் பார்வையிடுவதற்காக எவராவது வந்தார்களா?

ப : யாழ்.மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், மன்னார் மாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப், மற்றும் வண. மல்கம் ரஞ்சித் பீரிஸ் போன்ற மதகுருமார் வருகை தந்திருந்தனர். மடு தேவாலயத் துக்கு செல்ல வேண்டும் என்று நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க மடு தேவாலயம் செல்வதற்கு 1998 இல் எமக்கு ஏற்பாடு செய்து தந்தார்கள். நோர்வே, தென்னாபிரிக்க உயர் ஸ்தானிகர்களும் எம்மை வந்து பார்த்தார்கள்.

கே : நீங்கள் வசித்த இடங்களில் பொதுமக்களுடனான தொடர்பு எத்தகையது?

ப : அப்பகுதி பொதுமக்கள் மிகவும் நல்லவர்கள். விசேட நிகழ்வுகளின் போது எமக்கு உணவு தருவார்கள். கிளிநொச்சி போன்ற பகுதிகளில் தனிச் சிங்களக் குடும்பம் இருக்கிறது. பௌத்த தேரரும் வசிக்கிறார்.

கே : ஈழப் போராட்டம் நியாயமானது என ஏற்கிறீர்களா?

ப : .... மௌனம் — அரசியல் வேண்டாம்.

கே : ஈழம் கிடைக்கும், விடிவு மலரும் என்பதில் புலிகள் உறுதியாக இருக்கிறார்களா?

ப : ஆம் அதீத உறுதி அவர்களுக்கு இருக்கிறது.

கே : உங்கள் அனுபவத்தின் அடிப்படையில் சிங்கள மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ப : சிங்கள மக்கள் யதார்த்த உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்பொழுது சமாதானம் தானாக கைகூடும்.

கே : புலிகளுடன் கதைக்கும்போது உங்களுக்கு மொழிப்பிரச்சினை இருந்ததா?

ப : ஆம். கைப்பாஷைதான். இப்போது கதைக்க பழகிக்கொண்டேன்.

கே : யாழ்ப்பாண மக்களின் அவல நிலையினை அறியக்கூடியதாக இருந்ததா?

ப : ஆம். பல சந்தர்ப்பங்களில் அறியக் கூடியதாக இருந்தது. படை நடவடிக்கையின்போது நாங்கள் இடம்மாறி இருக்க நேர்ந்த வேளையில் மக்களின் அவல நிலையை உணர்ந்தேன். பொருட்களின் விலைவாசிஅதிகரிப்பும் பொருட் தட்டுப்பாடு,பொருட்தடை என்பனவும் பல சிரமங்களை மக்களுக்குத் தருகின்றன.

கே : புலிகளிடம் சமாதான நல்லெண்ணம் உண்டா?

ப : புலிகள் சமாதானத்துக்கான நல்லெண்ணத்துடன்தான் இருக்கிறார்கள். சமாதானத்துக்கான வாசல் திறந்துதான் இருக்கின்றது. இனி, சமாதானத்துக்கான சமிக்ஞையைக் காட்ட வேண்டியது அரசாங்கம் தான்.

70 மாதங்களுக்கு மேலாக புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த கே.பி.ரிச்சட் சில வினாக்களுக்கு பதிலளிக்க தயங்கினார். ஏதாவது ஒரு பக்கத்தால் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற பயம் அவருக்கு இருக்கலாம். அவரைப் புலிகள் விடுவிக்கும் போது "நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம், அதற்கு தாம் தடையில்லை" என்று கூறியதாக அறிய முடிகின்றது.

இறுதியில் சுடர் ஒளி பத்திரிகையின் ஊடாக பின்வருவோருக்கு நன்றி தெரிவிக்கும் படி ரிச்சட் கேட்டுக் கொண்டார்.

தன்னை விடுவித்த விடுதலைப்புலிகள், மன்னார், யாழ்.ஆயர்கள், வன்னி மக்கள், மல்லாவி, புதுக்குடியிருப்பு, அக்கரான் வைத்தியசாலைகளின் மாவட்ட வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள்.

இவர்களுக்கே அவர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

## முகமூடியின் பயணம்

சில சமயங்களில் மனிதர்களின் வாழ்க்கை கூட விந்தை நிறைந்ததாக மாறி விடுகிறது. லண்டனில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது.


இரும்பு முக மூடியினால் முகத்தை மறைத்துக் கொண்டு, ஒரு குழந்தை வண்டியையும் தள்ளிக் கொண்டு 18 நாடுகளுக்குச் சென்று, குறைந்தது அவற்றின் 125 நகரங்களையாவது சுற்றி வர வேண்டும். இந்த சாதனையைச் செய்து காட்டினால் ஒரு லட்சம் பவுண்ஸ் வழங்கப்படும். இந்த சவாலை ஏற்றுக் கொண்டார் ஹாரி பென்ஸ்லி என்பவர்.

விதிகளை மீறாமல் அவர் நடந்து செல்கிறாரா என்று கவனிக்க பென்ஸ்லியுடன் ஒரு கண்காணிப்பாளரும் அனுப்பப்பட்டார்.

1908ஆம் ஆண்டு முதல் நாள் லண்டனில் இருந்து புறப்பட்டு கிட்டத்தட்ட 12 நாடுகளுக்கு போய் விட்டு 1914இல் ஹரி பென்ஸ்லி இத்தாலி வந்து சேர்ந்தார்.

அப்போது உலகப் போர் மூண்டதால் மீதியுள்ள 6 நாடுகளுக்குச் செல்ல முடியாது போர் முனைக்குச் செல்ல வேண்டி வந்தது. தனது முழு சாதனையையும் முடிக்காத காரணத்தால் அவரால் ஆறுதல் பரிசாக 4000 பவுண் மட்டுமே பெறமுடிந்தது.

அதையும் பென்ஸ்லி தர்ம காரியங்களுக்குக் கொடுத்து விட்டார். அதன் பின்னர் தன் வாழ்வின் இறுதிவரை வறுமையில் வாழ்ந்த இவர் 1956இல் மரணமடைந்தார்.






# அம்மாவும் இல்லை, கலைஞரும் இல்லை! அடுத்தமுறை இளைய தலைமுறைதான்!


கருணாநிதி

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கான வாக்களிப்புத் தினம் மே 10ஆம் திகதி யாகும். மிக உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் தேர்தல் பிரசாரங்களின் மத்தியில் தமிழக மக்கள் தங்கள் தீர்ப்பை வழங்குவதற்குத் தயாராகிவிட்டார்கள்.

தமிழகத்தின் அடுத்த ஆட்சியைக் கைப்பற்றப்போகிறவர் யாரர்? — இந்தக் கேள்விக்கு வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் கூறிவிடும் வல்லமை தேர்தல் கணிப்பாளர்களுக்கு ஏற்படவில்லை.

தி.மு.க அணி மிகவும் கலகலப்பாகத் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தது. ஆயினும் ஜெயலலிதாவின் 4 வேட்புமனுக்கள் ரத்துச் செய்யப்பட்டதை அடுத்து தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையும் என்பதை நிர்ணயிப்பது கடினமாகிவிட்டது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு தேர்தலின்போதும் பல்வேறு விதமான அலை உணர்வுகள் ஏற்பட்டு தேர்தல் வெற்றியை நிர்ணயிப்பது வழக்கம். கடந்த தடவை ஊழல் அலைகாரணமாக ஜெயலலிதா தூக்கி எறியப்பட்டார். இந்தத் தடவை அனுதாப அலை அவருக்குத் துணைபுரியுமா?

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் மூன்று வருடகாலச் சிறைத்தண்டனை பெற்றார் என்ற காரணத்தினால் ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ஆனால் கேரளத்தில் ஐந்து வருடகாலச் சிறைத்தண்டனை பெற்ற அமைச்சர் பாலகிருஷ்ண பிள்ளையின் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கருணாநிதியின் பழிவாங்கும் நடவடிக்கையினால் தனக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று குற்றம் சுமத்துவதற்கு இந்தச் சம்பவம் ஜெயலலிதாவுக்குப் பக்கபலமாக இருக்கிறது. ஆனால் ஜெயலலிதா நான்கு தொகுதிகளில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த தவறும் அவரைத் தண்டித்தது என்பது கற்றறிந்தவர்களுக்குப் புரியும்.

கருணாநிதியின் தேர்தல் கூட்டங்களுக்கு பெருமளவில் கூட்டம் திரளுகிறது. ஆனால் ஜெயலலிதாவோ தான் செல்லும் விசேஷ வாகனத்தினுள் இருந்தே வீதியோரங்களில் தேர்தல் பிரசாரம் செய்கிறார். அவருடைய கூட்டணித் தலைவர்களுடன் சேர்ந்து பெரிய கூட்டங்களை நடத்தவில்லை.

தனக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்று கூறி கண்ணீர் வடிக்கிறார் ஜெயலலிதா. அ.தி.மு.க அனுதாபிகள் குறிப்பாகப் பெண்கள் ஜெயலலிதா மீது இரக்கம் கொண்டிருக்கிறார்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதிகளை ஒதுக்கியதில் ஜெயலலிதா மீது ஆத்திரம் கொண்டிருந்தனர் சிலர். அவர்களும் ஜெயலலிதா தற்போது அனுதாப அலை மூலம் கரைசேர முயலும்போது பக்கப்பாட்டுப் பாடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஜெயலலிதா அனுதாப அலை மூலம் வெற்றியைப் பிடித்து விடத் துடிக்கிறார். ஆனால், கருணாநிதியோ தி.மு.க அலையே உச்சம் பெற்றிருக்கிறது என்று சாதிக்கிறார்.

கருணாநிதி தாம் தேர்தலில் போட்டியிடுவது இதுவே இறுதித் தடவை என்று கூறித் தேர்தல் களத்தில் குதித்திருக்கிறார். இதன் காரணமாக தி.மு.க தொண்டர்கள் மத்தியில் உணர்வலைகள் உச்சம் பெற்று தமது வெற்றிக்கு அவர்கள் கைகொடுக்கும் நிலை ஏற்படும் என்று கருதுகிறார்.

ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியாமல் சட்டம் அளித்த தீர்ப்பு அனைவரும் அறிந்தது தான். ஆனால், கருணாநிதியே தமது அதிகாரத்தைக் கொண்டு தனது வேட்பு மனுக்களைத் தூக்கியெறியச் செய்துவிட்டார் என்று ஜெயலலிதா குற்றம் சுமத்துகிறார். இதன் மூலம் அ.தி.மு.க தொண்டர்கள் அனுதாபம் கொண்டு தமது வெற்றிக்குக் கைகொடுப்பார்கள் என்று ஜெயலலிதா நம்புகிறார்.

தமிழக அரசியலில் எத்தனையோ பிரச்சினைகள் தலைதூக்கியிருக்கின்றன. ஆயினும் ஜெயலலிதாவை ஒழித்துக்கட்ட கருணாநிதி தமது முதலமைச்சர் அதிகாரத்தைப் பயன்படுத்தி விட்டார் என்ற ரீதியில் பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது.

இறுதிக்கட்டத் தேர்தல் பிரசாரம் இந்த ரீதியிலேயே மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் தமிழகத் தேர்தல் காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதைக் கண்டுகொள்வது சுலபமாக இருக்காது என்றே தோன்றுகிறது.

கடும் போட்டிக்கு மத்தியில்தான் கருணாநிதியோ, ஜெயலலிதாவோ வெற்றிக் கம்பத்தைப் பிடிக்க வேண்டியிருக்கும் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தி.மு.க அணி வெற்றிபெற்றால் முதலமைச்சர் கருணாநிதி தமது உடல் நிலையைக் காரணம் காட்டி மகன் ஸ்டாலினை முதலமைச்சராக்கக் கூடும் அதற்குச் சான்றான விதத்தில் கருணாநிதி கருத்துக் கூறவும் தவறவில்லை. ''மக்கள் விருப்பம் அதுவானால் ஸ்டாலின் முதல் அமைச்சராகுவதை எவரும் தடுக்க முடியாது'' என்று கருணாநிதி கூறியிருக்கிறார்.

இதே வேளையில் தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்த முரசொலி மாறன் தனது மாமனாருடன் சேர்ந்து கட்சிக்கு ஆதரவு திரட்டுகிறார்.

அ.தி.மு.க அணி வெற்றிபெற்றால் ஜெயலலிதா தாமே முதலமைச்சராக வர முயலுவார். ஆனால் அதற்கு சட்டரீதியான ஒத்துழைப்புக் கிடைப்பது அரிது என்றே கூறப்படுகிறது. எனவே தம்பித்துரை, காளிமுத்து போன்றவர்கள் பலப்பரீட்சையில் இறங்கக்கூடும். ஆனால் ஜெயலலிதாவோ திரைக்குப் பின்னால் நின்று தாமே ''ரிமோட் கொண்ட்ரோல்'' மூலம் இயக்கக்கூடிய ஒரு டம்மியையே முதலமைச்சராக்க முயலுவார். உடன் பிறவாத சகோதரியின் தத்துப் புத்திரன் தினகரனை சிம்மாசனத்தில் ஏற்ற ஜெயலலிதா முன்வரலாம்.

''தமிழகத்தை அடுத்து ஆளப்போகிறவர் கருணாநிதியா? ஜெயலலிதாவா?'' என்ற கேள்விக்கு விடையளிப்பதற்காக முனைந்திருக்கிறார்கள் தமிழக மக்கள். ஆனால் அவர்கள் அளிக்கும் தீர்ப்பின் மூலம் இளைய தலைமுறையினரே ஆட்சிபீடம் ஏறும் நிர்ப்பந்தம் ஏற்படும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தேர்தல் பலப்பரீட்சை மேலும் உத்வேகம் அடைந்து தி.மு.கவோ அல்லது அ.தி.மு.கவோ அறுதிப் பெரும்பான்மை பெறாவிட்டால் என்ன நடக்கும்?

கூட்டணி அரசாங்கமே ஏற்பட வேண்டிய நிலை உருவாகும். தேர்தல் கூட்டணிகள் தேர்தல் பிரசார காலத்தில் நடத்திய குத்து வெட்டுகள் இனிக்காலம் முழுவதும் நீடிக்க வேண்டியதாகிவிடும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கிறார்கள்.


ஜெயலலிதா

மத்தியில் வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி அரசாங்கம் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஏராளம். இந்நிலையில் தமிழகத்திலும் கூட்டணி அரசு ஏற்பட்டால் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை விவரிக்க முடியாது.

—கதாசி

## கவிதைப் பூங்கா

### கம்ப கைத்திறம்!

கம்பன் அவன் கைத்திறத்தால்
காதை ஒன்று சித்திரமாய்
கண்டு கொள்ளத் தந்துவிட்டான் அன்று
''கம்பன் விழா'' வைக்கின்றோம் வென்று!

கொட்டு முகிலின் நாயகனும்
கொவ்வை நிறத்து நாயகியும்
காத்து வந்த தம்பியரும் என்று
கண் குளிர வைத்துவிட்டார் நன்று!

கற்ற தமிழின் பண்டிதரும்
கல்வி இலாப் பாமரரும்
கம்பனைக் காண்கிறாரே வியந்து — எம்
காதுக்கு பாட்டு நல்ல விருந்து!

சொற் திறத்தால் சேர்த்துவிட்ட
விற் திறத்தின் வெற்றிகளை
பார்த் திருந்தார் வேர்த்துவிட்டார் நன்கு
போர்த் திறனும் பெற்றுவிட்டார் இங்கு!

தோத்திர நற்பாடல்களும்
சாத்திரம் சேர்ச் சேதிகளும்
மாத்திரையாய் மாறும் எங்கள் வாழ்வில் —
அதை
காத்திரமாய் காப்போம் எங்கள் நாவில்!

—தாவை. லோ. து(ள)ஷி

(கொழும்புக் கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் கவிதை)

### அகதியா? அழிந்து போ!

வறுமைக்கோடு வரையப்பட்ட
சிறப்புச் சான்றிதழோடு
இனவாத இரைக்குத் தப்பித்து
உறவுகளோடு உறவாட — அகதிகளாக
இடம் மாறிய போது..
அவர்கள் இதயங்கள்
இனம் மாறிப் போகின்றன
கை விரிப்பே கைகொடுப்பாய்
உள்ளங்கை ரேகைகளை
உள்ளங்கள் நோகாமல்
திறந்து காட்ட ...
நாங்கள் ஒன்றும்
கைரேகைச் சாத்திரம் சொல்ல
சாமியார் அல்ல.
கடல் கடந்த ...
கனடா, சுவிஸ், ஜெர்மனி.... சில
சொந்தங்களுக்கும்...
எங்கள் மீது சோகம்.
அதனால்... அவர்கள் ..
ஐம்புலன்களுக்கிடையில் — ஓர்
ஆள் மாறாட்டப் போராட்டம்.
முகவரிகளும் எங்களைப் போல்
அகதிகளாய் அலைகிறதாம்

கே.வீ.மகாலிங்கம்

### புரிந்துணர்வா?

பழரச பைக்கெற்றுகளும்
கோழி இறைச்சிகளும் எமக்கெதற்கு?
ஏனெனில் — வீடு மனையிழந்து —
வீதியிலே நாங்கள்
விருந்துண்ண ஏதுவழி? ஆகையால்..?
முன்னரைப் போல் — மரம் ஏறி
விழுந்தவனை
மாடேறி மிதிக்காமல்
புரிந்துணர்வில் சேர்த்துக் கொண்டால்
போதுமையா.,,

ரா.சேகர்

### வளமோடு வாழ

முரண்பாடு ஏற்படுமானால்
முறுகல் நிலைக் கேதுவாகும்!
முதுமை அடையும் போது
உடல் நலம் தளர்வடையும்!
தரம் குறையுமானால்
சந்தை மானம் இருக்காது!
தாயுள்ளம் நோகுமானால்
பிள்ளைக்கு உயர்வில்லை!
உரம் குறையுமானால்
பயிர் விளைவில் பயனில்லை!
உயர்ச்சிப் பெற வேண்டுமாயின்
செய்முயற்சியில் உறுதி வேண்டும்!
சிரமமென்று பார்த்தால்
செய்தொழிலில் முன்னேற்றமில்லை!
சினம் கொள்ளாது போனால்
அன்பு மனம் நம்மை ஆளும்!

—அ.அரசரெத்தினம்

### திராட்சைகளும் நரிகளும்

கைகளால் பறிக்க முயன்றபோது
முடியாமற் போனது
கால்களையூன்றிக் கவனமாய்
நிமிர்ந்து பார்த்தபோதும்
நினைத்தது நடக்கவில்லை.
சுவாசிக்கவும் மறந்துபோய்
யோசித்து... யோசித்து...
மூசிக்கொண்டு கல்லெறிந்தபோது
சில்லென்று சில இலைகள் மட்டுமே
விழுந்து சிதறின.
உயரமான தடியை எடுத்து
உறுதியாய் பிடித்துத் தட்டிய போதும்
உருப்படியாய் எதுவும் நடக்கவில்லை.
ஏமாற்றம் மட்டுமே மிஞ்சிப் போனது.
இனியென்ன...? எட்டாத
விலைவாசியெனும் திராட்சைப்
பழத்துக்காய் கொட்டாவி விட்டபடியே
ஓடிப் போயின பொதுசன நரிகள்!

த.பிரபாகரன்

### இறுதித் தீர்மானம்

இப்படித்தான் நாள் முழுதும் நம்பி நம்பி
எம் வாழ்வின் அரைவாசி முடிஞ்சுபோச்சு
கப்பல்வரும் சீனிதரும் என்ற தன்மை
காலமெல்லாம் நிரந்தரமாய்
படிஞ்சுபோச்சு!
சுட்டமன வடுக்களது நாளைபூக்கும்
சுதந்திரத்தின் அடிப்படைதான்
என்றுசொல்லி
பட்டமர வேரடியில் கன்றுவைத்துப்
பார்ப்பமென்றால்,
ஒருத்தருக்கும் விருப்பமில்லை!

நிழல்தேடி அலைகின்ற தமிழர் கூட்டம்
நிம்மதியைத் தேடுவதில் களைச்சுப்
போச்சு
குழலூத ஆடுகின்ற குரங்காய்ச் சிலது
கும்பிட்டுமே வாழ்வதுதான்,
சிரிப்புத்தருது!

ஓடுவதே விதியாகிப் போனால் எம்மை
ஓட்டியவன் நண்பனாக இயலுமோடா?
காடுகளே தஞ்சமென வாழுந் தமிழன்
கஷ்டங்களைப் புரிந்துகொள்ள
எவருமில்லை!

பொட்டிட்டால் அடையாளம்
தெரியுமென்று
பொட்டின்றிக் கொழும்பினிலே என்ர
தங்கை!
கட்டுகின்ற மாலைகளும் காட்டிக்
கொடுக்கும்;
கன்னியவள் தலையினிலே பூவும்
இல்லை!

விட்டுவிட்டு வாழ்வதுதான்
வாழ்க்கையென்றால்
விடிவெப்போ வருமென்ற கேள்வியாலே
கொட்டித் தீர்த்த நாட்களைச் சரிசெய்ய
கொழும்பிலிருந்து என்னூரை
நோக்கிப் போனேன்.

— வாயுபுத்திரன்

''அரசு யுத்த நிறுத்தம் செய்தால் புலிகளும் யுத்தநிறுத்தம்''

# வன்னி சென்ற ஆயர் குழுவிடம் புலிகளின் நிலைப்பாடு எடுத்துரைப்பு

கத்தோலிக்க ஆயர்கள் பத்துப்பேர் வன்னி சென்று நிலைமைகளை நேரில் அவதானித்து விட்டுத் திரும்பியுள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி வவுனியா புறப்பட்ட அவர்கள் அங்கிருந்து மடு ஆலயத்திற்குச் சென்றனர்.

பின்னர் வன்னியில் வாழும் அகதி மக்களைச் சென்று பார்வையிட்டனர்.

விடுதலைப்புலிகள் இயக்க சிரேஷ்ட தலைவர்களையும் சந்தித்து ஆயர்கள் உரையாடினர்.

யாழ்ப்பாணம், மன்னார் ஆயர்கள் முன்னர் பல தடவைகள் வன்னிப் பகுதிக்குச் சென்று வந்துள்ளனர்.

ஆனால், பத்து ஆயர்கள் ஒரே தடவையில் அப்பகுதிக்குச் சென்றது இதுவே முதல் தடவை ஆகும். கொழும்பு பேராயர்அதி வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ தலைமையிலேயே இப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

மடு மாதாவின் திருப்பவனி கொழும்பு உட்பட தென்னிலங்கையில் அண்மையில் நடைபெற்றது தெரிந்ததே. அச்சமயம் மேற்கொள்ளப்பட்ட சமாதானப் பிரார்த்தனை இயக்கத்தை நிறைவு செய்யும் ஒரு நிகழ்ச்சியாகவே ஆயர்கள் மடு ஆலயத்திற்கு இப்பயணத்தை மேற்கொண்டனர்.

வன்னி நிலைமைகளை நேரில் அறிவதும் புலிகள் இயக்க சிரேஷ்ட தலைவர்களைச் சந்திப்பதும் அவர்களின் இப்பயணத்தின் ஏனைய நோக்கங்கள் ஆகும்.

ஏற்கனவே போடப்பட்ட திட்டத்தின்படி 12 ஆயர்கள் வன்னி செல்ல ஏற்பாடாகி இருந்தது. ஆயினும் இறுதி நேரத்தில் தவிர்க்க முடியாத காரணத்தினால் இரு ஆயர்கள் பயணத்தில் பங்குபற்ற முடியாமல் போய் விட்டது. அவர்களில் முக்கியமானவராகக் கருதப்படுபவர் யாழ் ஆயரான தோமஸ் சவுந்தரநாயகம். இந்தப் பயணத்தின் ஏற்பாட்டளராக கருதப்பட்ட யாழ் ஆயர் சுகவீனம் காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார்.

ஆயர்கள் 10 பேரும் 24ஆம் திகதி செய்வாய்க்கிழமை காலை கொழும்பிலிருந்து வவுனியா வந்து சேர்ந்தனர்.

வன்னிக்குச் செல்வதற்கான அனுமதியைக் கண்டி வீதியில் உள்ள ரம்யா ஹவுஸ் என்ற இராணுவ அலுவலகத்திற்குச் சென்று பெற்றனர்.

ஏனைய வாகன அணிகளுடன் பிரமனாளங்குளம் இராணுவ சோதனை நிலையம் வரை ஆயர்கள் அடங்கிய குழுவினர் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் ஆயர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை அடைந்து மடுத்திருப்பதிக்குச் சென்றனர்.

கொழும்பு ஆயர் அதி வண நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, துணை ஆயர் அதி வண மேரியூட் பீரிஸ், சிலாபம் ஆயர் அதி வண பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ, திருகோணமலை– மட்டக்களப்பு ஆயர் அதி வண கிங்ஸ்லி சுவாம் பிள்ளை, மன்னார் ஆயர் அதி வண இராயப்பு யோசப், கண்டி ஆயர் அதி வண வியனி பெர்னாண்டோ, பதுளை ஆயர் அதி வண வின்சன்ட் பெரேரா, குருநாகல் ஆயர் அதி வண எட்மண்ட பீரிஸ், அநுராதபுரம் ஆயர் அதி வண ஒஸ்வல்ட் கோமஸ், இரத்தினபுரி ஆயர் அதி வண மல்கம ரஞ்சித் ஆகியோரே இப்பயணத்தை மேற்கொண்டவர்கள் ஆவர்.

வவுனியாவிலிருந்து புறப்படுவதற்கு முன் ஆயர்கள் ரம்யா ஹவுஸ் பகுதியில் வைத்து செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது ''தென்பகுதிக்கு பவனியாக வந்த மடுமாதாவைத் தரிசித்து தென்பகுதிப் பவனிக்கு நன்றி செலுத்தவும்—

வன்னியில் உள்ள மக்களின் கஷ்டதுன்பங்களை பார்வையிடவும்—

மற்றும் சந்தர்ப்பம் கிடைத்தால் விடுதலைப் புலித் தலைவர்களை சந்திக்கவுமே தாம் வன்னி செல்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

பிற்பகலில் மடுவைச் சென்றடைந்த ஆயர்களுக்கு இரண்டு நாள் பயணத்திற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அதனால் வன்னியில் ஒரு நிமிடம் கூட வீண் விரயம் செய்ய விரும்பாத ஆயர்கள் மடுவை அடைந்த உடனேயே திருப்பதியில் சிறிது நேரம் வழிபாடொன்றை நடத்திவிட்டு உடனடியாகப் பயணத்தை தொடர்ந்தனர்.

தட்சணாமருதமடு, பாலப்பிட்டி ஆகிய பகுதிகளில் இருக்கும் திறந்த வெளி அகதிகள் முகாம்களுக்கும் சென்றனர்.

அங்குள்ள மக்களுடன் உரையாடி குறைகளைக்கேட்டு அவர்களின் அன்றாட வாழ்க்கை நிலைமையை விசாரித்து அறிந்தபின் மடுத்திருப்பதிக்கு திரும்பி வந்தனர்.

மறுநாள் புதன்கிழமை காலை 6.30 மணிக்கு மடுவிலிருந்து புறப்பட்டு 11.30 மணியளவில் மல்லாவிப் பகுதியை ஆயர்கள் சென்றடைந்தனர்.

அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரான சு.ப.தமிழ்ச்செல்வன் ஆயர்களை வரவேற்றார்.

பின்னர் அங்கு ஆயர்கள் குழுவினரும் – விடுதலைப் புலிப்பிரமுகர்களும் 3 மணி நேரம் உரையாடினர் – புலிகளின் பிரமுகர்களான சுதா, புலித்தேவன், ஜோர்ஜ் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

அப்போது, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும்—

எனவே சமாதான முயற்சிகளுக்கு தொடர்ந்து புலிகள் நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டுமென்றும்—

யுத்த நிறுத்தத்தை தொடர்வதன் மூலம் சமாதான முயற்சிகள் தொடர ஆதரவாக இருக்க வேண்டுமென்றும்— ஆயர்கள் கேட்டுக்கொண்டனர்.

அதற்குப் பதில் அளித்த தமிழ்ச்செல்வன் ''நாங்கள் நான்கு மாதங்கள் ஏற்கனவே யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொண்டோம். அப்போது அரசு எம்மைக் கேலி செய்து அவதூறு செய்தது. பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டது''

''நாம் பலவீனமடைந்ததால் தான் யுத்த நிறுத்தம் செய்துள்ளதாக அரசு சொன்னது. அத்துடன் அரசு வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை வாங்கிக் குவித்துத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது.''

''எனவே அரசு யுத்த முனைப்பில் கவனம் செலுத்து கையில் நாம் நல்லெண்ணத்தைக் காண்பிப்பதில் பயன் இல்லை. நாம் சமாதான முயற்சிக்கு தொடர்ந்து ஆதரவாக இருப்போம் அரசு தனது நல்லெண்ணத்தைக் காட்டி யுத்த நிறுத்தத்தை அமுல் செய்து பேச்சுக்கு வருமானால் விடுதலைப்புலிகளும் மீண்டும் யுத்த நிறுத்தம் செய்வர்.'' இப்படி அவர் கூறினார்.

தமது இந்த நிலைப்பாட்டை தென்பகுதி அரசியல் உயர் மட்டங்களுக்கும் சிங்கள மக்களுக்கும் தெரிவிக்கும் படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

மறுநாள் 26 ஆம் திகதி காலை மடுத் திருப்பதியில் 10 ஆயர்களும் கூட்டுத் திருப்பலி ஒன்றை நடத்திவிட்டு தென்பகுதிக்குப் புறப்பட்டனர்.

அப்போது மடுப்பகுதியில் பெரும் ஊர்வலமாக வந்த மக்கள் ஆயர்களைச் சந்தித்தனர்.

சுமார் 2 ஆயிரம் பேர்வரை ஆயர்களைச் சந்தித்து வன்னியில் கண்ட, கேட்ட விடயங்களை தென்பகுதிக்குச் சென்று சொல்லும்படி கேட்டுக்கொண்டனர்.

தமது கஷ்டங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை ஐ.நா செயலாளர் கோபி அனானுக்கு அனுப்பி வைக்கும்படியும் அவர்கள் கொடுத்து அனுப்பினர்.

வவுனியா ரம்பைக் குளம் புனித அந்தோனியார் ஆலயத்தை பிற்பகல் 2 மணியளவில் ஆயர்கள் வந்தடைந்தனர். அங்கு மதிய போசனம் அருந்திய பின் கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர்.

கொழும்பிலே ஆயர்கள் வெளியிட்ட அறிக்கையில் ''வன்னிப் பிரதேசத்தில் உள்ள எமது சகோதர சகோதரிகளின் நிலைகண்டு வேதனையடைந்தோம். அங்குள்ள ஆயிரக்கணக்கான பிள்ளைகள் போஷாக்கு அற்ற நிலையில் இருப்பது எமக்குக் கவலையைத் தருகிறது'' என்று குறிப்பிட்டுள்ளனர்.

—குமரன்

## தடையை விலக்க வேண்டும் என்கிறார் ஆயர் ரஞ்சித்

வன்னியில் வைத்து ஆயர்கள் செய்தியாளர்களுடன் உரையாடினர்.

அப்போது இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித் ''அரசு விடுதலைப்புலிகளின் தடையை விலக்க வேண்டும் அல்லது விடுதலைப்புலிகளை தடை செய்யும்படி வெளிநாடுகளிடம் கோரிக்கை விடுப்பதையாவது நிறுத்தவேண்டும். யுத்தம் காரணமாக மக்கள் பழிவாங்கப்படக்கூடாது. வன்னிக்கான பொருளாதாரத் தடை விலக்கப்பட வேண்டும்'' என்று கூறினார்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ''மன்னாரில் ஏராளமான மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன. ஆனால் அவற்றில் ஒரு சில மட்டுமே வெளியே தெரியவருகின்றன.''

''பாதிக்கப்பட்ட பலர் பயம் காரணமாக அவற்றைப் பற்றி வெளியே சொல்லாது மறைத்து விடுகின்றனர். ஆனால் தற்போது இரு பெண்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை வெளிக் கொணர முற்படுவது வரவேற்கத்தக்க விடயம்''

''இவற்றுக்கெல்லாம் நீதியான தீர்வு கிடைக்குமா என்பதுதான் சந்தேகம். ஏனென்றால் இவ்வாறான வழக்குகள் மேல் நீதிமன்று மேல் முறையீட்டு நீதிமன்று என்று தொடரும் நிலைமையே காணப்படுகிறது. அது தவிர்க்கப்பட வேண்டும்'' என்றார்.

## நாடு விட்டு நாடு செல்லும் பழக்கம் உள்ள ஆந்தைகள்



ஆந்தைகள் நாடு விட்டு நாடு செல்வது தெரியவந்திருக்கிறது.

தமிழ்நாடு கும்பகோணத்துக்கு ஒரு ஆந்தை வெளிநாட்டிலிருந்து பறந்து வந்து விட்டது. அந்த ஆந்தையைப் பிடித்து வனத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்கள்.

எங்கிருந்தோ பறந்து வந்த ஆந்தை நடுவீதியில் வந்து அமர்ந்தது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஆந்தைக்கு பொதுவாக பகலில் கண் தெரியாது. இரவு நேரத்தில் தான் இரை தேடி வெளியில் வரும்.

ஆனால் தற்போது பிடிக்கப்பட்டுள்ள ஆந்தை பட்டப்பகலில் அகப்பட்டது என்பது குறிப்படத்தக்கது. பழுப்பு நிறத்தில் வளையம் வளையமாக உடல் முழுவதும் உள்ளது. முகம் நல்ல வெள்ளை நிறத்தில் இருக்கிறது.

பிடிபட்ட ஆந்தை கோடியக்கரை காட்டுப் பகுதியில் விடப்படும் என்று வனத்துறையினர் தெரிவித்தனர்.

''பெண் என்றால் பேயும் இரங்கும் எண்டு சொல்வது உண்மைதான்!''

''எப்படிப் பிள்ளை?''

நேற்று நான் சொன்ன விசயத்துக்கு என்ரை மாமியார் சரி எண்டுட்டா!''



## வாசகர் இதயம் பேசுகிறது

விண்வெளியில் இந்திய செயற்கைக்கோள் ஏவப்பட்ட விதம் பற்றி படங்களுடன் படித்து மகிழ்ந்தோம்.

— கே.சிவகுமாரன், பதுளை

நோர்வேயை வெட்டி விடுவதற்காகக் கதிர்காமர் காய் நகர்த்தும் வல்லமை பற்றி சுவைப்படத் தந்திருந்தீர்கள்.

— எம்.எஸ்.மாரிமுத்து, கம்பளை

ஆபத்துக்களைக் கடந்து வன்னி சென்ற பெண் பத்திரிகையாளர் பற்றி எழுதியிருந்த பகுதி சிறப்பு.

— எம்.சி.எம்.சுபைர், மஸ்கெலிய

''பித்தன் பதில்கள்'' சில வெட்டு ஒன்று துண்டு இரண்டாக இருக்கின்றனவே.

— எஸ்.கோமதி, பண்டாரவளை

அரசின் அசமந்தப் போக்கினால் யாழ்ப்பாணத்தில் இலவசப் பாடநூல்கள் தாமதம் அடைந்தது பற்றி ''வடபுலத்தில்'' படித்தபோது ஆத்திரம் ஏற்பட்டது.

— ஆ.கேசவன், வத்தளை

''தாயுள்ளம்'' சிறுகதை சுடர் ஒளிக்கு சுவையைக் கொடுத்தது.

—கே.வேலாயுதம், வவுனியா

வன்னியில் கால் இழந்தவர்களுக்கு செயற்கைக் கால்களை வழங்கும் அரிய சேவை பற்றி வெளிவந்த கட்டுரை பிரமாதம்.

— த.சந்திரசேகரம், அவிசாவளை.

ஏப்ரல் 22 ''சுடர் ஒளி'' அட்டைப்படம் சிறப்பாக இருந்தது. அதிலும் கருணாநிதி – ஜெயலலிதா காட்சிகள் அட்டகாசமாக இருந்தன.

— கே.அக்கீத், செட்டிக்குளம்

சித்தசுவாதீனமற்ற பெண்கள் காமுகர்களால் குதறல் என்னும் செய்தி என்னைக் கலங்கச் செய்துவிட்டது.

— ம.கலைச்செல்வி,டிக்கோயா

நாட்டில் நடக்கும் அடாவடித்தனங்கள், அநியாயங்கள் ஆகியவற்றைத் துணிவுடன் தரும் உங்கள் சேவை அருமை.

— பி.பிரேம்நாத், வவுனியா.

''சுடர் ஒளியில்'' பெண்கள் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள் போல் தெரிகிறதே!

— சோலைக்குயில் ஹஸனி, கல்முனை

தமிழகத்தில் தேர்தல் விளையாட்டு பற்றி சிறப்பாகத் தந்தீர்கள்.

— ரா.சேகர், கம்பளை

பிறேஸ்லி ஜன்னலால் எட்டிப் பார்த்தாள். கடைக்குச் சென்ற மகள் ஜீனா இன்னும் வீடு திரும்பவில்லை. கடை பக்கத்தில் தானிருக்கிறது. நடந்து சென்றாலே ஐந்து நிமிடத்தில் திரும்பிவிடலாம். காற்றுமாதிரி பறந்து சென்ற ஜீனா, அரை மணித்தியாலத்திற்கு அதிகமாகியும் திரும்பவில்லை. அன்னையின் மனம் பதறிக் கொண்டிருக்கிறது.

பெரியதொரு பிரதேசத்தை உள்ளடக்கிய மாடி வீட்டு வரிசை, ஒன்றன் பின் ஒன்றாக பல அடுக்குகளைக் கொண்ட வீட்டு வரிசைகள். இவற்றுக்கு இடையே நீண்ட இடைவெளிகள்.

ஜன்னலால் பார்த்த போது அதன் இடைவெளியின் தொங்கல் வரை ஜீனாவின் சுவடே தெரியவில்லை.

வீடுகள் அமைதியில் ஆழ்ந்துள்ளன. அநேகமாக பெரும்பாலான ஆண்களும் பெண்களும் அலுவலகங்களுக்குப் போயிருப்பார்கள். வீடுகளிலுள்ள ஒரு சிலர் கதவுகளைப் பூட்டிக் கொண்டு தூங்குவார்கள்.

* * *

# ஜீனா எங்கே?



பகல் மணி மூன்று.

அன்னை பிறேஸ்லி வெளியில் வந்தாள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பார்த்தாள். கடை இருக்கும் சந்திவரை ஒரு ஈ, காக்கா கூட கண்களுக்குத் தென்படவில்லை. ஜீனா எங்கே போனாள்? அவளுடைய பிடரி மயிர் சிலிர்த்து உடல் திகிலில் லேசாக நடுங்கியது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஜீனாவைப் போல் ஒரு சிறுமி காணாமற் போனதும் பின்னர் அவளுடைய சடலம் ஆற்றங்கரையில் கிடந்து கண்டெடுக்கப்பட்டதும், பாலியல் வல்லுறவிற்கு சிறுமி உள்ளாகியிருந்தது கண்டு பிடிக்கப்பட்டதும் அன்னையின் நினைவில் பாம்புகளாக தலைவிரித்தாடின.

'ஆண்டவரே என் மகளைக் காப்பாற்றும்.' அவள் வாய்விட்டுச் சொல்லி நெஞ்சில் ஸ்தோத்திரம் போட்டுக் கொண்டாள்.

* * *

அன்னை கடைக்கு வந்தாள்.

''ஜீனா கடைக்கு வந்தாளா?''

கடைக்காரனிடம் கேட்டாள்.

''வந்தாளே பாண் வாங்கிக்கொண்டு போனாள்''

''எத்தனை மணிக்கு?''

பட படவென இயந்திரத்தை தட்டிய அவர் குறிப்பேட்டு புத்தகத்தை எடுத்து ஜீனாவிற்கு வழங்கிய ரசீதின் பிரதியில் குறிக்கப்பட்டிருந்த நேரத்தை கவனித்தார்.

''பிற்பகல் 2.33''

'ஜீசஸ்! என முனங்கிக் கொண்ட பிறேஸ்லி ஐயோ! அரை மணித்தியாலத்திற்கும் மேல ஆகிறதே' என நடுக்கத்துடன் கைகளைப் பிசைந்து கொண்டாள்.




அன்னைக்கு தலைசுற்றுவது போலிருந்தது. எங்கே யாவது விளையாடிக் கொண்டிருப்பாளோ என்ற எண்ணத்துடன் மாடி வீட்டு வரிசைகளின் இடைவெளி களினூடாக நடந்து பல இடங்களிலும் தேடினாள்.

எங்கேயும் அவளைக் காணவில்லை. பிறேஸ்லிக்கு அழுகை அழுகையாக வந்தது. நெஞ்சே வெடித்துவிடும் போலிருந்தது. ஒரே மகள். கண்மணி போல் பாதுகாத்து வளர்த்தாள். எங்கே போனாள் என்றே தெரியவில்லை. மனம் பதறியவளாக ஒரு பைத்தியக்காரியைப் போல நான்கு திசைகளிலும் ஓடத் தொடங்கினாள்.

சார்ள்ஸ் ஒரு குறும்புக்காரன். அன்னையை ஓரிடத்தில் நிறுத்திய அவன் ''யாரைத் தேடுகிறீர்கள்? ஜீனாவையா? அவளை ஒரு கோர்ட் போட்ட முரட்டு ஆசாமி இழுத்துக் கொண்டு போனதைக் கண்டேன்'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

ஐயோ! வென அலறினாள் பிறேஸ்லி.

* * *

தேடுதல் வேட்டை ஆரம்பமானது. முழு குடியிருப் பாளர்களுமே தேடுதலில் மும்முரமாக ஈடுபட்டார்கள்.

பொலிஸுக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அவர்கள் வாகனங்களில் தடல் புடலாக வந்திறங்கினார்கள். குடியிருப்பே கலங்கிவிட்டது.

இன்ஸ்பெக்டர் ஒரு முரட்டு மனிதர். அவருடைய கழுகுப் பார்வையிலும் முரட்டுப் பிடியிலும் சார்ள்ஸ் அகப்பட்டுக் கொண்டான். இன்ஸ்பெக்டர் தன்னை அழைத்தது சாள்ஸிற்கு பெருமையாகவிருந்தது. இது தனக்குக் கிடைத்த பெரிய கௌரவமாக நினைத்த அவன் ஆரம்பம் முதலே புழுகத் தொடங்கினான்.

பையன் ஒரு சவடால் பேர்வழி என்பதைப் புரிந்து கொள்ள இன்ஸ்பெக்டருக்கு அதிக நேரம் செல்லவில்லை. மூட்டுக்கு மூட்டு நாலு பிரம்படிகளை வைத்தார். 'சுளீர் சுளீ'ரென விழுந்த அடிகளினால் இடம் வலம் போட்டு குதித்து நடு நடுங்கிப் போன சார்ள்ஸ் தான் 'ரீல்' விட்டதை ஒப்புக் கொண்டான்.

> பையன் சார்ள்ஸ் ஒரு சவடால் பேர்வழி என்பதைப் புரிந்து கொள்ள இன்ஸ்பெக்டருக்கு அதிக நேரம் செல்லவில்லை. மூட்டுக்கு மூட்டு நான்கு பிரம்படிகளைக் கொடுத்தார். 'சுளீர் சுளீர்' என விழுந்த அடிகளினால் இடம் வலம் போட்டுக் குதித்து நடுநடுங்கிப் போன சார்ள்ஸ், தான் 'ரீல்' விட்டதை ஒப்புக் கொண்டான்.

''ஏன் பொய் சொன்னாய்?''

இன்ஸ்பெக்டர் உறுமினார். அவ ருடைய பற்கள் 'நர நர'வெனக் கடிபட்டன. சார்ள்ஸை பயப்படுத்துவதற்காக அவர் அப்படி நடித்தார்.

''ஜீனா, என்னைக் கேலி பண்ணுவாள்; வல்பம் காட்டு வாள்''

''அப்படியா விசயம். உன்னை மட்டுமா கேலி பண்ணுவாள்?''

''இல்லை பெரியவர்களையும்''

''அடடே அப்படியா? பெரியவர்கள் என்றால்.....?''

''என் பக்கத்து வீட்டு மாமி எலிஸபெத்துக்கும் அவளைப் பிடிக்காது''

தன்னைச் சூழ்ந்து நிற்பவர்களை இன்ஸ்பெக்டர் பார்த்தார். ''எங்கே! எலிஸபெத் மாமியை கூட்டத்தில் காட்டு பார்ப்போம்'' சிறுவனின் கண்கள் சுற்றிச் சுழன்று திரும்பின. கூட்டத்தில் எலிஸபெத் மாமி இல்லை என்பது போல் அவனுடைய உதடுகள் பிதுங்கிக் கொண்டன.

* * *

இரவு 7 மணி.

கடுமையாக மழை விசிறியடிக்கிறது. தேடுதலில் ஈடுபட்டிருந்த சனம் நான்கு திசைக்கும் சிதறியோடிவிட்டது.

ஜீனாவின் தந்தை காரை எடுத்துக் கொண்டு ஊர் முழுவதும் சுற்றி வந்தார். சார்ள்ஸ் சொல்வது போல ஜீனாவை எவராவது கடத்திக் கொண்டு போய் விட்டார்கள் என்று அவர் நினைத்தார்.

குடியிருப்பிற்குள் கார் நுழைகிறது. அதன் முன் விளக்கு வெளிச்சத்தில் நீண்ட கோர்ட் அணிந்த ஓர் உருவம் வீட்டு வரிசையினூடாக செல்வதை அவர் கண்டார்.

மழையினூடே விளக்குகளின் வெளிச்சம் ஊடுருவியதும் அந்த உருவம் எங்கேயோ மறைந்து கொண்டது.

* * *

அன்னை பிறேஸ்லி வீட்டினுள் ஒடுங்கிக் கிடந்தாள். கணவரைக் கண்டதும் ஓடோடி வந்து கட்டிப் பிடித்து அழுதாள். மழைச் சத்தத்தினூடே ஜீனாவின் வீறிடும் அழுகை எங்கேயோ தொலைவில் கேட்டதாக எல்லோரும் சொல்கிறார்கள் என்று அன்னை குமுறிக் குமுறி கதறினாள். இதைக் கேட்டதும் ஜீனாவின் தந்தை வெட வெடவென நடுங்கத் தொடங்கினார். திடீரென ஏதோ வெறி பிடித்தவர் போலானார். அவர் தனது கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு பிறேஸ்லியையும் காரில் ஏற்றிக் கொண்டு காரை வேகமாகச் செலுத்தினார்.

சரசரவென மழைச்சரம் சிதறியடிக்க கார் பறக்கிறது.

''அதோ! அதோ! ஒருவன் நிற்கிறான். பிறேஸ்லி அலறினாள். குப்பை கொட்டும் இடத்தில் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் காலடியில் சாக்கு மூட்டையொன்று கிடக்கிறது. நாயொன்று அதனை இழுக்க முயன்று கொண்டிருந்தது. அவன் நாயை விரட்டிக் கொண்டிருந்தான்.

* * *

அந்த உருவம் வேறு யாரும் அல்ல. இன்ஸ்பெக்டர் நாய் இழுத்துக் கொண்டிருந்த சாக்கு மூட்டையில் ஜீனாவின் சடலம் கிடக்கிறது. பரிசோதனையில் ஜீனாவின் பெண் உறுப்பு சிதைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் அவள் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்படவில்லை. அவ்வாறு அனைவரும் நினைக்கட்டும் என்பதற்காக அது சிதைக்கப்பட்டிருந்தது.

இந்த அருமையான சிறுமியை கொன்றது யார்....?

பொலிஸ் வாகனத்தில் இருந்த எலிஸபெத் மாமியை இன்ஸ்பெக்டர் சுட்டிக் காட்டினார். கொலை நடந்த விவரத்தை அவர் சொன்னார்.

''பாண் வாங்க ஓடிச் சென்ற போது வழமை போலவே எலிஸபெத் மாமிக்கு அவள் வல்பம் காட்டி விட்டுச் சென்றாள். இதனால் ஆத்திரமடைந்த அவள் ஜீனா திரும்பி வரும் வரை காத்திருந்தாள். அவள் வேகமாக ஓடி வந்த போது சட்டென கழுத்தைப் பிடித்து வீட்டினுள் இழுத்தாள். படாரென உள்ளே வந்து விழுந்த ஜீனா மூர்ச்சித்துப் போனாள். அவள் வெகு நேரம் எழும்பவில்லை. ஆதலினால் ஜீனா இறந்து விட்டதாக எலிஸபெத் நினைத்தாள். பயந்து போன அவள் இது ஒரு பாலியல் வல்லுறவு கொலையாக பொலிஸ் நினைக்கட்டும் என்று கருதி கனமான கம்பு ஒன்றினை ஜீனாவின் பெண் உறுப்பினுள் செலுத்தி சிதைத்தாள். திடீரென உணர்வு பெற்ற ஜீனா 'வீ'லென அலறினாள். பின்னர் அவள் உயிர் பிரிந்தது.

சாள்ஸ் கொடுத்த தகவலின் பேரில் எலிஸபெத்தின் வீட்டிற்குச் சென்ற இன்ஸ்பெக்டர் அங்கே ஜீனா வாங்கிய பாணையும் ரசீதையும் கண்டெடுத்தார். எலிஸபெத்தின் மீது சந்தேகம் அதிகரித்தது. விசாரணையின் போது ஜீனாவின் சடலம் சாக்கு மூட்டையில் சுற்றப்பட்டு குப்பை மேட்டில் வீசப்பட்டிருப்பது தெரியவந்தது.

இன்ஸ்பெக்டர் சொன்ன கதையைக் கேட்டு ஜீனாவின் பெற்றோர் மயங்கி விழுந்து விட்டார்கள். எலிஸபெத் ஆயுட்கால தண்டனைப் பெற்றாள்.

# பணம் சம்பாதிக்கக் கவர்ச்சி தேவை என்கிறார் சங்கவி



தொண்ணூறுகளின் மத்தியில்'அமராவதி' படத்தில் அஜித்திற்கு ஜோடியாக அறிமுகமானவர் கன்னடத்துப் பைங்கிளி சங்கவி. அழகும் புஷ்டியான திமிறிய உடற் கட்டும் கொண்டவர். ஆடைக்குறைப்புக்கு அஞ்சாதவர். சக கலைஞர்களுடன் தாராளமாக ஒத்துழைப்புத் தரக்கூடியவர் என்ற மேலதிக தகைமைகளையும் கொண்டிருந்தார்.

இதனால் தானோ என்னவோ! கவர்ச்சி நாயகியாக வலம் வந்தார். இன்றைய தமிழ்த் திரையுலகின் முன்னணி நாயகர்களான விஜய், அஜித், பிரசாந்த் போன்றோரின் ஆரம்பகால கதாநாயகி சங்கவி தான்.

தமிழ்த்திரையுலகில் மட்டுமல்ல, தெலுங்கிலும் தனது கவர்ச்சி நடிப்பினால் முத்திரை பதித்தவர்.

அவ்வப்போது தமிழிலும் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்த சங்கவிக்கு விஜய்யுடன் நடித்த 'ரசிகன்' வெற்றிப்பாதைக்கு அடி எடுத்துக் கொடுத்தது. ஏகப்பட்ட கிளுகிளுப்புக் காட்சிகள் கொண்ட படம் என்பதனால் சங்கவிக்கும் கவர்ச்சி விருந்து வைப்பதற்கு அதிக இடமிருந்தது.

தொடர்ந்து பல படங்களில் நடித்தார். மும்பை வரவுகளின் தாக்கத்தினால் சிறிது காலம் ஒதுங்கியிருந்தவர். இப்போது 'ரிஷி', 'தாலிகாத்த காளியம்மன்', 'ஸ்ரீராஜ ராஜேஸ்வரி' போன்ற படங்களில் நடித்து மீள் பிரவேசம் செய்திருக்கிறார். இப்போது 'புகழ்' படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

சங்கவியுடன் சம காலத்தில்அறிமுகமான நடிகைகள் தொழிலதிபர்களைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு செட்டிலாகி விட்டார்கள். ஆனால் சங்கவி பத்து வருடங்களுக்கும் மேலாக திரையுலகில் நிலைத்து நிற்பதே பெரிய விஷயமல்லவா?

எத்தனையோ பேர் வந்து போகும் திரையுலகில் சங்கவி தொடர்ந்து தாக்குப்பிடிப்பது எப்படி? அதை சங்கவியிடமே கேட்போமா?

கே:மீண்டும் ஒரு ரவுண்ட் வர ஆரம்பித்திருக்கிறீர்கள் போலுள்ளதே?

ப:ஆமாம். வாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றன. சந்தோஷமாக இருக்கிறது.

கே: நீங்கள் நடிக்க ஆரம்பித்து பத்து வருடங்கள் ஆகிவிட்ட போதும் 'ரிஷி', 'தாலிகாத்த காளியம்மன்' போன்ற படங்களில் உங்களுக்கே அதிக காட்சிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு என்ன காரணம்?

ப:அதிஷ்டம், குறிப்பிட்ட பாத்திரத்திற்கு நான் பொருத்தமானவள் என்று தயாரிப்பாளர் நினைத்திருக்கலாம்.

கே: பிரபல சிங்கப்பூர் சஞ்சிகை யொன்றில் நீங்கள் விஜய்யைக் காதலித்ததாகக் கூறியிருக்கிறீர்களே!

ப: ஆமாம். நான் விஜய்யை ஒருதலையாகக் காதலித்தேன். ஆனால் அதைச் சொல்வதற்குத் தைரியம் வரவில்லை. தொடர்ந்து 5 படங்களில் நடித்தோம் அந்த வயது அப்படி! விஜய் என்னுடன் அன்பாகக் கதைப்பார். என்னிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார். அது எனக்குப் பிடித்திருந்தது.

கே: 5 படங்களில் சேர்ந்து நடித்திருக்கிறீர்கள். 'ரசிகன்', 'கோயம்புத்தூர் மாப்பிள்ளை' போன்ற படங்களில் நெருக்கமாக நடித்திருந்தீர்கள். அப்படி இருக்கையில் காதலைச் சொல்லத் தைரியம் வரவில்லை என்று கூறுவது நம்பக்கூடியதாக இல்லையே?

ப: நடிப்பு வேறு. வாழ்க்கை வேறு. நடிப்பில் டைரக்டர் சொல்வதை நடித்துக் கொடுத்து விட்டுப்போவதற்கும் சொந்த வாழ்வில் காதல் வருவதற்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருக்கிறது.

கே: அப்படியானால் நீங்கள் விஜய்யைக் காதலித்தது இன்று வரை அவருக்குத் தெரியாதா?

ப: இல்லை. காதலைச் சொல்லி விட வேண்டுமென்று முடிவெடுத்த போது அவர் மிகவும் உயரத்துக்குப் போயிருந்தார். அந்த இடைவெளி என்னைத் தடுத்து விட்டது. அது என் டீன் - ஏஜ் காதல் என்று கூடச் சொல்லலாம்.

கே: சேரனின் 'பொற்காலம்' படத்தில் அசல் கிராமத்துப் பெண்ணாக நடித்து சங்கவிக்குள்ளும் நடிப்பாற்றல் இருக்கிறது என்று நிரூபித்தீர்கள். ஏன் தொடர்ந்து அதைப்போன்ற வேடங்களில் நடிக்கக் கூடாது?



ப: என்ன ஸார் நீங்கள்! அப்படியான வேடங்களிலேயே தொடர்ந்து நடித்தால் மக்கள் ஏற்பார்களா? இப்போதைய காலகட்டத்தில் ஜனரஞ்சகமான படங்களையே மக்கள் அதிகம் விரும்புகின்றனர். பணம் சம்பாதிக்க கவர்ச்சி கட்டாயம் தேவை.

கே: கவர்ச்சி வேடத்தில் நடித்து பணத்தைச் சம்பாதித்தால் மட்டும் போதும் என்று நினைக்கிறீர்களா? உங்களுக்கென்று இலட்சியம் எதுவுமில்லையா?

ப: இருக்கிறது. முதலில் பணத்தைச் சம்பாதித்து விட்டுப் பிறகு இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள எண்ணியுள்ளேன்.

கே: இப்போது 'புகழ்' படத்தில் சரத்குமாருடன் நடித்து வருகிறீர்கள். அப்படத்தில் உங்களது பங்கைப்பற்றிச் சொல்லுங்களேன்?

ப: யானைப்பாகியாக நடிக்கிறேன். இது வரை தமிழில் யாருமே ஏற்காத வேடம்.

கே: கரெக்டர் ரோல் செய்தாலும் ஜாக்கெட் அணிய மாட்டேன் என்பது உங்களது கொள்கையா? ('பொற்காலம்', 'புகழ்')

ப: எனக்கு வரும் கரெக்டர்கள் அப்படி அமைகின்றன.

கே: சரி. காதல் தான் ஒருதலைக் காதல் ஆகி விட்டது. கல்யாணம் பண்ணிக் கொள்வது எப்போது?


ப: இன்னும் சாதிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. அதற்குள் கல்யாணத்திற்கு அப்படி என்ன அவசரம்! எனக்கென்ன வயதாகியா விட்டது?

— ஷாம்

## பந்தா காட்டுகிறார் சுகன்யா

நீண்ட நாளைக்குப் பிறகு எஸ்.வி.சேகருடன் 'கிருஷ்ணா கிருஷ்ணா' படத்தில் ஜோடி சேருகிறார் சுகன்யா.

கையில் இருப்பதோ இந்த ஒரு படம் தான். ஆனாலும் அம்மணி காட்டும் பந்தாவுக்கு அளவே இல்லையாம்.



ஷூட்டிங் ஸ்பொட்டில் எடுபிடிகளிடம் ''இளநீர் கொண்டா! கூல்ரிங்ஸ் கொண்டா'' என்று அதிகாரம் பண்ணிக் கொண்டிருக்கிறாராம்.

## 'மாளவி' நடிகையின் மறுபக்கம்

'உன்னைத்தேடி' படத்தில் அறிமுகமானவர் ''கறுப்புத்தான் எனக்குப்பிடிச்ச கலரு'' என்று கூறியவர் மாநிற நடிகை. நிறம்தான் மாநிறம் ஆனால் அம்மணி களையானவர். முதல் படத்தில் இன்றைய முன்னணி நடிகர்களுள் ஒருவரான இளமையான ஆறெழுத்து நடிகருடன் ஜோடியாக நடித்தார். நடிகை கவர்ச்சிக்கு அஞ்சவில்லை முதல் படத்திலேயே தாராள மனம் படைத்தவர் என்பதை நிரூபித்தார். இளம் ரசிகர்களை ஏங்க வைக்கும் கவர்ச்சியான படங்கள் அம்மணியைப் பிரபலப்படுத்தின.

அடடா! திரையுலகை ஒரு கலக்குக் கலக்கப் போகிறார் என்று சினிமாத்துறையினர் ஆருடம் சொல்லிக் கொண்டிருந்தனர். இவரின் அடுத்த படம் 'பூப்பறிக்க வருகிறோம்' ஹீரோ அஜய். அஜய்க்கு ஜோடியாக ஒப்பந்தமானார் 'மாளவி' நடிகை. பூப்பறித்தாரோ இல்லையோ! கூட நடித்த ஹீரோவின் மனதைப் பறித்துவிட்டார்.

அம்மணி - அஜய் காதல் விவகாரம் சூடுபிடிக்க ஆரம்பித்தது. பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு இவர்களது காதல் விவகாரத்தை அம்பலப்படுத்தின.


ஒரு வாறு 'பூப்பறிக்க வருகிறோம்' படமும் வெளியானது. ஆனால் எடுபடவில்லை.

காதல் விவகாரம் கசிய ஆரம்பித்ததனால் தயாரிப்பாளர்கள் அம்மணியை ஒப்பந்தம் செய்யத் தயங்கினார்கள். நாங்கள் பணம்கொடுத்து ஒப்பந்தம் செய்துவிட அம்மணி கல்யாணம் செய்து கொண்டு செட்டிலாகி விட்டால் என்ன செய்வது? என்ற சஞ்சலத்தினால் அம்மணியை ஒப்பந்தம் செய்யத் தயங்கினர். அம்மணிக்கு புதுப்பட வாய்ப்புகள் வரவில்லை. ஆனாலும் அவர் கவலைப்படவில்லை. என்ன ஆனாலும் காதல் ஒன்றே பெரிது காதலர் தன்னைக் கைவிட மாட்டார் என்று திடமாக நம்பினார்.

காதலரின் வீட்டில் நடிகையுடனான தொடர்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு வற்புறுத்தினர். முதலில் காதலர் உறுதியாக நின்றாலும் வீட்டாரின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் நடிகையின் காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். நடிகையோ காதலரின் பிரிவைத் தாள முடியாமல் சோகத்தில் தவித்தார். அப்போதுதான் நடிப்பை நினைக்க ஆரம்பித்தார். தயாரிப்பாளர்கள் நடிகையை மறந்து போயிருந்தனர்.

ஆனாலும் அம்மணியை நினைவில் வைத்திருந்த ஜாம்பவான்களுள் ஒருவரான டைரக்டர் மட்டும் வெற்றிக்கொடி நாட்டிய படத்தில் கார்வண்ண நடிகருக்கு ஜோடியாக நடிக்க வாய்ப்புக் கொடுத்தார்.

அம்மணி நடித்த 'கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு' பாடல் பிரபல்யம் பெற்று இன்றும் முன்னணியில் திகழ்கின்றது. ஆனாலும் அம்மணிக்கு வாய்ப்புக்கள் பெரிதாக வரவில்லை.



அடுத்து வந்த ஒரே ஒரு படமான 'சீனு' படமும் சுமார் ரகம்தான். ஆனாலும் ஒரு அதிஷ்டம் பாருங்கள் அம்மணி நடித்த ''நந்தகுமாரா ஓ நந்தகுமாரா'' பாடல் பிரபலமானது. அம்மணி நடிக்கும் படங்கள் ஓடுகிறதோ இல்லையோ அவரின் படங்களில் ஒரு பாடல் எப்படியும் ஹிட் ஆகி விடுகிறது.



சிம்ரனின் தங்கை மோனல் 'பார்வை ஒன்றே போதுமே' படத்தில் அறிமுகமானார்.

அடுத்து இவர் நடித்து வெளியாகியிருக்கும் படம் 'பத்ரி'. இரண்டு படங்களிலும் கவர்ச்சி விருந்து வைத்தாலும் ஏனோ எடுபடவில்லை. அக்கா சிம்ரனை கனவுதேவதையாக ரசித்தவர்கள் தங்கை மோனலை கோணலாக்கி விட்டார்கள். அதுமட்டுமல்ல, அம்மணி காட்டும் ஏகப்பட்ட பந்தாவினால் தங்களது

# கோணல் பாதையில் மோனல்

படத்திற்கு ஒப்பந்தம் செய்ய தயாரிப்பாளர்கள் தயங்குகிறார்கள். மும்பைக்கு விமானம் ஏற முடிவெடுத்த மோனலை மீண்டும் ஒரு ரவுண்ட் வர ஆரம்பித்திருக்கும் அக்கா சிம்ரன் நிறுத்தி வைத்திருக்கிறாராம்.

# அப்பாஸிடம் ஜோடி சேர மறுத்தார் ஜோதிகா

கமல்—சிம்ரன் ஜோடியாக நடித்துவரும் படம் 'பம்மல் கே. சம்பந்தம்'. இதில் ஒரு இளம் ஜோடியும் இருந்தால்தான் படம் களைகட்டும் எனத் தயாரிப்பாளர் எண்ணினார்.

இதனால் அப்பாஸை ஒப்பந்தம் செய்தனர். அப்பாஸுக்கு ஜோடி சேர ஜோதிகாவை அணுகியபோது, 'தெனாலி' படத்தில் கமலுடன் ஜோடி சேர்ந்து விட்டு இன்னொரு கமலின் படத்தில் அப்பாஸுக்கு ஜோடி சேர்ந்தால் தனது இமேஜ் பாழாகி விடும் என்று நினைத்தார் ஜோதிகா. இதனால் கால்ஷீட் இல்லை என்று சொல்லி விட்டாராம்.



கல்யாணம் பண்ணியும் கட்டைப் பிரமச்சாரியாக வாழ்கிறாராம் கஸ்தூரி. அம்மணிக்கு கல்யாணமாகிவிட்டதா? யார் மாப்பிள்ளை



# கஸ்தூரி

என்று விசாரிக்கச் சென்றவர்களிடம் ''நீங்க தவறான அட்ரஸுக்கு வந்து விட்டீங்க'' என்று கூறித் தப்பியிருக்கிறார். அக்கம் பக்கத்தவர்களிடம் விசாரித்தபோது, கஸ்தூரிக்குக் கல்யாணம் ஆகி விட்டதாகவும் அம்மணி போட்ட கண்டிசன் ஒத்து வராததனால் கணவர் கம்பி நீட்டிவிட்டதாகவும் தெரிய வந்தது. ரகசியக் கல்யாணம் என்பதனால் கணவரை மீட்டுக் கொண்டுவருவதற்குச் சட்டத்தில் இடமில்லையாம்.

அஜித்தின் முன்னாள் நண்பி ஹீரா. அஜித்தும் ஹீராவும் நெருக்கமாகப் பழகியதும் பின்னர் விஷயம் அம்பலமாக அஜித் விலகியதும் பழைய செய்திகள்.

ஆனால் இப்போதைய புதிய செய்தியாக ''நாம் நண்பர்களாக இருப்போம்'' என்று ஹீரா அஜித்குமாருக்கு அழைப்பு விடுத்திருக்கிறாராம்.

அஜித் என்ன பதில் சொன்னாரோ தெரியவில்லை. இந்த செய்தி மூலம் உஷாராகியிருப்பவர் திருமதி அஜித்குமார். கணவனும் மனைவியும் சரியாகப் பேசிக்கொள்வதில்லையாம். தன் நேர்மையை எப்படி புரிய வைப்பது என்ற தவிப்பில் இருக்கிறாராம் அஜித்.



# ஹீரா அழைப்பு! அஜித் தவிப்பு!!

''ஜோதிகா என்ன ஜோதிகா மஜ்னு வரட்டும் நான் தமிழ்த்திரையுலகை ஒரு கலக்குக் கலக்குகிறேனா இல்லையா பாருங்கள்'' ஜோதிகா தான் தமிழ்த்திரையுலகில் நம்பர் வண் என்று நண்பர் ஒருவர் கூறியபோதே 'மஜ்னு' பட நாயகி ரிங்கி கன்னா மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். அது சரி அம்மணி, அக்கா ட்விங்கிள் கன்னா அக்ஷய் குமாரைக் கல்யாணம் செய்து செட்டிலாகி விட்டார். நீங்க எப்போது செட்டிலாகப் போறீங்க?

# மஜ்னு வரட்டும் ரிங்கி சவால்



# அடிபட்டார் அமீஷா

'கஹோனா பியார் ஹை' படத்தில் நாயகியாக நடித்தார் அமீஷா பட்டேல். படம் சூப்பர் ஹிட். உடனே தமிழுக்கு இழுத்து வந்து மகனுக்கு ஜோடியாக நடிக்க வைத்தார் பிரசாந்தின் தந்தை. அம்மணியின் கால்ஷீட் பிரச்சினையால் படம் முடிவடையவில்லை. இது இப்படி இருக்க, 'கனோ சசுரிஜி' என்னும் படத்தின் படப்பிடிப்பில் ரசிகர்களின் தொந்தரவைச் சமாளிப்பதற்காக கேட்டைப் பூட்டி படப்பிடிப்பை நடத்தியிருக்கிறார்கள். ரசிகர்களில் மூன்று பேர் கோபத்துடன் வெளியே நின்று கொண்டிருந்த நேரத்தில், அமீஷா அங்கு வந்திருக்கிறார். செட்டுக்குள் போகமுடியவில்லை என்ற ஆத்திரத்தில் அமீஷாவை அடித்து விட்டார்களாம்.

'ஒளி' மயமான நடிகைக்குத்

# திரை மறைவில்

கவர்ச்சி என்று எதுவுமே இல்லை. நம்பர் வண் நிலையை நடிகை அடைந்ததற்குக் காரணம் அவரது அதிஷ்டம் தான் என்று அவரது காது படவே பேசிக் கொண்டார்களாம்.

இதனால் உஷாராகியுள்ள நடிகை தனக்கு நெருங்கியவர்களுடன் கலந்து பேசியதில் தன் தொப்பைதான் கவர்ச்சி காட்டுவதற்குத்தடை என்பது தெரிந்ததாம்.

சமீபத்தில் தனது தொப்பையைக் குறைப்பதற்கு ஒரு சிறிய பிளாஸ்டிக் சர்ஜரி ஒன்றைச் செய்திருக்கிறாராம்.

**

லொள்ளு ராஜா என்று பெயரெடுத்தவர் பிராமிஸ்கிங் 'அரசாண்ட அடிமை' படத்தில் அவருடன் ஜோடி சேர்ந்து நடித்து வருகிறார் லட்சுமிகரமான வெப்சைட் நடிகை.

ஒரு பேட்டியில் நிருபர் ஒருவர் வயதான ஹீரோக்களுடன் ஜோடிசேர்ந்து நடிக்கிறீர்களே ஏன்? என்று கேட்டுவிட்டாராம் அவ்வளவுதான். அம்மணிக்கு கோபம் வந்துவிட்டது. ''யார் வயதானவர் பிராமிஸ் கிங்கிற்கு அப்படியென்ன வயதாகிவிட்டது'' என்று கேட்டு நிருபரை ஒரு வழி பண்ணிவிட்டார்.

**

'குதூகலம்' தரும் தலைப்பு கொண்ட படத்தில் இந்திரனின் மகள் கதாநாயகியாக நடித்திருக்கிறார். படத்திலும் திருமணக் காட்சி ஒன்று இடம்பெறுகிறது. இக்காட்சியை டைட்டிலில் இடம்பெறச் செய்ய எண்ணியிருந்தார் தயாரிப்பாளர். இப்போது நடிகை சுவரேறிக்குதித்து கல்யாணம் பண்ணிவிட்ட செய்தி பகிரங்கமாகி விட்டதால் அந்தக் காட்சியை மாற்ற யோசித்து வருகிறாராம்.

**

காதல் இளவரசன் வெளியூர் படப்பிடிப்புகளுக்குச் சென்று விட்டால் மிகவும் உற்சாகமாகக் காணப்படுவாராம். அதுவும் ஹோட்டல்களில் தங்குவதென்றால் கேட்கவும் வேண்டுமா?

இரவில் மற்ற நடிகர்களுக்குப் போன் செய்து கதாநாயகியின் குரலில் பேசி தன் அறைக்கு வரும்படி அழைப்பாராம். தன்னை அழைத்தது கதாநாயகி நடிகைதான் என நம்பிப் போய் வந்த நடிகர்கள் அவரைக் கண்டு அசடுவழிவதைப் பார்த்துச் சிரிப்பாராம்.

**

பிரபலமான மாம்பழத்தின் பெயரைத் தன் பெயராகக் கொண்டிருக்கும் கவர்ச்சி நடிகை காதல் விவகாரத்தில் சிக்கினார். செய்தி தெரிந்த உறவினர்கள் நடிகையை வீட்டுக்குள் அடைத்து வைத்ததோடு



தேவயானி

காதலைத் தடுக்க மாந்திரீகமும் செய்து நடிகைக்கு மொட்டையும் அடித்தனர்.

ஆனால் நடிகையின் காதலை மாற்ற முடியவில்லை. இப்போது நடிகை வீட்டை விட்டு வெளியேறித் தனியாக வசித்து வருகிறார். எந்தத் தடையுமில்லாது சுதந்திரமாகக் காதலித்து வருகிறாராம் கவர்ச்சி நடிகை. காதலர் கைப்பிடிப்பாரா? அல்லது கைகழுவி விடுவாரா?

# வாழ்த்துக்கள்

ந. தருமலிங்கம்

சுடர் ஒளி சிறுகதை

மனித மனம் எத்தனை விசித்திரமானது, எதிர்பார்ப்புகள் என்பன சிறியனவோ... பெரியனவோ... அவை ஏமாற்றமாகி விடும் போது இந்த மனம் தான் எப்படி உடைந்து போகின்றது.

இவை விசித்திரமா?... இல்லை பலஹீனமா....?

சொக்கநாதருக்குப் புரியவில்லை. எனினும்; அதனை மறக்கவும் முடியவில்லை.

விசயம் ஒன்றும் பிரமாதமான பிரச்சினை இல்லைத்தான். ஆனால்; 'பிரமாதம்' என்ற வார்த்தையின் பரிமாணம் வார்த்தையைப் பொறுத்ததல்லவே. சொக்கநாதரைப் பொறுத்த அளவில் இந்தக் கருத்தில் எந்த முரண்பாட்டிற்கும் இடமில்லை.

— விசயம் இதுதான் —

புதுவருடம் பிறப்பதற்கு இன்னும் சில நிமிடங்களே இருந்தன. எல்லா வீடுகளையும் போல் சொக்கநாதர் வீட்டிலும் அவரது மனைவி பிள்ளைகள் எல்லோரும் புத்தாண்டை வரவேற்கவும் வாழ்த்துக்கள் பரிமாறிக்கொள்ளவும், கோவிலுக்குச் செல்லவும் தயாராகிக் கொண்டிருந்தனர்.

லண்டனிலிருந்து சொக்கநாதரின் மனைவியின் தாய் தந்தையர் தொலை பேசியில் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறி மகிழ்ந்தனர். அம்மா, அப்பா என்ற மகிழ்ச்சியில் சொக்கநாதரின் மனைவியும், 'அம்மம்மா, தாத்தா' என்ற ஆனந்தத்தில் பிள்ளைகளுமாகக் கலகலத்தனர். சொக்க நாதரும் அவர்களுடன் சிறிது நேரம் கதைத்து, வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டபின் கோவிலுக்குப் போகத் தயாரானார்.

பொதுவாக, புத்தாண்டு பிறக்கும் போது கோவிலில் நிற்க வேண்டும். சுவாமி தரிசனம் செய்ய வேண்டும் என்ற சம்பிரதாயங்களில் அதிக நாட்டமில்லாதவர்.

'மனமே கோவில்,' அங்கே மனச்சாட்சி தெய்வம், என்ற சத்திய உணர்வோடு வாழ்பவர்களைத் தேடி தெய்வம் வந்து வாழ்த்துக் கூறும் என்று திடமாக நம்புபவர் அவர். எனினும்;

அன்று என்னவோ; புத்தாண்டு பிறக்கும் போது கோவிலில் நிற்க வேண்டும் என்ற ஆசை அவருக்குள் துளிர்த்துக் கொண்டிருந்தது. இவ்வருட ராசிபலன் அவருக்கு நன்றாக இருந்தது காரணமா...? இருக்கலாம்.

மனைவி பிள்ளைகள் புறப்படு முன்னர் அவர் கோவிலுக்குப் புறப்பட்டு விட்டார்.

கோவிலில் பூசை, அர்ச்சனை எல்லாம் முடித்து மனைவி பிள்ளைகளோடு வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போதுதான் அவருக்குள் திடீரென்று அந்த ஆசை எழுந்தது.

''புதுவருடம் பிறக்கும் போது வீட்டில் இருந்த மனைவி மக்கள் தங்களுக்குள் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டிருப்பார்கள். நான் இப்பொழுதுதானே செல்கிறேன். எனக்கு முதலில் யார் வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள், பார்ப்போம்!''

மனிதர்களுக்கு இப்படித்தான் — சில சமயங்களில் அர்த்தமில்லாத ஆசைகள் எப்படியோ வந்து விடுகின்றன. அவை; அர்த்தமே அற்றவைகளாக மற்றவர்களால்; அதுவும் இரத்தத்தோடு இணைந்த உறவுகளால் ஆக்கப்பட்டு விடும் போது மனம் என்னமாய் சோகித்துச் சுருண்டு போய் விடுகிறது...! அவை தற்செயலானவைகளாக இருந்த போதும்; மனம் அதற்காக எப்படியெல்லாம் தனக்குள் தர்க்கித்துக் கொள்கிறது!?

இந்த யதார்த்தம் சொக்கநாதருக்குத் தெரியாததல்ல. இப்படியான எதிர் பார்ப்புக்களால் அவர் பல இடங்களில் ஏமாற்றங்களைத்தான் அதிகமாகச் சந்தித்திருக்கிறார். அவற்றுக்காகத் தன்னைத் தானே வருத்திக் கொண்டு வாழ்ந்தும் இருக்கிறார். இப்படியான எதிர்பார்ப்புக்களை வளர்த்துக் கொள்வது கூட ஒரு வகையில் வாழ்வியலில் மகிழ்ச்சிகளுக்கு 'ஆப்பு' வைத்து விடுகின்ற அக்கினிப் பரீட்சையாக முடிந்து விடுவதுண்டு என்பதைப் பல அனுபவங்களால் அறிந்திருந்துங் கூட அவருக்கு அன்று அப்படியொரு ஆசை.

''நானே முதலில் வாழ்த்துக் கூறலாம்தான். ஆனாலும்; எனக்கு யார் முதலில் வாழ்த்துக் கூற வேண்டும் என்று உணர்கிறார்கள்?''

சொக்கநாதரின் மனம் சுழன்று வந்தது. மனைவி கூறுவாளா...? இல்லை மகளா...? இல்லையென்றால் மற்றவர்களின் மன நிலைகளையும் மன உளைவுகளையும் சரியாக இனங்கண்டு கொண்டு அதற்கு மருந்து இடுவது போல் பேசுகின்ற, பாசத்தை வெளிப் படுத்துகின்ற பக்குவம் தெரிந்த இளைய மகளா...? அல்லது வெளி நாட்டிலிருந்து வந்திருக்கும் மைத்துனனின் மனைவியா...?

வித்தியாசமான ஒரு தேடலுடனும்; அந்தத் தேடலின் பின்னால் தான் வாழ்த்துத் தெரிவிக்கும் சுகமான சிந்தனைகளுக்குள்ளும் தன்னைச் சிக்க வைத்துக் கொண்டும் தான் சொக்கநாதர் நாற்காலியில் அமர்ந்தார்.

கோவிலால் கொண்டு வந்த அர்ச்சனைக் காளாஞ்சியை சுவாமி அறையில் வைத்து விட்டு சொக்கநாதரின் மனைவி பால் காய்ச்சுவதற்காகச் சமையலறைக்குள் நுழைந்து விட்டாள். மற்றவர்கள் ஆடை மாற்றிக் கொள்ள அறைக்குள் சென்றனர். சொக்கநாதர் மிக அமைதியாக இருந்தார். ஆவலுடனும், அந்த எதிர்பார்ப்புடனும்.

அவருக்குத் தெரியும், முதலில் அவரது மனைவி தான் வாழ்த்துச் சொல்வாள். அதன் பிறகுதான் மற்றவர்கள் தொடங்குவார்கள்.

மனைவி எப்படிச் சொல்வாள்...? "Happy New Year" என்றால். "Same to you" என்று கூறலாம். சில வேளை ''புத்தாண்டு வாழ்த்துக்கள்'' என்று கூறினால்.... 'அப்படியே உங்களுக்கும் ஆகுக' என்று கூறலாமா...? இப்படித்தானே இப்பொழுதெல்லாம் தமிழில் திருப்பி வாழ்த்துகிறார்கள்....?

மனைவி மக்களோடு புத்தாண்டு வாழ்த்துக்கள் பரிமாறிக் கொள்ளப் போகும் சுகத்திற்குள் சொக்கநாதர் சொக்கிப் போயிருந்த போதுதான் அவரது மனைவி தட்டுடன் வந்தாள்.

பிள்ளைகள் லண்டனிலிருந்து வந்திருந்த மாமியுடனும் குழந்தையுடனும் சிரித்துக் கதைத்த படி அமர்ந்திருந்தார்கள். கோவிலில் நிறைந்திருந்த கூட்டம் பற்றி — குழந்தையின் குதூகலம் பற்றி — புதிய



ஆடைகள் பற்றி. இன்னும் என்னென்னவோ.

சொக்கநாதருக்கு மனம் அந்தரித்தது. ''யார் எனக்கு முதலில் வாழ்த்துச் சொல்லப் போகிறவர்...?''

''இஞ்சாருங்கோ....!''

மனைவியின் குரல் கேட்டுத் திரும்பினார் சொக்க நாதர்.

''பால் எடுங்கோ...!''

எல்லோருக்கும் கொடுத்து முடிய தானும் ஒரு பால் கிண்ணத்துடன் நாற்காலியில் அமரப் போன, அவரது மனைவி ''பார்த்தீங்களா....! நான் துண்டா மறந்து போனன்'' என்றவாறு அவசரமாகத் திரும்பினாள்.

சொக்கநாதருக்கு உள்ளமெல்லாம் மகிழ்ச்சி ''நான் போட்ட கணக்குத் தப்ப இல்லை. என்ர மனிசிதான் முதலில் வாழ்த்துச் சொல்லப் போறா!... இவ சொல்லி முடிச்ச பிறகுதான் நான் கோயிலால வரும்போது நினைச்சத சொல்லிக் காட்டிப் பிள்ளையளச் சீண்டிச் சிரிக்க வேணும்.''

நடக்கப் போகும் சந்தோசம் சூழலை மனதிற்குள் எண்ணிச் சிரித்தவாறே தன் மனைவி மக்களுக்கு வாழ்த்துக் கூறத் தானும் தயாராகிக் கொண்ட சொக்கநாதர் ஒன்றும் விளங்காதவர் போன்ற போலிப் பாவனையுடன் கேட்டார்.

''என்ன... என்ன அப்படி அவசர விசயம்?''

''இல்லையப்பா...! நாளைக்கு டான்ஸ் புரோகிராம் பார்க்க கொழும்புக்குப் போக வேணுக்குச் சொன்னனீங்களா...?''

''ஓம் சொல்லியிருக்கு''

ஒற்றை வரிப் பதிலோடு எந்தச் சலனமுமில்லாமல் எழுந்த சொக்கநாதரின் மனம் ஏமாற்றத்தால் வெட்கித்துச் சுருங்கியது.

இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் ஏதோவொரு விதமான வலி.

எதிர்பார்ப்புகளும் அதன் விளைவுகளும் பெரியனவா? அல்லது சிறியனவா? என்பது அவற்றின் பிரமாணத்தைப் பொறுத்ததல்ல. மனத்தின் உணர்வுகளைப் பொறுத்ததல்லவா?

தன் உணர்வுகள், எதிர்பார்ப்புகள் உணரப் படாத நிலையில்; எல்லோருடைய தேவை களையும், எதிர்பார்ப்புகளையும் சுமப்பவனாக மட்டுமே வாழ்வது எத்தனை பெரிய சோகம்.

படுக்கையில் கூட இந்த நினைவை அவரால் தவிர்த்துக் கொள்ள முடியவில்லை. காலை விடிந்து நேரம் ஒன்பது மணியாகி விட்டிருந்தது. எனினும்; கடந்த இரவின் ஏமாற்றத்தை இன்னும் அவரால் மறக்க முடியவில்லை.

சொக்கநாதரைத் தவிர; வீட்டிலிருந்த அனைவருமே நேராகவும் தொலைபேசியிலு மாகப் புத்தாண்டு வாழ்த்துக்களையும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டு கலகலப்புடன் இருந்தார்கள்.

காலையிலாவது; தன்னுடனும் வாழ்த்துப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று யாருக்கும் தோன்ற வில்லையே என்ற நினைவே உள்ளத்துள் பாரமாக அழுத்தியது.

இந்த ஏமாற்றம் இத்தனை தூரம் தன்னைப் பாதிப்பதை எண்ண அவருக்கே வேடிக்கையாக இருந்தது.

கருமாரி அம்மன் கோயிலுக்குப் போய்வரலாம் என்று புறப்பட்டவர் வழியில் இருந்த முத்து மாரியம்மன் கோயிலடியில் சைக்கிளை நிறுத்தி விட்டு இறங்கினார். வழியிலும், கோயிலடியிலும் கூட யாருடனும் சிரித்துக் கதைக்க மனம் வரவில்லை. மனிதர்களைப் பார்க்கவே எரிச்சல், எரிச்சலாக வந்தது.

— மனம் முழுவதும் அதே நினைவு —

''இன்னும் ஒருவர் கூட எனக்குப் புத்தாண்டு வாழ்த்துக் கூறவில்லை''

சீ... என்ன இந்த மனுசி....

மனத்துள் புழுங்கிச் சினந்தபடி — மனம் முழுக்கப் பாரமாய் அடுத்த; கோவில் வாசல்வரை குனிந்த தலை நிமிராமல் வந்தவரை சட்டென்று நின்று நிமிர வைத்தது அந்தக் குரல்;

"Happy New Year... புத்தாண்டு வாழ்த்துக்கள்'' வாழ்த்துக்கள் ஆங்கிலத்திலும், தமிழிலுமாக மாறி மாறி ஒரு இனிமையான பெண் குரல்.

மஞ்சள்நிறப்பட்டுப் புடைவையில் மலர்களும் நெற்றியில் குங்குமமும் நிறைய — கையில் அர்ச்சனைக் காளாஞ்சியுடன் சாட்சாத் முத்துமாரி அம்மன் வாழ்த்திக் கொண்டு நின்றது போல் முப்பது, முப்பத்து மூன்று வயதுகளுடன் அந்தப் பெண் சிரித்தபடி மங்கள ரூபமாக நின்றாள்.

சட்டென்று நினைவுக்குள் வராவிட்டாலும்; பின்னால் சிரித்தபடி வந்த அப்பெண்ணின் கணவரைக் கண்டதும் ''ஓ... வணக்கம் புத்தாண்டு வாழ்த்துக்கள்!''

சொக்கநாதர் ஒருகணம் நெகிழ்ந்து போய் நின்றார். தன்னிடம் எந்தத் தேவையும், எதிர் பார்ப்புமே இல்லாத போதிலும்; தன் கணவரைச் சந்திக்க இரண்டு மூன்று தடவை அவர்களது வீட்டுக்குப் போய் வந்த சந்திப்பில் ஏற்பட்ட நட்புணர்வும், அன்பும், கௌரவித்தலுமாக நின்ற அப்பெண்ணின் பண்பும், பெரிய மனமும், களங்கமில்லாத சிரிப்பும் ஏனோ சொக்கநாதரின் விழிகளை நனையச் செய்தன.

தெய்வத்தை நம்புபவர்களை, ஏதோ ஒரு வடிவில் அந்த தெய்வமே வந்து வாழ்த்தத் தவறுவதில்லை. ஏனென்றால்;

தெய்வங்கள் மனிதர்களல்லவே.



''அவரின் வியாரபத்திலை ''சூடு'' பிடிச்சதாலேயே பெரும் நட்டம் வந்துட்டுது''
''அப்பிடி என்னதான் பிசினஸ் பண்ணினார்?''
''நெருப்புப் பெட்டி பிசினஸ்தான்!''

# குடாநாட்டில் காணாமற்போனோர் குறித்து பரபரப்பான தகவல்கள்!

கடந்த சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியில் குடாநாட்டில் பல இளைஞர்கள் காணாமற்போயிருக்கின்றனர்.

இது தொடர்பாகப் பல முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இக்காலப் பகுதியில் காணாமற்போனோரில் யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் இருவர் உட்பட ஐவர் குறித்து எந்தவித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

புத்தாண்டு காலப் பகுதியில் தாங்கள் எவரையுமே கைது செய்யவில்லை என்று கூறி கையை விரித்து விட்டனர் படை அதிகாரிகள்.

அநேகமாக இவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் தப்பிச் சென்றிருக்கலாம் என்று படையினர் கூறுகின்றனர்.

குடாநாட்டில் தமது இயக்கத்துக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையைப் புலிகள் முழு வீச்சில் ஆரம்பித்திருக்கின்றனர் என்று புலனாய்வுத் துறைத் தகவல்கள் கிடைத்ததை அடுத்து பாதுகாப்புப் படை வட்டாரங்கள் இது விடயத்தில் உஷார் அடைந்திருப்பதாகத் தெரிகிறது.

குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்ட பலர் காணாமற்போன இருண்டயுகத்துக்குப் பின்னர் ஆட்கள் காணாமற்போகும் நிகழ்வுகள் பொதுமக்களுக்கு இன்னமும் பீதியூட்டும் சம்பவங்களாகவே இருக்கின்றன.

வெளியே சென்ற எவராவது வீடு திரும்பாவிட்டால் — அவ்வாறு சென்றவர் இள வயதினராக இருந்தால் — உறவினர்கள் பதறிப்போய் விழுந்தடித்துக் கொண்டு மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கும் படை முகாம்களுக்கும் ஓடுகின்றனர்.

அவ்வாறு காணாமற்போனவர்களில் பெரும்பாலானோர் படை முகாம்களில் வைத்து விசாரிக்கப்பட்ட பின் விடுதலை செய்யப்படுகின்றனர். சிலர் வீட்டில் பெற்றோருக்குத் தெரிவிக்காமலே உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கி நின்றுவிட்டு வீடு திரும்புகின்றனர்.

அதற்கிடையில் அவரைக் காணவில்லை என்ற செய்தி பத்திரிகைகளில் வெளியாகி விடுவதும் உண்மை.

புத்தாண்டு காலப்பகுதியில் காணாமற் போனோர் தொடர்பாகப் பல தரப்பினர் மத்தியிலும் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

யாழ். மத்திய கல்லூரி உயர்தர மாணவன் பாலசுப்பிரமணியம் ஜெயந்தபவன். இவர் கல்வியங்காட்டைச் சேர்ந்தவர். வயது 19.

அதே கல்லூரியைச் சேர்ந்த திருச்செல்வம் யதுர்சன் — இவர் நல்லூர் பண்டாரக்குளத்தைச் சேர்ந்தவர். வயது 18.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் பரமநாதன் பிரதீபன். இவர் புலோலியைச் சேர்ந்தவர். வயது 19. இவர்களே காணாமல் போயுள்ள உயர்தர வகுப்பு மாணவர்களாவர்.

இவர்களை விட நெல்லியடி நகரசபைத் தொழிலாளியான குணரத்தினம் விஜயன் (வயது 19, மூன்றாம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை) என்பவரும் புத்தாண்டு தினத்தன்று காணாமற் போயிருக்கிறார்.

வரணி நாவற்காட்டைச் சேர்ந்த கணபதி ஜயசுவீந்திரன் (வயது 21), சின்னத்துரை கிருபாகரன் (வயது 21) ஆகிய இருவரும் அதே தினத்தன்று காணாமற் போயுள்ளனர்.

புத்தாண்டு காலப்பகுதியில் காணாமற் போனவர்களில் ஆறுபேரும் புலிகள் இயக்கத்தில் இணைந்திருக்கலாம் என்று படை வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

அவ்வாறு புலிகளின் பிரதேசத்துக்கு இளைஞர்கள் செல்வதானால் படையினரின் முன்னணிப் பாதுகாப்பு அரண்களைத் தாண்டியே — கட்டுக்காவலை மீறியே — செல்ல வேண்டும். அது எவ்வாறு சாத்தியமாகிறது என்ற கேள்வி எழுகிறது.

வடமராட்சிப் பகுதியில் உள்ள சில பகுதிகள் ஊடாக — ரகசிய வழிகள் மூலம் — இவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடமராட்சி கிழக்கு மற்றும் பளைப் பகுதிகளுக்குள் ஊடுருவியிருக்கலாம் என்று புலனாய்வுத்துறையினர் நம்புகின்றனர்.

இதனையடுத்து இத்தகைய ஊடுருவும் பகுதிகளில் இளைஞர்களின் சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்களைக் கண்காணிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் புலனாய்வுத்துறையினர் கூறுகின்றனர்.

இதேவேளை, காணாமற் போனோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்திருக்கலாம் என்று கூறப்படும் ஊகங்களை அப்படியே நம்ப முடியாது என்றும் அத்தகையோர் தொடர்பான மர்மம் எப்போதும் போலப் பீதியூட்டுவதாகவே உள்ளது என்றும் யாழ். மனிதநேய அமைப்புகளின் ஆர்வலர் ஒருவர் தெரிவித்தார்.

## படையினர் கண்காணிப்பு

யுத்தநிறுத்த காலப்பகுதியில் குடாநாட்டின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் பெரும் எண்ணிக்கையான விடுதலைப்புலிகள் ஊடுருவி இருப்பதாகப் புலனாய்வுத் துறையினர் எச்சரித்திருப்பதை அடுத்து முக்கிய இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளைப் படையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

ஊடுருவிய புலிகள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் சிறு சிறு தாக்குதல்களில் ஈடுபடக்கூடும் என்று படைத்தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

கிளைமோர் மற்றும் கண்ணிவெடித் தாக்குதல்கள் குறித்து காவல் கடமையில் ஈடுபடும் சிப்பாய்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

வீதியோரங்களில் அகழ்வு வேலைகள் நடைபெறும் போது அவற்றைக் கண்காணிக்குமாறு கிராம அலுவலகர்கள் பணிக்கப்பட்டிருக்கின்றனர்.

தொலைபேசி இணைப்புகள், தண்ணீர் விநியோகம் மற்றும் இவைபோன்ற வேறு தேவைகளுக்காக வீதியோரங்களில் குழிகளை வெட்டும்போதும் அவற்றை மூடும்போதும் — கிராம அலுவலர்கள் அதனைக் கண்காணிக்க வேண்டியது அவசியம் என்று பிரதேச செயலர்களுக்குப் படையினர் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளனர்.

வீதியோரங்களில் அமைக்கப்படும் குழிகளைப் பயன்படுத்தி இராணுவ வாகன அணிகள் மீது கிளைமோர்க் கண்ணித் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று அஞ்சியே படையினர் இந்த உத்தரவுகளை விடுத்திருப்பதாக அறியவருகிறது.

## மீண்டும் போர்ச் சூழல்

குடாநாட்டுப் போர்முனைகளில் மீண்டும் சண்டை மூண்டிருக்கிறது.

மக்கள் மீண்டும் போர்ச் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

போர்முனைகளில் இருந்து சடலங்கள் மீண்டும் யாழ் நகரின் மத்தியில் உள்ள போதனா ஆஸ்பத்திரிக்கு வரத் தொடங்கி உள்ளன.




எழுதுமட்டுவாழ் பகுதி சண்டையில் உயிரிழந்தவர்கள் எனத் தெரிவித்து மூன்று பெண்கள் உட்பட ஏழு பேரின் சடலங்கள் கடந்த வாரம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

நீண்டகாலமாகப் பெரும் எண்ணிக்கையான சடலங்களைக் கண்டு பழகிப் போன யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் கடந்த வாரம் வேதனையுடன் வெளியிட்ட தகவல் இது.

''போரில் இறந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் களின் சடலங் கள் மிகவும் அலங்கோலமான நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படுகின்றன.''

''சண்டையின் போது உடைகள் கிழிந்த நிலையிலும், உடைகள் இன்றி நிர்வாண நிலையிலும் எடுத்து வரப்படும் சடலங்கள் பலபேர் பார்த்து நிற்க ஆஸ்பத்திரிக்குள் இறக்கப்பட்டு சவச்சாலைக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன.''

''இளம் பெண்களின் சடலங்கள் கூட அரைகுறை ஆடைகளுடன் கொண்டுவரப்படும் காட்சி சகிக்க முடியாததாக இருக்கிறது. பலரும் இது கண்டு மனதுக்குள் வெதும்புகிறார்கள்.''

''இந்த அவலநிலையை தவிர்த்து சடலங்களை மூடி மறைத்து எடுத்து வரக்கூடாதா?''

— இவ்வாறு ஆஸ்பத்திரி ஊழியர்கள் சிலர் அடிக்கடி பேசிக்கொள்கின்றனர்.

போரில் இறப்பவர்கள் இறந்த பின்னர் எதிரிகள் அல்லர்.

சர்வதேச போர் மரபுகள், மனிதாபிமானச் சட்டங்கள் இதை வலியுறுத்துகின்றன.

ஆனால் இங்கு கள நிலைமைகள் வேறு விதமாக இருக்கின்றன.

## தென்மராட்சி அபிவிருத்தி கேள்விக்குறி

விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்தத்தைக் கைவிட்ட கையோடு ஆனையிறவை நோக்கிப் படையினர் ஆரம்பித்திருக்கும் 'அக்கினிச் சுவாலை' இராணுவ நடவடிக்கை தென்மராட்சிப் பிரதேசத்தை மீண்டும் ஆபத்துக்கள் நிறைந்த யுத்தமுனையாக மாற்றி விட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் பெரும் போர் மூண்டு பேரழிவைச் சந்தித்தது தென்மராட்சி.

பெரிய வர்த்தக மையமான சாவகச்சேரி நகரம் உட்படப் பெரும் பிரதேசம் பூகம்பம் தாக்கிய பகுதி போல அழிவுண்டுபோனது.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் வீடுவாசல்களைவிட்டு வடமராட்சிக்கும் வலிகாமம் பகுதிக்கும் ஓடினர்.

இந்த நிலையில் தென்மராட்சியில் தாங்கள் முன்னேறி நிலைகொண்டிருந்த பிரதேசங்களைக் கைவிட்டு — தந்திரோபாயம் கருதி — புலிகள் கடந்த ஆண்டு இறுதியில் பின்வாங்கினர்.

எனினும் அது ஒரு தற்காலிக நடவடிக்கையே என்றும் பொதுமக்கள் அவசரப்பட்டு அப்பகுதிகளில் மீளக்குடியமரக் கூடாது என்றும் புலிகள் பொதுமக்களை எச்சரித்திருந்தனர்.

கடந்த டிசம்பரில் புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் அறிவித்ததைத் தொடர்ந்து சமாதான நம்பிக்கை துளிர் விட்டது. இதனால் சற்று நிம்மதி அடைந்த பொதுமக்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று மீளக்குடியமரத் தலைப்பட்டனர்.

மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதை அரசு படைத்தரப்பின் மூலமும் சில அரசியல் சக்திகள் ஊடாகவும் ஊக்குவித்தது.

எனினும் பொதுமக்கள் மெல்ல மெல்லத் தயக்கத்துடனேயே தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்லத் தொடங்கினர்.

கடும் போர் நடைபெற்ற கைதடி, நாவற்குழி பகுதிகளிலும் தென்மராட்சியின் கிழக்குப் பகுதியிலும் கணிசமான குடும்பங்கள் தற்காலிக ஏற்பாடுகளுடன் சென்று குடியமர்ந்தன.

ஆனால் மக்கள் அங்கு நிரந்தரமாகக் கால் ஊன்றுவதற்கு முன்னரே தென்மராட்சி அபிவிருத்தித் திட்டம் ஒன்றை வகுப்பதில் அரசு தீவிர அக்கறை காட்டியது.

அதன்படி அழிவுண்டு போன தென்மராட்சிப் பிரதேசத்தைப் புனரமைக்கும் பெரிய அளவிலான திட்டத்துக்கு ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

இது தொடர்பான ஏற்பாடுகளை வடக்கு மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை (றாண்), வடக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சு ஆகியவற்றின் வழிகாட்டலின் படி யாழ். அரச அதிகாரிகள் தீவிரமாக மேற்கொண்டு வருகின் றனர்.

தென்மராட்சி புனரமைப்புத் திட்டம் தொடர்பான ஆய்வுப்பட்டறை ஒன்றுக்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஆனால் இந்தத் திட்டங்கள் எல்லாம் எதிர்பார்க்கப்பட்டபடியே கேள்விக்குறியாகிப் போயிருக்கின்றன.

தென்மராட்சியின் பெரும் பிரதேசம் மீண்டும் யுத்த களமாகி இருக்கிறது.

மீளக்குடியமர்ந்த மக்கள் மீண்டும் அங்கிருந்து மூடை முடிச்சுகளுடன் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

தென்மராட்சியில் எத்தனை குடும்பங்கள் மீளக் குடியமர்ந்தன என்ற விவரங்களை அதிகாரிகள் சரியாகத் திரட்டி முடிப்பதற்கு முன்னரே அங்கு அத்தியாவசிய சேவைகளை — கல்வி வசதிகளை — மிகச் சொற்ப அளவிலேனும் ஆரம்பித்துவிடத் திட்டமிட்டு அதற்கான முன் முயற்சிகளில் அதிகாரிகள் இறங்கியிருந்த சமயம் மீண்டும் அந்தப் பிரதேசத்தை விட்டு மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

தற்போது இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்க வேண்டிய நிலை அரச அதிகாரிகளுக்கு மீண்டும் ஏற்பட்டிருக்கிறது.

எழுதுமட்டுவாழ், முகமாலைப் பகுதிகளில் இருந்து சண்டையை ஆரம்பித்துள்ள படையினர் தொடர்ந்து முன்னேற முயன்றால் மேலும் தீவிரமான யுத்தம் வெடிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'அக்கினிச் சுவாலை' நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினரைத் திசை திருப்ப தென்மராட்சியில்வேறு எங்கேயாவது ஒரு புதிய போர் முனையைப் புலிகள் திறந்தால் தென்மராட்சிப் பிரதேசம் முழு அளவில் யுத்த களமாகும் வாய்ப்பும் இருக்கிறது.

இந்தப் பின்னணியில் பெரும் தொகை நிதிச் செலவிலான தென்மராட்சிப் புனரமைப்புத் திட்டம் புஸ்வாணமாகி இருக்கிறது.

நிரந்தர சமாதானம் என்ற பலமான அத்திவாரத்தின் மீது தான் குடாநாட்டுப் புனரமைப்புப் பணி சாத்தியமாகும் என்பதை சகல தரப்பினரும் உணர்ந்து கொள்வதற்கு இதுவே தக்கதருணம். தென்மராட்சி நிலைமை அதற்குச் சிறந்த உதாரணம்.

இந்த நிலைமையைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு அரை குறை அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முனைவது 'ரோமாபுரி எரியும் போது பிடில் வாசித்த மன்னனின்' கதை போலவே இருக்கும்.

## இளசுகளின் சொர்க்கபுரி

யாழ். குடாநாட்டின் தீவுப் பகுதி இப்போது இளசுகளின் சொர்க்க புரியாக மாறியிருக்கிறது.

குடாநாட்டின் பலபகுதிகளிலும் இருந்தும் 'பிக்னிக்' என்ற பேரில் நெடுந்தீவுக்குச் செல்லும் இளவட்டங்கள் அங்குள்ள பெயர்பெற்ற கடற்கரைகளைத் தங்கள் உல்லாச புரியாக மாற்றிக் கொண்டுள்ளனர்.

வெளியே சொல்ல முடியாத அளவுக்கு அருவருப்பான, அசிங்கமான காட்சிகளை அங்கு தாராளமாய்க் காண முடிகிறது.

அந்த இடங்களில் தற்போது தமிழர் கலாசாரத்துக்கு ஒவ்வாத — தமிழர் பண்பாட்டைச் சீர்குலைக்கின்ற — செயல்களில் இளைஞர்களும் யுவதிகளும் ஈடுபட்டு வருகின்றனர். என்று நெடுந்தீவு வாசிகள் முறையிட்டிருக்கின்றனர்.

யாழ். நகரத்தைச் சேர்ந்த பிரபல உயர் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களும், மாணவிகளும் கூட இந்தக் கடற்கரைகளில் களியாட்டம் புரிந்து வருகின்றனர் என்று தகவல்.

கடந்த வாரம் நெடுந்தீவுக்குச் சுற்றுலா சென்ற உயர் கல்வி நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த சில மாணவர்களும் மாணவிகளும் அங்குள்ள கடற்கரை ஒன்றில் தங்கி நின்று இரவு நேரத்தில் மிகவும் தகாத முறையில் நடந்து கொண்டனர் என்ற அதிர்ச்சித் தகவல் கிடைத்திருக்கிறது.

— வலிகாமத்தான்

# பட்டங்களல்ல, பாடசாலைகளை சேவைகளே தலைநிமிர வைக்கின்றன

## எரிச்சலும், பொறாமையும் சமூகத்துக்குச் செய்யும் துரோகம்

**மலையகக் கண்ணோட்டம்**

இரா. புத்திரசிகாமணி

ஆசிரியர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள போட்டி, பொறாமையினால் மலையகத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சி அடுத்த பாடசாலைக்குப் பிடிப்பதில்லை. ஓர் ஆசிரியருக்குக் கிடைக்கும் கௌரவமும் வரவேற்பும் மற்றைய ஆசிரியருக்குப் பொறுக்க முடிவ தில்லை. இதனால் ஒருவர் மீது ஒருவர் குறை கண்டு பிடிப்பதிலும், சேற்றை வாரி வீசுவதிலும் நேரத்தை வீணாக்குகின்றனர்.

பாடசாலையின் தரத்தை உயர்த்த வேண்டும், கடமை உணர்வுடன் பணிபுரிய வேண்டும் என்று ஆசிரியர்கள் பலரும் நினைப்பதில்லை.

உதாரணமாக சப்பிரகமுவா மாகாணத்தை எடுத்துக் கொள்வோம். மாகாணக் கல்வி அலுவலகத்தில் மேலதிக கல்விப் பணிப்பாளர் உட்பட மூன்று தமிழ் பேசும் சிரேஷ்ட அதிகாரிகள் இருக்கின்றனர்.

இதே போன்று பலாங்கொடை, இரத்தினபுரி பிரதேச வலயக் கல்வி அலுவலகங்களிலும் உதவிப் பணிப்பாளர் களாகவும், ஆசிரிய ஆலோசகர்களாகவும் தமிழ்பேசுவோர் கடமையாற்றுகின்றனர். இவர்கள் தமக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய தமது சேவைகளைச் செய்கின்றனர். இதனை மறுப்பதற்கு இல்லை.

இரத்தினபுரி மாவட்டத்தில் இறக்குவானை பரி.யோவான் தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை ஜெயிலானி தேசிய பாடசாலை, பலாங்கொடை பசறை தமிழ் மகா வித்தியாலயம், காவத்தை தமிழ் மகாவித்தியாலயம் என்பன குறுகிய காலத்தில் வளர்ச்சி அடைந்து வரும் தமிழ்ப் பாடசாலைகள்.

இங்கு பணியாற்றும் ஆசிரியர்களிலும் 95 சதவீதமானோர் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். பலர் இப் பாடசாலைகளின் பழைய மாணவர்கள். இவர்கள் மிக அக்கறையுடனேயே தமது கடமைகளைச் செய்கின்றனர்.

இவற்றில் இறக்குவானை பரி.யோவான் தமிழ் மகா வித்தியாலயம் குறிப்பிடத்தக்கது. இங்கு பட்டதாரி ஆசிரியர்களும் இல்லை. பட்டதாரி அதிபரும் இல்லை.

இப்பிரதேசத்தில் பிறந்து வளர்ந்து, இதே பாடசாலையில் படித்தவர்களே கல்வி போதிக்கின்றனர்.

1983 ஆம் ஆண்டின் பின் வடக்கு–கிழக்கு மாகாணத்தில் இருந்து வந்த ஆசிரியர்கள் சென்றபின் முழுப் பொறுப்பையும் இவர்கள் ஏற்றுச் செயற்படுகின்றனர்.

மலையகத்தில் பொதுவாகவே கணித பாடத்தில் வளர்ச்சி இல்லை. விஞ்ஞானப் பாடத்தில் மட்டம் என்று கூறப்படுகிறது.

ஆனால் இப்பாடசாலை அதற்கு விதிவிலக்கு. ஆரம்ப வகுப்புகள் முதலே கணித பாடத்தில் அபார வளர்ச்சி காணப்படுகிறது. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சி.ஈ. சாதாரண, உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் மாண வர்கள் பெற்றிருக்கும் பெறுபேறுகள் சகல வசதிகளையும் கொண்ட சிரேஷ்ட பாடசாலைகளையும் பின் தள்ளிவிட்டன. அத்தனைக்கும் இந்த ஆசிரியர்கள் பட்டதாரிகள் அல்லர்.

இதோடு நின்று விடவில்லை. கலை, கலாசாரப் போட்டிகள், இலக்கியப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், தமிழ்த் தினப் போட்டிகள் என பங்கு பற்றி அகில இலங்கை ரீதியிலும் பல பதக்கங்களை இவர்கள் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலை மாணவர் கணித பாடத்தில் காட்டும் அபாரத் திறமைகளைக் கண்ட இப்பிரதேசத்தில் உள்ள ஏனைய பாட சாலைகளின் அதிபர்களும், பெற்றோர்களும் இப்பாடசாலையின் உதவியை நாடுகின்றனர்.

தமது பாடசாலைக்கு வந்து பிரத்தியேக வகுப்புக்களை வையுங்கள் என வலிந்து கேட்கின்றனர்.

இப்படி வகுப்புகளை நடத்துவது தவறாகாது. தனிப்பட்ட வகுப்புகளை நடத்துவதால் பாடசாலை மாணவர் களின் பெறுபேறுகளில் வீழ்ச்சி ஏற்பட்டால் குறை கூறலாம். நாளுக்கு நாள் முன்னேற்றம் தானே ஏற்பட்டுள்ளது.

ஒரு பாடசாலை இப்படி சிறப்புப் பெற்றால் அப்பாடசாலையின் அதிபர் கட்டாயம் ஒரு பட்டதாரி ஆசிரியராகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தால் அதைப் பொய்யாக்கி விட்டது இப்பாடசாலை.

இங்கு கடமையாற்றுபவரும் ஒரு சாதாரண பயிற்றப்பட்ட முதலாந்தர அதிபரே.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு பட்டதாரிகள் தான் வேண்டும் என்பதில்லை. கடமை உணர்வும், சேவை மனப்பான்மையும், பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறையும் கொண்ட ஆசிரியர்களே தேவை.

இந்த அடிப்படையிலேயே இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் இப்பாடசாலைகளின் வளர்ச்சியில் பொறாமையும் எரிச்சலும் கொண்ட மறு பகுதியினர் சேற்றை வாரி வீசத் தலைப்பட்டிருப்பது வேதனைக்குரியது.

கண்ணாடி வீட்டில் இருந்து கல் எறியக் கூடாது என்பார்கள். தாங்களும் ஆசிரியர்களாக இருந்து கொண்டு அடுத்த ஆசிரியர்களைப் பற்றி தவறாகப் பிரசாரப்படுத்து வது நாகரிகமான செயலாகவும் அமையாது. அது நற்பண்பாகவும் இருக்காது.

இப்படியான செயல்கள் தனிப்பட்ட பாடசாலைகளையோ அல்லது ஆசிரியர்களையோ மட்டும் பாதிப்பதில்லை.

ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படும் மனத் தளர்வும், விரக்தியும் அப்பாடசாலையின் வளர்ச்சியையே ஆட்டம் காணச் செய்து விடும்.

தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துவதை விட்டு அவர்களை மட்டம் தட்ட முனைவது மலையக சமுதாயத்துக்கே செய்யும் துரோகம் ஆகும்.

## அக்கினிச் சுவாலை இழப்புக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு

**–சந்திரசேகரன் எம்.பி. குற்றச்சாட்டு**

அக்கினி சுவாலை படை நகர்வின் போது 400க்கும் அதிகமானோர் பலியாகினர். ஆயிரக்கணக்கானோர் காயம் அடைந்தனர். இதற்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

" நோர்வேயின் சமரச முயற்சி ஆரம்பிக்கப்பட்டதி லிருந்து புலிகள் மிகவும் நேர்மையுடனும் பொறுப்பு ணர்ச்சியுடனும் நடந்துகொண்டு வருகின்றனர். ஆனால் அரசாங்கம் உலகை ஏமாற்றுவதற்காக நாடகம் ஆடுகிறது போன்றே தெரிகிறது"

"அரசாங்கம் இதேபோன்ற போக்கைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் உலகம் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் நிலைமை நிச்சயம் உருவாகும். தற்போதைய அநியாயமான உயிரிழப்புக் களைத் தவிர்த்துக்கொள்ள அரசாங்கம் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்"

"நோர்வேயின் சமரச முயற்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அரசாங்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைப்பாட்டை எடுக்கவில்லை." இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

# பித்தன் பதில்கள்

அ. மாலா, மட்டக்களப்பு.

கே : உலகில் முதன் முதலாக விண் வெளிக்கு உல்லாசப் பயணம் மேற் கொண்டுள்ள அமெரிக்கரான டெனிஸ் டிட்டோ பற்றி...?

ப : சொல்ல என்ன இருக்கிறது? பயணத் துக்காக 2 கோடி டொலர்களை சர்வ தேச விண்வெளி நிலையத்துக்கு செலுத்திய உல்லாச மன்னனாயிற்றே!

க.தேவி, மோதர.

கே : புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்து இனியும் நாம் பேசலாமா பித்தனே?

ப : பேசலாம்...! ஒரு சிறிய மாற்றத்துடன். புரிந்துணர்வு–இல்லா–உடன்படிக்கை பற்றி...!

எஸ்.முகைதீன், திருமலை.

கே : பித்தனே மனைவியின் அன்பைப் பெற ஒரு வழி சொல் லுங்களேன்..!

ப : சமையலையும், சலவையையும் நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள்.



ஆர். றொபேட், நீர்கொழும்பு.

கே : இராணுவத்திலும் தற்கொலைப் படைப் பிரிவு வேண்டும் என்று கேட்கிறார்களாமே...!

ப : கூலிப்படைக்கும் விடுதலைப் படைக்கும் உள்ள வித்தியாசமே இதுதானே...! பிறகெப்படி...?

பைறோஸ், சாய்ந்தமருது–11.

கே : சிந்திக்கக் கூடிய விடயம் ஒன்று கூறுங்கள்?

ப : எறும்பின் உழைப்பு!

பி.குலம், வெள்ளவத்தை.

கே : பித்தனே நேற்று இரவு நான் ஒரு நல்ல கனவு கண்டேன் எனக்குத் திருமணம் ஆவதுபோல.

ப : நேற்று இரவு நானும் ஒரு நல்ல கனவு கண்டேன் எனக்கு விவாகரத்து ஆவதுபோல.

கே. செல்வேந்தி, கோப்பாய்.

கே : ஜெயலலிதா முதல்வராக வர வாய்ப்பு உண்டா பித்தனே?

ப : திருப்பிக் கேட்கிறேன், தகுதி நீக்கம் செய்யப்பட்டவர் முதல்வராக முடியுமா..?




ரா.சேகர், கம்பளை

கே : படுத்ததும் உறக்கம் வர முதலில் என்ன செய்ய வேண்டும்?

ப : படுக்க வேண்டும்.

இ. அகிலன், பண்டாரிக்குளம்.

கே : பங்களாதேஷ் கிரிக்கெட் அணி சிம்பாப்வேயுடனான டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடியுள்ளதே...!

ப : பங்களாதேஷ் அணியும் பலமான அணிதான். மிகச் சிறந்த வீரர்கள் பலர் அந்த அணியில் விளையாடி வருகிறார் கள். அதிநவீன உத்திகளை மற்ற அணிகள் கையாளும் வேளையில் அவர்கள் மரபு ரீதியிலான வழிமுறை யில் விளையாடுகிறார்கள். அதுதான் அவர்களது தோல்விகளுக்குக் காரணம்.

மு.அசோக், யாழ்ப்பாணம்.

கே : சந்தோசமான ஒரு வார்த்தை சொல்லுங்களேன். பித்தனே?

ப : அக்கினிச்சுவாலை அணைந்தது உமக்கு சந்தோசம் தானே?

பே.தர்சி, தட்டாதெரு.

கே : விதியை நம்புகிறீர்களா பித்தனே?

ப : தமிழரின் நிலையைப் பார்க்கும் போது ஏன் அதை நம்பக் கூடாது?

எஸ்.புஸ்பராஜா, ஆனைக்கோட்டை

கே : பேச்சுவார்த்தைக்கு வருமாறு புலிகளுக்கு அரசு மீண்டும் அழைப்பு விடுத்திருக்கிறதே. புலிகளின் யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி இருக்கலாம்தானே...!

ப : அரசும் யுத்தநிறுத்தம் செய்திருந் தால் பேச்சுவார்த்தையில் இருந்து நழுவி இருக்கமுடியாதே.

ஏ.ராகுலன், புத்தளம்.

கே : இலங்கைக் கிரிக்கெட் அணிக்குத் தங்கக் கிண்ணம் பரிசு கிடைத்தது பற்றி...?

ப : வெற்றியும் தோல்வியும் சகஜம் தானே. இலங்கையில் ஒரு வாரத்துக் குள் இரண்டும் நடந்து விட்டன.

எஸ். அன்ரனி, மன்னார்

கே : உண்மைக்கும் பொய்க்கும் உள்ள இடைவெளி பற்றி...?

ப : மன்னார் பாலியல் வல்லுறவுச் சம்பவத்துக்கும், இராணுவப் பேச்சாளரின் உரைக்கும் இடையிலான இடைவெளி தான்.

எஸ்.மீனா, நம்பொடை.

கே : அரசியல் தலைவர்களை காரண மின்றிக் கைது செய்து சிறையில் அடைக்கும் பாகிஸ்தான் அரசுபற்றி..?

ப : இராணுவ சர்வாதிகார ஆட்சியின் சிறப்பம்சங்களில் இதுவும் ஒன்று!



ஆர்.ஜே.தீப், கொழும்பு.

கே : இந்திய அரசையே அதிரவைத்த ஆயுத பேர ஊழல் விவகாரத்தை அம்பலமாக்கியது யார்?

ப : 'தெஹல்கா.கொம்' என்ற இணையத்தளப் பத்திரிகைதான் இவ்விவகாரத்தை அம்பலமாக் கியது. கிரிக்கெட் ஆட்ட நிர்ணயச் சதி தொடர்பான பல தகவல்களைப் பகிரங்கப்படுத்தி யதும் இதே பத்திரிகைதான்.



தெஹல்கா.கொம் தளத்தின் ... தேஜ்பால்.

அ. பத்மநாதன், வெள்ளவத்தை

கே : அக்கினிச் சுவாலை இராணுவ நடவடிக்கையின் போது, 62 குழல்களைக் கொண்ட பல்குழல் ரொக்கட் லோஞ்சர்களைப் புலிகள் பயன்படுத்தியதாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தெரிவித்திருக் கிறாரே. படையினர் பின் வாங்க அது தான் காரணமா?

ப : ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மாங்குளம் மீதான தாக்குதல்களின் போது புலிகள் முதல் தடவையாக ஆறு குழாய்களை உடைய பல்குழல் ரொக்கட் லோஞ்சர்களைப் பயன் படுத்தினர். பின்னர் ஆனையிறவு முகாம் மீதான தாக்குதலின் போதும் புலிகளினால் கூடுதல் வலு உள்ள பல்குழல் ரொக்கட் லோஞ்சர்கள் பயன்படுத்தப்பட்டன. இதனை அடுத்து படைத்தரப்பு 40 குழல்களை உடைய பல் குழல் ரொக்கட் லோஞ்சர்களை செக் குடியரசிலிருந்து தருவித்து குடா நாட்டைக் கைப்பற்றும் புலிகளின் முயற்சியை முறியடித்தது. தற்பொழுது புலிகளுக்கு 62 குழல்கள் உடைய பலகுழல் ரொக்கட் லோஞ்சர்கள் கிடைத்துள்ளனவாம். ஆகவே வடக்கு போர் முனையில் புதிய திருப்பம் ஏற்படலாம்.

ரா.சேகர், கண்டி.

கே. : சிறந்த பத்திரிகையாளர் விருது பெற்ற லண்டன் சண்டே ரைம்ஸ் செய்தியாளர் மாரி கொல்வினுக்கு நடந்தது தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவருக்கு நடந்திருந்தால் என்ன கிடைத்திருக்கும்?

ப : பயங்கரவாதி என்ற பெயர் கிடைத்திருக்கும்.

# ராசி பலன்

**06.05.2001 முதல் 12.05.2001 வரை**
**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1**

இராசிக்கு இருபுறமும் சுக்கிரனும் குருவும் பக்கபலமாக இருப்பது விசேஷம். இராசியில் சூரியன் பூரண பலன் பெற்று இரப்பது யோகம். கையில் பணம் தங்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். குடும்ப உறவு சீராக இருக்கும். பிரயாண வாய்ப்பு தடைப்படலாம். தேக ஆரோக்கியம் உண்டு. தொழில்துறையில் பிரச்சினை உருவாகும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4, ரோகினி, மிருகசீரிடம் 1,2**

இராசிநாதன் இலாபத்தானத்தில் உச்சமடைந் திருப்பது நலம். இராசிக்கு இருபுறமும் பாபக் கிரகங்கள் இருப்பது சற்றுப்பின்னடைவுதான். வீடு, வாகனம் இலாபம் தரும். மன அமைதி இருக்கும். குடும்ப உறவில் விரிசல் ஏற்படலாம். தேக ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழில்துறை வளர்ச்சியடையும். பதவி உயர்வு இருக்கும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

இராசிநாதன் செலவுத்தானமான பன்னிரண்டாம் வீட்டில் குரு, சனியோடு இருப்பதால் பக்க உதவி கிடைக்க வாய்ப்புண்டு. சகோதரச் சிறப்பு இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தினாலும் பெரும்பயன் இருக்கும். அயலவர் உறவினர் அன்பாய் இருப்பர். குடும்ப உறவில்விரிசல்ஏற்படலாம். வாக்குவாதத்துக்குஇடமுண்டு. தேக ஆரோக்கியம்நன்றாகஇருக்கும். பிரயாணவாய்ப்புகள்பிரகாசமாக இருக்கும்.

**கடகம்: புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்**

இராசிநாதன் நான்காம் ராசி உட்பட ஆறாம் ராசி வரை சஞ்சரிப்பது விசேஷம். சனியின் பார்வை தீமை செய்யலாம். ஆனால் செவ்வாயின் பார்வை யோகம் செய்யும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். குடும்ப அமைதியுண்டு தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில்துறை சிறப்படை யும். பதவி உயர்வு இருக்கும். புதிய பங்காளிகள் வர வாய்ப் புண்டு.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

இராசி நாதன் பூரண பலம் பெற்று இருப்பதும் பலமான நிலையில் உள்ள சுக்கிரனின் பார்வை பெறுவதும் சுப பலனைத் தரும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரச் சிறப்பு இருக்கும். வீடு, வாகனம், செலவை உண்டாக்கும். அயலாருடனும் உறவினருடனும் உறவு சீராக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும் பிரயாண வாய்ப்புக்கள் உண்டு. தொழில் மாற்றம் இடமாற்றம் உண்டு.

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம் சித்திரை1,2.**

தேவகுருவான வியாழனும் அசுர குருவான சுக்கிரனும் இராசியை நோக்குவதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனத்தால் இலாபம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். நல்ல புரிந்துணர்வு இருக்கும். முன்பு இருந்த நோய் விலகும். தொழில் போட்டியில் வெற்றி பெறுவார்கள். வசதியான இடமாற்றம் அமையும்.

**துலாம்: சித்திரை 3,4 சுவாதி. விசாகம் 1,2,3,**

இராசி நாதன் பகைவீடானாலும் உச்சமாக இருப்பது விசேஷம். பாதகாதிபனான சூரியனின் பார்வை நல்லதல்ல. வீடு,வாகனம் செலவை ஏற்படுத்தலாம். சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். குடும்ப அமைதி குறையலாம். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் அமைதி இருக்கும். இடமாற்றம் ஏற்படலாம்.

**விருச்சிகம்: விசாகம் 4. அனுசம், கேட்டை**

இராசிநாதன் பாம்புகளோடு தொடர்புபடுவதால் தொல்லை ஏற்படலாம். சனியின் பார்வை இராசி பெறுவதால் சில பின்னடைவுகள் ஏற்படும். ஆனால் குரு, புதன் ஆகிய கிரகங்களின் பார்வை நன்மை செய்யும். கையில் பணம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் யோகம், சிறப்பு. பதவி உயர்வு, புதிய தொழில் வாய்ப்பு இருக்கும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம்1**

இராசிநாதன் பகை வீட்டில் புதன், சனியோடு இருப்பது சமசுகம். இராசியில் செவ்வாய் இருப்பது ஓர்அளவு ஆறுதல். வீடு, வாகனங்களால் எதிர்பார்த்த இலாபம் இல்லை. சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். குடும்பத்தில் வாக்குவாதம் இருக்கும். தொழில் துறையில் எதிர்ப்பு, போட்டி இருக்கும். நிதானம் வேண்டும்.

**மகரம்: உத்தராடம்2, 34 திருவோணம், அவிட்டம்1,2**

அட்டமாதிபன் சூரியனின் பார்வை பின்னடைவைத் தரலாம். ஆனால் குருவின் பார்வை இராசிக்கு கிடைப்பது நல்லது. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். காதலர் வாழ்வில் கருத்தொற்றுமை இல்லை. தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறை பிரகாசமாகும். பதவி உயர்வு இருக்கும். வசதியான இடமாற்றம் இருக்கும்.

**கும்பம்: அவிட்டம்3,4 சதயம், பூரட்டாதி1,2,3**

இராசிநாதன் சுகஸ்தானத்தில் இருப்பது நலம். ஆனால் குரு நான்கில் இருப்பது கேந்திரமாதலால் பெரிய நன்மை இல்லை. கையில் பணம் இருக்கும் கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும் . வீடு வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் அன்பாய் இருப்பர். தேக ஆரோக்கியம் நன்று. புதிய தொழில் வாய்ப்பு இருக்கும்.

**மீனம்: பூரட்டாதி4 உத்தரட்டாதி, ரேவதி**

இராசியில் சுக்கிரன் பூரணபலம் பொருந்தி இருப்பது விசேஷம். மேலும் செவ்வாயின் பார்வை இராசி பெறுவது யோகம். கல்வியில் ஆர்வம் இருக்கும் பணம் இருக்கும். சில சமயம் தட்டுப்பாடு வரலாம். சகோதர உதவியுண்டு. வீடு வாகனம் செலவை ஏற்படுத்தும். தொழில் துறையில் பிரச்சினை ,மனக்கசப்பு இருக்கும். நிதானம் அவசியம்.

# இயந்திர மனிதனுக்கு மனித மூளை


## குரங்கு மூலமான பரிசோதனை வெற்றி

உடல் ஊனமுற்றவர்கள் தங்களது எண்ண அலைகளைக் கட்டளைகளாக இயந்திர மனிதர்களுக்கு வழங்கி தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதான வழிமுறை ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியில் வடக்கு கலிபோர்னியாவில் இருக்கும் 'டியூக்' பல்கலைக்கழக ஆய்வாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

குரங்கு ஒன்றை இந்த ஆய்வுக்காக அவர்கள் பயன்படுத்தி உள்ளனர்.

குரங்கின் மூளையில், உடல் பாகங்களை அசைப்பதற்கான கட்டளைகளை வழங்கும் பகுதியில் மிக நுண்ணிய இலத்திரனியல் சாதனங்களை அவர்கள் பொருத்தினார்கள்.

உடலில் உள்ள ஓர் பகுதி இயங்கு வதற்குப் பல மில்லி செக்கன்களுக்கு முன்பே மூளையின் அப்பகுதியில் உள்ள செல்கள் செயற்பட ஆரம்பித்துவிடுவதால் அந்த நுண்ணிய செயற்பாடுகளை உணரக் கூடிய வகையில் இலத்திரனியல் அமைப்புக் கள் குரங்கின் மூளையில் பொருத்தப்பட்டன.



குரங்கு ஓர் செயலைச் செய்ய முற்படுகையில் மூளையின் செல்கள் மூலம் அதனை உணரும் இலத்திரனியல் சாதனங்கள் உடனடியாக அவற்றை மின் அதிர்வுகளாக மாற்றுகின்றன.

அந்த மின் அதிர்வுகளுக்கு ஏற்ப செயற்படும் வகையில் வடிவமைக்கப் பட்டிருக்கும் மென்பொருட்கள் (Softwares) மின்னதிர்வுகளைச் சைகைகளாக மாற்றி இணைய இணைப்புக்களின் மூலம் குரங்கின் மூளையுடன் இணைக்கப் பட்டிருக்கும் இயந்திர மனிதனின் கட்டுப்பாட்டு அமைப்புக்கு கட்டளைகளாக வழங்குகின்றன.

இதனால் குரங்கு செய்ய நினைக்கும் குறித்த செயலை இயந்திர மனிதன் செய்கிறான். பல்வேறு இடங்களில் நிலைப்படுத்தப்பட்டிருந்த பல இயந்திர மனிதர்களைவைத்து இந்தப் பரிசோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மூளையின் சகல பாகங்களையும் கண் காணித்துக் கட்டளை களை ஏற்றுப் பரிமாறக் கூடிய இலத்திரனியல் சாதனங்களைத் தயாரிக்கும் முயற்சியில் இப்போது இந்த விஞ்ஞானிகள் குழு மும்முரமாக ஈடு பட்டுள்ளது.

இம்முயற்சி பூரண பலனைத் தருமானால் ஊனமுற்றவர்கள் தங்கள் எண்ண அலைகளுக்கேற்ப தங்களது செயற்கை உறுப்புக்களை இயக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

அதுமட்டுமல்லாது தொலைவிலிருந்தே இயந்திரங்களைத் தமது எண்ண ஓட்டத்திற்கேற்ப இயக்கும் திறனை மனிதர்களிடத்தில் உருவாக்கிக்கொள்ளும் சந்தர்ப்பமும் கிட்டலாம்.

தீபன்

# தேசிய சமாதானப் பேரவையினருக்கு பல்கலைக்கழகத்தில் புதிய அனுபவம்

யாழ்ப்பாணத்துக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்ட தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா தலைமையிலான குழுவினரும் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களும் கடந்த 21 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்துக்கும் சென்றிருந்தனர்.

அவ்வேளை அங்கு அவர்களுக்குப் புதுவிதமான அனுபவம் காத்திருந்தது.

சமாதானப் பேரவையினரின் வருகையை ஒட்டி பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு ''தண்ணென்ற இன்பத்தில்'' என்னும் நாடக ஆற்றுகை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

குடாநாட்டில் படையினரின் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில் மக்களின் யதார்த்த வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதை மிகவும் தத்ரூபமாக உணர்த்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது அந்த ஆற்றுகை.

தேசிய சமாதானப் பேரவையின ருக்கும் பத்திரிகையாளர் களுக்கும் மறக்க முடி யாத அனுப வமாக இது அமைந்தது.

நாடகத்தின் ஆரம்பத்தில், நாடகத்தில் ஒரு கட்டமாக இராணுவத்தினரின் பாணியில் வேடம் அணிந்த பல்கலைக்கழக மாணவர்கள் வளாகம் எங்கும் நிறைந்து காணப்பட்டனர். அவர்கள் தேசிய சமாதானப்பேரவை உறுப்பினர்களையும் தென்னிலங்கைப் பத்திரிகை யாளர்கள் மற்றும் அங்கு சென்றிருந்த உள்ளூர் பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் ஆகியோரையும் திடீரென சோதனையிடத் தொடங்கினர்.

கடுமையான சோதனை நடவடிக்கைளைத் திடீரென எதிர்கொள்ள வேண்டி வந்ததால் தென்னிலங்கைக் குழுவினர் அதிர்ந்து போயினர். அவர்களின் அடையாள அட்டைகளைத் தீவிர மாகப் பரிசீலித்த மாணவர்கள் சோதனையின் பின்னரே அனைவரையும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கினுள் அனுமதித்தனர். அங்கு நாடக ஆற்றுகையை தென்னிலங்கைக் குழுவினர் பார்வையிட்டனர்.

ஆற்றுகை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் கைலாசபதி அரங்குக்கு உள்ளேயும் இராணுவப் பாணியில் மாணவர்கள் திடீர் சோதனைகளை நடத்தி பலரையும் விசாரணை செய்தனர்.





1. சமாதானப் பேரவையினர், தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை மாணவர்கள் இருவர் சோதனையிடும் காட்சி.

2. தென்னிலங்கைக் குழுவினரை சோதனை செய்வதற்காக கைலாசபதி அரங்கின் வாயிலில் இராணுவத்தினர் போன்ற பாணியில் காத்து நின்ற மாணவர்கள்.

# மும்பைத் தொடர் குண்டு வெடிப்பின் சூத்திரதாரி கராச்சியில் உல்லாசம்!



மும்பைத் தொடர்குண்டு வெடிப்பின் சூத்திரதாரி தாவூத் இப்ராஹீம்

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப் பட்டதைத் தொடர்ந்து பழிக்குப் பழிவாங்கு வதற்காக மும்பையில் 1993ஆம் ஆண்டு தொடர் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றன. இதன் சூத்திரதாரி தாவூத் இப்ராஹீம். பெரும் கடத்தல் மன்னன். இந்திய அரசு அவருக்கு வலைவீசிக் கொண்டிருக்க அவரோ பாகிஸ்தான் நகரான காராச்சியில் உல்லாசமாக வாழ்கின்றார்.

இப்ராஹீமுக்கு பாகிஸ்தானின் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ பாதுகாப்பு வழங்கி வருகிறது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்குத் தங்கத்தைத் தாராளமாகக் கடத்தி வரும் தொழிலிலும் இப்ராஹீம் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்.

கராச்சியிலும் இஸ்லாமாபாத்திலும் [illegible] எஸ்டேட் தொழிலில் [illegible]ணக்கான ரூபாக்களை [illegible] செய்திருக்கிறார்.

பாகிஸ்தா[illegible] மார்க்கெட்டையும் கட்டுப்[illegible]டுக்குள் வைத்து இருக்கும் இப்ராஹீம, பாகிஸ்தான் அரசுக்கு கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்கி உள்ளார் என்றும் கூறப்படுகிறது.





கராச்சியிலுள்ள இப்ராஹீம் வாழும் வீடு, இடது பக்க மூலையில் அவரது புதிய காதலி சபா

மும்பை, குஜராத், உத்தரபிரதேசம் டெல்லி ஆகிய பகுதிகளில் தனது ஆட்களை வைத்து ஒரு ராஜ்யத்தையே நடத்தி வருகிறார் இப்ராஹீம்.

சினிமா நடிகனைப் போன்ற தோற்றம் டிப்டொப்பான ஆடை அலங்காரம், விரல்களில் வைர மோதிரம் என்று அசத்தலாகத் தோன்றுகிறார். அவரது சகாக்கள் எப்போதும் அவரைச் சூழக் காணப்படுகின்றனர்.

இப்ராஹீம் தலையசைத்தால் எவரையும் கொண்டு வரத் தயங்காத சகாக்கள் அவருடன் இருந்து வருகின்றனர்.

நினைத்த மாத்திரத்தில் கோடிக்கணக்கான ரூபாக்களை ரொக்கமாகக் கொண்டு வரும் ஆற்றல் உள்ள இப்ராஹீமைப் பார்த்து பாகிஸ்தான் தொழில் வட்டாரங்கள் ஆச்சரியப்படுகின்றன.

இப்ராஹீமின் சொத்தின் மதிப்பு 2000 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பாஸ்போர்ட் வைத்திருக்கும் இப்ராஹீமுக்கு ஏதாவது பிரச்சினை என்றால் உடனடியாக உதவுவதற்கு ஐ.எஸ்.ஐ. முன் வருகிறது.

பகல் 12 மணிக்குக் கண் விழித்து 2 மணிவரை படுக்கையிலேயே கிடந்து அதன் பின்னர் நீச்சல் கிளப் என்று சகாக்களுடன் கொட்டமடித்து மிகவும் உல்லாச வாழ்வு வாழ்கிறார் இப்ராஹீம்.

அவரது வீடு 8000 சதுர அடி கொண்டது. கூடவே நீச்சல் தடாகம், டென்னிஸ் கோர்ட், ஸ்நூக்கர் டேபிள், ஹெல்த் கிளப் ஆகியவை உள்ளன.

இந்த வீட்டில் இப்ராஹீம் தனது மனைவி, 3 மகள்கள், மகன் ஆகியோருடன் வசித்து வருகின்றார்.

கராச்சியில் மிக உயர்ந்த கட்டடம் ஒன்றை அவர் கட்டி வருகிறார்.

இந்தக் கட்டடம் நகரமைப்புச் சட்டத்தை மீறிக் கட்டப்பட்டுள்ளது என்று கூறி ஒரு தன்னார்வ நிறுவனம் எதிர்ப்புத் தெரிவித்தது. ஆனால் ஐ.எஸ்.ஐ. தலையிட்டு அனுமதியைப் பெற்று கொடுத்து விட்டது.

தாவூத் இப்ராஹீமின் புதிய காதலி பெயர் சபா. லாகூரில் மொடலாக இருக்கிறார். இவருக்கு பங்களாவும் எட்டரை லட்சம் ரூபாய்க்குக் காரும் வாங்கிக் கொடுத்திருக்கிறார் இப்ராஹீம்.

இத்தனை வசதிகளிலிருந்தும் இப்ராஹீம் உயிருக்குப் பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிறாராம். இந்திய உளவுத் துறை நிறுவனமான 'ரா' அமைப்பின் ஏஜெண்டுகள் தன்னை எந்நேரத்தில் கொல்வார்களோ, என்ற மரணபயத்தில் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இதற்கு முக்கிய காரணமும் இல்லாமலில்லை. இப்போது எதிரியாக மாறி விட்டான் இப்ராஹீமின் முன்னாள் சகா சோட்டா ராஜன். இவனது ஆட்கள் 'ரா' அமைப்புக்காக இப்ராஹீமை கொலை செய்ய முற்படலாம். இதனால்தான் கடந்த சில மாதங்களாகக் கராச்சியை விட்டு அகலாமல் இருக்கிறார் இப்ராஹீம்.

— ஷர்மிலா


வெள்ளவத்தையில் இதமான சூழலில்
எழில் மிகுந்த கடற்கரைக்கு அருகாமையில்.

IDEAL



IDEAL

**IDEAL COURT**

* நவீன வசதிகளுடன் கூடிய மனைகள், குடிபுகத் தயார் நிலையில் விற்பனைக்குண்டு. (விலை 23இலட்சத்திலிருந்து)

**IDEAL RESORT**

* வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற நவீன வசதிகளுடன் கூடிய அழகிய இல்லங்கள் மாதாந்த வாடகைக்கு உண்டு. போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்படும்.
* சகலவிதமான வைபவங்களுக்கும் ஏற்ற எல்லாவிதமான ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்படும்.

**IDEAL GIRLS BOARDING HOUSE**

* பெண்களிற்கும் வயது வந்தவர்களிற்கும் தகுந்த பாதுகாப்பான அமைவிடம்.
* பாடசாலைகள், தூதரங்கள், ஆலயங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு அருகாமையில்.

தொடர்புகளுக்கு:

இல.46, ஐ.பி.சி.றோட்,
கொழும்பு - 06.
தொ.பே: 505716, 074-511314

"Marutham"
N.M.M.V. Road, Nelliyadi, Jaffna.
Tel: 070-212229, 070-212329
Fax: 070-212371
(Point Pedro Exchange - 3210)

PROMOTERS AND DEVELOPERS

**JUBILAND (PVT) LIMITED**
No. 23/7, Schofield Place, Colombo - 03
T.P : 594962, 584487, 584346. FAX: 508894



நாளைய உங்கள் கனவை
இன்றே நனவாக்கிடும்......

SEAGULL COURT



முதல் 10 பதிவுகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும். தவறவிடாதீர்கள்

வெள்ளவத்தையிலும் தெஹிவளையிலும் நவீன வடிவமைப்புக்களோடு அமைக்கப்பட்டுள்ள அழகிய இல்லங்கள். உங்கள் தெரிவிற்காக காத்திருக்கின்றன.

இல. 4, 55 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06. இல. 24, இக்ஸியம் வீதி, தெஹிவளை.
இல. 13 A, பசல்ஸ் ஒழுங்கை, கொழும்பு-06. இல. 32, ரோகினி றோட், கொழும்பு-06

ஆகிய இடங்களில் நிர்மாண வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. இன்றே உங்களுக்கென்று ஓர் இல்லத்தினை பதிவு செய்து கொள்ளுங்கள்.

வசதிகள்

நான்கு, மூன்று மற்றும் இரண்டு படுக்கையறைகள் கொண்டது.
இறக்குமதி செய்யப்பட்ட சாதனங்கள், தரையோடுகள் பொருத்தப்பட்ட குளியலறைகள்
நீரினால் பாதிப்புறாத (PVC) கதவுகளைக் கொண்டது.
துருப்பிடிக்காத அலுமினியத்திலான ஜன்னல்கள்.
சகல மாடிக்குமான மின்னுயர்த்தி (Lift) வசதி
ஒவ்வொரு யுனிட்டுக்கும் தண்ணீர் மற்றும் மின்சார அளவுமானிகள்
கீழ்த்தளத்தில் தனிப்பட்ட வாகன தரிப்பிட வசதி
மேல்மாடியில் விசேட கொண்டாட்டங்களுக்கான வசதி
ஒவ்வொரு மாடிக்கும் கழிவுப் பொருட்கள் அகற்றும் வசதிகள்.

நிர்ணயிக்கப்பட்ட விலைகள்

No.13A, Fussels Lane, Wellawatte, Colombo-6.
2 மில்லியனிலிருந்து பூர்த்தியாகும் திகதி ஒக்டோபர் 2001

No.5, Milagiriya Avenue, Colombo-04.
2.9 மில்லியனிலிருந்து

No.4, 5th Lane, Wellawatte, Colombo-6.
2.8 மில்லியனிலிருந்து பூர்த்தியாகும் திகதி மே 2001.

No.32, Rohini Road, Wellawatte, Colombo-6.
2.8 மில்லியனிலிருந்து பூர்த்தியாகும் திகதி நவம்பர் 2001.

No.24, Initium Road, Dehiwella.
2 மில்லியனிலிருந்து பூர்த்தியாகும் திகதி மார்ச் 2001.

Site Offices
No.4, 55th Lane, Colombo-06.
NO.24, Initium Road, Dehiwela.
No.26, 42nd Lane, Colombo-06.
No.5, Milagiriya Avenue, Colombo-04

**SEAGULL PROPERTY DEVELOPERS (PVT) LTD**
(A, BOI Approved Company)
49, Nelson Place, Colombo-06. Tel: 503266, 577409
For U.K Bookings Contact No.0044 411069071
HOT LINE: 077-317075, 077-354116, 071-752981, 077-347353

# புரிந்து கொண்டால் வாழ்வில் துயரமில்லை



இன்று கணவன்—மனைவி உறவிலும் அவர்களின் செக்ஸ் உறவிலும் நாளுக்கு நாள் விரிசல் விரிவடைந்து கொண்டே போகிறது.

இல்லற வாழ்க்கையில் அன்பு ஆட்டம் காணும்போது, செக்ஸ் உறவில் பிரச்சினை கள் ஏற்படுகின்றன. போதியளவு அன்பும் போதியவு செக்ஸூம் அனுபவிப்பவர்கள் 20சதவீதமானவர்களே என அதிர்ச்சியூட்டும் தகவல் ஒன்று கூறுகின்றது. எஞ்சிய 80 சதவீதமானவர்கள் ஏனோதானோ என்று வாழ்க்கையைக் கொண்டிழுக்கிறார்களாம்.

காதலிக்கும்போது இதமாகப் பேசி, பரிசு கொடுத்து அன்பு காட்டிய காதலன், திருமணத்தின் பின்பும் அப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதே பெண்களின் எதிர்பார்ப்பும், கனவும் ஆகும்!

திருமணம் முடிந்து ஒரு வருடத்தில் காதல், அன்பு, பாசம், அரவணைப்பு, போன்றவற்றைத் தொலைத்து, பேச்சுக்களைக் குறைத்து கணவனும், மனைவியும் தனித்தனி தீவுகளாகிவிடுகின்றனர். கலாசாரம், கட்டுப்பாடுகள் நிறைந்த நாடுகளில் இந்நிலைமை மிகவும் மோசமாக



இருக்கின்றது.

இருவருக்கும் தனித்தனி விருப்பங்கள், தனித்தனி ஈடுபாடுகள் அதிகரிக்கின்றன. கடைக்குப் போவதிலும், ஆடைகளைத் தெரிவு செய்வதிலும் கூடத் தனித்தனியாகவே அவர்கள் செயற்படுகின்றார்கள்.

இவையெல்லாம் திடீரென வெடிக்கப்போகும் யுத்தத்திற்கான அறிகுறிகள்!

அடிப்படையில் போராட்ட குணத்தோடு ஆண் வளர்க்கப்படுகின்றான். அவனது வெற்றிக்கான அடித்தளம் அது. ஓர் ஆணின் திறமை, அவனின் பதவி, உழைப்பு, அந்தஸ்து ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படுவதால் அவன் தன்னை நிலைநிறுத்திக்கொள்வதற்கு அதிக சக்தியையும் நேரத்தையும் செலவிடுகிறான். இதனால் மனைவி, குழந்தை, குடும்பம் என்பவற்றுக்கு அவனால் அதிக நேரம் ஒதுக்க முடிவதில்லை!

அவனது ஆதிக்க குணம் குடும்பத்தில் பிரதிபலிப்பது சாதாரண நிகழ்வு. தொழில் புரியும் இடத்தில் மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்தினால் தன்னைப் பலவீனமானவனாக எண்ணிவிடுவார்கள் என்பதனால் அவன் தன் மென்மையான உணர்வுகளை இழந்துவிடுகின்றான். இதனால் வெளியில் ஆக்ரோஷமாகப் போராடும் அவன், வீட்டில் மனைவியுடன் கொஞ்சிப் பேசுவதை எதிர்பார்க்க முடியாது. 90 சதவீத ஆண்களால் வீட்டில் ஒருமுகம், வெளியில் ஒருமுகம் என்று இரண்டு முகங்களைக் காட்ட முடிவதில்லை.

அன்பு, பாசம், கருணை என்பவற்றை அளவுக்கதிகமாக வெளிப்படுத்தக் கூடாது என்ற முறையில் ஆண் வளர்க்கப்படுகின்றான்.

ஆனால் பெண் அன்பு, பாசம், கருணை போன்ற அடிப்படை இயல்புகளைக் கொண்ட மென்மையான உள்ளம் படைத்தவள். குடும்பத்தைப் பேணிக்காத்து உதவி செய்வதைத் தன் கடமையாகக் கருதுகிறாள்.

கணவன் தன்னுடன் எப்போதும், அன்போடும், பிரியத்தோடும் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள். தன்மீது வைத்திருக்கும் அன்பை, ஆசையை அவன் வார்த்தைகளில் வெளிப்படுத்த வேண்டும் என விரும்புகிறாள்.

தான் எதிர்பார்த்தபடி கணவன் தன்மீது அன்பு காட்டாவிட்டால் செக்ஸ் உறவுக்கு மட்டுமே அவன் தன்னைப் பயன்படுத்துகிறான் என்று மனைவி சந்தேகிக்கின்றாள்.

தனக்கு விருப்பம் இல்லாத நேரங்களிலும் கணவன் அழைக்கும் போதெல்லாம் உடலுறவிற்கு இணங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறாள். இது போன்ற கட்டாய உடலுறவால் செக்ஸில் அவளுக்கு விரக்தி ஏற்படுகிறது. கணவன் மீது வெறுப்பு ஏற்படுகிறது. இப்படியான பிரச்சினைகளால் கணவன்— மனைவி உறவு கேள்விக்குறியாகிவிடுகின்றது.

ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டால் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியும்.

கணவன் மனைவியைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும், மனைவி கணவனைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். தவறான நம்பிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

முடிவு காணக்கூடிய பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டு விரும்பியபடி செக்ஸை அனுபவிக்க முடியவில்லையே என்று கணவனும், விரும்பியளவிற்கு கணவனிடம் அன்பைப் பெறமுடியவில்லையே என்று மனைவியும் கவலைப்பட அவசியமே இல்லை.

ஏனெனில் இவற்றிற்கான தீர்வு இருவரின் கைகளில்தான் உள்ளது!

## பெண்

# துளசி மகிமை



இந்துக்களால் மிகவும் புனிதமாகக் கருதப்பட்டு வழிபாட்டுக்குரியதாகப் போற்றப்படுவது துளசி.

ஓர் இந்துவின் வீட்டில் துளசி கட்டாயமாக இருக்கும். துளசியில் பல பலன்கள் இருப்பதால்தான் நம் முன்னோர்கள் துளசியை முற்றத்தில் வைத்து வழிபட்டு வந்தனர்.

துளசியின் மகிமைகள் அளவிட முடியாதவை.

* இந்துக்கள் குளித்தவுடன் துளசியை வழிபடுவர். அவர்கள் தம்மை அறியாமல் துளசியை நுகரும் போது அந்த மணம் நாள் முழுவதும் அவர்களைப் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது.
* தினமும் காலையில் 10 – 15 துளசி இலைகளை மென்று தண்ணீர் குடிக்க படபடப்பு, பதற்றம் குறையும்.
* கொதிக்கும் நீரில் துளசியைப் போட்டு ஆவி பிடித்தால் சளியினால் ஏற்படும் மூச்சுத் திணறல் குறையும்.
* காய்ந்த துளசி இலைப் புகை நுளம்புகளை விரட்டும்.
* துளசி இலைகளை நீரில் ஊறவைத்து அந்த நீரைப் பருகினால் புத்துணர்ச்சி ஏற்படும்.

### துளசிச் சாற்றின் பயன்கள்

* சளி, இருமலைப் போக்கும்.
* நல்ல தூக்கத்தைத் தரும்.
* ஜீரண சக்தியை அதிகரிக்கும்.
* தோல் நோய்களைக் குணப்படுத்தும்.
* வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும்.
* இரத்தத்தைத் தூய்மையாக்கும்.
* வயிற்று வலியால் அவதிப்படுபவர்கள் வயிற்றுக்கு மேல் பூச பலன் கிடைக்கும்.
* துளசிச் சாற்றினால் முகம் கழுவினால் முகம் பொலிவடையும்.
* மன அழுத்தம் உள்ளவர்களுக்கு துளசிச் சாறு சிறந்த டானிக்!



# 75 வயதில் பி.எச்.டி பட்டம்!

இந்தியாவைச் சேர்ந்த ரங்கநாயகி என்ற பாட்டி தனது 75ஆவது வயதில் பி.எச்.டி. (Ph.D) படித்து அசத்தியிருக்கிறார்.

20 வயதில் திருமணம் முடித்த ரங்கநாயகியின் கணவர் இந்திய இராணுவத்தில் வைத்தியராகப் பணியாற்றியவர் இவரது 63ஆவது வயதில் அவர் காலமானார்.

இவருக்கு அதிகம் படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்த போதிலும் மூன்று குழந்தைகளுடன் கூட்டுக் குடும்பத்தில் இருந்ததால் இம்முயற்சி அதிகம் பலனளிக்கவில்லை.

இவர் முன்னர் பிரிட்டிஷ்காரர்களின் காலத்தில் படித்தவர் என்பதால் படிப்பு மேற்கத்திய பாணியில் இருந்தது.

வைஷ்ணவ குலத்தில் இவருக்கு மிகவும் பிரியம் என்பதால் ''வைஷ்ணவிஸம்'' படிக்க முடிவு செய்தார்.

முதலில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் Certificate Course முடிந்ததும் எம்.ஏ வைஷ்ணவிஸம் படித்தார்.

ஒரு வருட ஓய்வுக்குப் பின் மீண்டும் கல்லூரியில் சேர்ந்து அதே பாடத்தில் பி.எச்.டி படித்திருக்கிறார்.

தான் மீண்டும் படிப்பைத் தொடரப்போவதாக இவர் சொன்னபோது குடும்பத்தினருக்கு இனிய அதிர்ச்சியாம். ஆனாலும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லோரும் அவரை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள்.

''பாட்டி எம்.ஏ பரீட்சை எழுதப்போன போது நாங்கள் எல்லோரும் அவருடன் போய் வாழ்த்துக்களைத் தெரிவித்து விட்டு வந்தோம்'' என்று குதூகலிக்கிறார்கள் ரங்கநாயகியின் பேரப்பிள்ளைகள்.

''இத்தனை வயதில் நான் படிக்க ஆரம்பித்த போது உறவினர்களோ, நண்பர்களோ என்னைக் கேலிபண்ணவில்லை. ஆனால் என்னைவிட வயதில் குறைந்தவர்களாக இருந்தும் இத்தனை வயதுக்குப் பிறகு எப்படிப் படிப்பது என்ற கூச்சத்தோடு இருந்தவர்கள் எல்லோரும் என்னைப் பார்த்து இப்போது படிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இது மிகவும் சந்தோஷமான விஷயம்'' என்கிறார் ரங்கநாயகி.

முறைப்படி கர்நாடக சங்கீதம் பயின்றிருக்கும் இவர் ஓவியம் வரைவதிலும் அதிக ஆர்வம் உடையவர்.

ரங்கநாயகி படிக்கத் தயங்கும் பெண்களுக்கெல்லாம் சிறந்த ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறார் என்பதில் வியப்பேதுமில்லை.

# அவளே சிறந்த சுமைதாங்கி

ஒவ்வொருவருக்கும் பிரச்சினைகள் ஏற்படுவது சகஜம். ஆனால் அப்பிரச்சினைகள் அதிகமான சந்தர்ப்பங்களில் மனச்சுமையாக மாறிவிடுகின்றன.

ஓர் ஆண் தனக்கு ஏற்படும் மனச்சுமையை ....

* நண்பனிடம் கூறினால் கடனுக்கு அத்திபாரம் இடுகிறான் என நண்பன் நினைப்பான்.
* தந்தையிடம் சொன்னால் மகனுக்கு பிழைக்கத் தெரியவில்லை என்பார்.
* சகோதரனிடம் கூறினால் சுமை தன் தோளுக்கு வந்துவிடும் என சகோதரன் அஞ்சுவான்.
* பிள்ளைகளிடம் சொன்னால் கையாலாகாத அப்பா புலம்புகிறார் என்பார்கள்.
* தாயிடம் கூறினால் இடிந்து போய்விடுவாள். ஆனால் மனைவியிடம் கூறும்போதே பாதி சுமை இறங்கி விடும். மனதிற்கு சுகமாகவும் இருக்கும்.

எந்த ஒரு மனச் சுமையைக் கூறினாலும் அதனைத் தாங்கும் சக்தி மனைவிக்கு மட்டுமே உண்டு.

இப்படி எத்தனை ஆண்களுக்கு எதனையும் தாங்கி ஆறுதல் சொல்லும் மனைவிமார் அமைந்திருக்கிறார்கள்? என்ற கேள்விக்கு விடை கூறுவது சற்றுக் கடினம்தான்.



# ரணிலுக்குச் சோதனை நீங்கியது ஆனால் தனி அதிகாரங்கள் இல்லை!

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒரு வாரகாலமாக நீடித்த அதிகாரப் போட்டா போட்டிக்கு ஒருவாறு தீர்வுகாணப்பட்டு விட்டது.

இதனால் கட்சித் தலைவர் ரணில் தனது தலைமைப்பதவிக்கு ஏற்பட்ட சோதனையில் வெற்றி பெற்றுள்ளார்.

ஆனால் தனது அதிகாரங்களில் சிலவற்றை அவர் தனது கட்சியில் உள்ள எதிரணியினரிடம் தாரைவார்த்துக் கொடுக்கவேண்டியதாயிற்று.

ரணில் விக்கிரமசிங்கவிடம் குவிந்துள்ள அதிகாரங்களைப் பறிக்கும் நோக்குடனேயே கருஜயசூரிய, லொக்கு பண்டார, காமினி அத்துக்கோறளை தலைமையிலான எதிரணியினர் செயலில் இறங்கியிருந்தனர்.

எதிர்க்கட்சித்தலைவர் பதவியை கரு ஜயசூரியாவுக்குப் பெற்றுக்கொடுப்பதும் அவர்களின் குறிக்கோளாக இருந்தது.

இந்நிலையில் ஐ.தே.கட்சி இரு குழுக்களாகப் பிரிந்து பலப்பரீட்சை நடத்தி வந்தது.

கட்சித் தலைவர் பதவியையோ அல்லது எதிர்க்கட்சித் தலைவர் பதவியையோ விட்டுக்கொடுக்க ரணில் இறுதிவரை மறுத்து வந்தார்.

அவ்வாறே அவரது அதிகாரங்களில் சிலவற்றையாவது பறிக்காமல் விடப்போவதில்லை என்று எதிரணியினர் கங்கணம் கட்டியிருந்தனர்.

இறுதியில் இரு தரப்பினரும் விட்டுக்கொடுத்து ஒரு சமரசத்துக்கு வரவேண்டியதாயிற்று.

ரணில் தனக்கு ஏற்பட்ட சோதனையை இப்பொழுது சமாளித்துவிட்டாலும் முன்னரைப்போல தன்னிச்சையாக கட்சிக்குள் நடந்துகொள்ள முடியாது என்பதை சமீபத்திய நிகழ்வுகள் நிரூபித்துவிட்டன. கட்சித் தலைவராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர் தொடர்ந்து இருப்பார்.

ஐ.தே.கட்சியின் சமீபத்திய வரலாற்றில் கடந்த வாரம் ஒரு முக்கிய காலகட்டமாக அமைந்துவிட்டது. நோர்வேயில் இருந்து அவசரமாகத் திரும்பி வந்த ரணில் கடந்த 24ஆம் திகதி செவ்வாய் மாலை கேம்பிரிட்ஜ் டெரஸில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் ஒரு கூட்டத்தை முதல் தடவையாகக் கூட்டினார்.

ஐம்பதுக்கு மேற்பட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதில் கலந்துகொண்டனர். ஜோசப் மைக்கேல் பெரேரா, கருணாசேன கொடிதுவக்கு, மஹிந்த சமரசிங்க, அப்துல் காதர், லொக்கு பண்டார, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பி.பி.தேவராஜ், ஏ.எச்.எம்.அஸ்வர், ரவீந்திர ரன்தெனிய, டிரோன் பெர்னாண்டோ ஆகியோரும் இவர்களில் அடங்குவர்.


ரணில் விக்கிரமசிங்க

பிரதித் தலைவர் கருஜயசூரிய, ரவி கருணாநாயகா, எம்.எச்.மொகமட், லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, அமரா பியசீலி உட்பட எட்டு எம்.பிக்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இவர்கள் அனைவரும் அன்று காலை ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினர்.

இதற்கு முதல் நாள் திங்கள் இரவு ரவி கருணாநாயகா எம்.பியின் இல்லத்தில் விருந்துபசாரம் ஒன்று நடத்தப்பட்டது. அதில் சுமார் 23 எம்.பிக்கள் பங்குபற்றியுள்ளனர்.

ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுவை அவசரமாகக் கூட்டக் கோரும் கடிதம் ஒன்றில் அங்கு அவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

மேலும் பல எம்.பிக்களின் கையெழுத்துக்களைப் பெறுவதற்காக அக்கடிதம் மாதிவெலையில் உள்ள எம்.பிக்கள் இல்லத் தொகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

இரகசியமாக இக்காரியம் நடந்தேறினாலும் இறுதியில் இக்கையெழுத்து வேட்டையை ரணில் அறிந்து கொண்டார்.

மாதிவெலையில் இருந்த ரணில் ஆதரவு எம்.பி. ஒருவர் இக்கையெழுத்துக் கடிதத்தை ரணில் பெற்றுக்கொள்ள இரகசியமாக வழிசமைத்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் அம்முயற் சிக்கு இடைநடுவிலேயே தடை ஏற்பட்டுவிட்டது.

தனது இல்லத்தில் கூட்டிய கூட்டத்தில் ரணில் ஒரு குழுவை நியமித்தார்.

கட்சி எம்.பிக்களின் மனக்குறைகளை ஆராய்ந்து தீர்க்கும் பொறுப்பை அவர் இக்குழுவிடம் ஒப்படைத்தார்.

லொக்கு பண்டார, அலிக் அலுவிகார, பெஸ்டஸ் பெரேரா, ஜோசப் மைக்கேல் பெரேரா, டிரோன் பெர்னாண்டோ, கருணாசேன கொடிதுவக்கு, ஏ.ஆர்.எம்.காதர் ஆகியோர் இக்குழுவில் அடங்கியுள்ளனர்.

இக்குழு கடந்த புதன்கிழமை காலை முதல் தடவையாகக் கூடியது. கரு ஜயசூரிய, காமினி அத்துகோறளை, ருக்மன் சேனநாயகா, ராஜித சேனாரத்ன, ரவி கருணாநாயகா, காமினி லொக்குகே ஆகியோர் உட்பட பலர் இக்குழுவிடம் தமது கருத்துக்களை எடுத்துக் கூறினர்.

''ரணில் விக்கிரமசிங்கவின் கட்சித் தலைமைப் பதவி குறித்து எமக்கு பிரச்சினையில்லை. ஆனால் அரசை அகற்றும் நடவடிக்கைகளுக்கு தலைமை வகிக்கும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நபரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அப்பொறுப்பு கரு ஜயசூரியாவிடம் ஒப்படைக்கப்பட்டு தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்'' என்று இவர்கள் அனைவரும் கோரியதாக குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கட்சி பிளவுபடுவதை இக்குழுவினர் விரும்பவில்லை. அதேவேளை ரணில் விக்கிரமசிங்கவிடம் எல்லா அதிகாரங்களும் குவிந்திருப்பதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ரணில் கட்சித் தலைவராக தொடர்ந்து இருக்கலாம். எதிர்க்கட்சித் தலைவர் பதவி கரு ஜயசூரியாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதற்கான திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் யோசனை தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த யோசனையை நடைமுறைப் படுத்துவது முடியாத காரியம் என்று அலிக் அலுவிகார தலைமையிலான குழு கூறியது. மாற்று யோசனையைத் தெரிவிக்குமாறும் அது கேட்டுக்கொண்டது. ஆனால் மாற்று யோசனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

தத்தமது நிலைகளை இரு சாராரும் விட்டுக்கொடாத நிலையில் வியாழனன்று மேலும் ஆலோசனைகள் நடத்தப்பட்டன. அலிக் அலுவிகார தலைமையிலான குழு ஒரு கூட்டம். நடு நிலையானவர்கள் எனக் கருதப்பட்ட ஐ.தே.க. எம்.பிகள் மற்றொரு கூட்டம். இக் கூட்டங் களில் ஆராயப்பட்ட சமரசத் தீர்வுகள் கட்சித் தலைவர் ரணிலிடம் இறுதியில் தெரிவிக்கப்பட்டு இணக்கம் காணப்பட்டது.

கட்சித் தலைவர், பிரதித் தலைவர், உதவித் தலைவர், கட்சி அக்கிராசனர் ஆகியோரைக் கொண்ட குழுவே கட்சி, அரசியல் தீர்மானங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் என்பதிலும் இணக்கம் ஏற்பட்டுள்ளது. கட்சிப் பொறுப்புகளில் தேவையான மாற்றங்கள் பின்னர் செய்யப்படும்.

உறங்கிக் கிடப்பதாகக் கண்டிக்கப்பட்டு வந்த ஐ.தே.க. இனி விழிப்புடன் செயலாற்றும் என எதிர்பார்க்கலாம் அல்லவா?

அவதானி


LINK-Salt to taste LINK-Salt to taste LINK-Salt to taste
சிறந்த தரத்திற்கான சர்வதேச விருதுபெற்ற லிங்க் அயடீன் கலந்த உப்பு
Link Imports & Exports (Pvt)Ltd.
86/1, Chatham Street, Colombo - 01.
Tel : 321085 TeleFax : 435959E-Mail :link@scienceland.lk


## சக்தி TV சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் (நேரடிஒளிபரப்பு) குட்டிச் சுட்டி |
| 11.30-12:00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |




## தோல் இருக்க சுளை இல்லை

இல்லங்களுக்குப் பொறுப்பான அந்த அரச அலுவலகம் பிரேமதாச காலத்தில் ஐ.நா வினால் புகழப்பட்ட ஒரு நிறுவனமாக விளங்கியது.

ஆனால் இன்று அது துண்டு துண்டுகளாகச் சீரழிந்து கொண்டிருக்கிறதாம்.

எனக்கு, உனக்கு என்று மூன்று அமைச்சர்கள் அதன் வளங்களை ஒருவருக்குத் தெரியாமல் மற்றவர் சுருட்டிக் கொண்டார்கள்.

அதனால் உரிய வளம் இன்றித் தவிக்கிறார் இதற்குப் பொறுப்பான ஒரு முஸ்லிம் பெண் அமைச்சர்.

முன்பு அதிகார அம்மணியினால் இல்லங்கள் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட செயலணிக் குழு மாடி இல்லங்கள் தொடர்பான ஓர் அறிக்கையைத் தயார் செய்திருந்தது.

மாடி இல்லங்களில் குடியிருப்பவர்கள் பச்சைக்கட்சிச் சார்பானவர்கள். இவர்களால் தான் மத்திய கொழும்பில் பச்சைக் கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைக்கின்றன என்று அந்தச் செயலணி தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

இதனைக் கருத்தில் கொண்டுதான் மங்களமானவரிடம் நகர அபிவிருத்தியும் மாடி இல்லச் சமாச்சாரங்களும் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல்.

இல்லங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக, முஸ்லிம் தலைவிக்கு பதவி கிடைத்த பின் மறைந்த தலைவருக்கு விசுவாசமானவர் என்ற நம்பிக்கையுடன் பெரும்பான்மை இன முன்னாள் அதிகாரமன்ற உறுப்பினர் ஒருவருக்கு தேசிய இல்லங்களுக்குப் பொறுப்பான சபைத்தலைவர் பதவி கொடுக்கப்பட்டது. இந்த நியமனத்தை முஸ்லிம் தலைவியே செய்திருந்தார்.

ஆனால் சபைக்குப் பொறுப்பானவர் வேண்டுமென்றே அசிரத்தையாக நடந்துகொண்டிருப்பதாகப் பேசப்படுகிறது. இவர் வாடகையாக வருடாந்தம் 6 கோடி வருமானம் தரும் மாடி இல்லத்திட்டங்களுக்கு உரிய கோவைகளை பம்பலப்பிட்டியில் உள்ள மங்களமானவரின் அலுவலகத்துக்கு மாற்ற இடமளித்துவிட்டாராம்.

அத்துடன் சபையின் பொறுப்பில் இருந்த 500க்கு மேற்பட்ட அதியுயர் தொழில் தராதரம் உடைய ஆளணியினரும் இரகசியமாக மாற்றப்பட்டார்களாம். மேலும் 17 வாகனங்களும் மங்களமானவரிடம் போய் சேர்ந்துவிட்டனவாம்.

இந்தச் சபையின் சர்வ ரகசியங்களும் தெரிந்த முன்னாள் சபைத் தலைவரும் தற்போதைய சபைத் தலைவரின் தர்ம பத்தினியும் மங்களமானவரின் கீழ் அதியுயர் பதவிகளில் இருப்பவர்கள். இவர்கள் இருவரும் இதற்கு உடந்தையாக செயற்பட்டிருக்கிறார்கள் என்று கிசுகிசுக்கப்படுகிறது.

அதேநேரம் முன்பு இல்லங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த ஒரு முக்கிய புள்ளியினால் முறைகேடான வழியில் தேர்தலுக்கு முன்பே 1500 சிவப்புக் கட்சி ஆதரவாளர்களுக்கு இச்சபையில் பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவாம்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் ஆங்காங்கே இருக்கும் வெற்றிடங்களை நிரப்புவதாகத் திறைசேரிக்கு காரணம் காட்டியே தலைநகரில் இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவாம்.

அமைச்சரான தலைவி தனது ஆதரவாளர்களுக்கு நியமனம் வழங்க திறைசேரியின் அனுமதியைக் கேட்டபோது அதற்கு திறைசேரியினால் மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம். முன்னைய அமைச்சர் நியமனங்களை வழங்கிவிட்டதாகக் காரணம் காட்டியே திறைசேரி இதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கிறது என்று தெரிகிறது.

அமைச்சர் தலைவியின் அமைச்சுக்கு சொந்தமான 17 வாகனங்களும் இன்னும் கிடைக்கவில்லையாம். இல்லங்களுக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் அமைச்சர்கள் இருவரும் ஏனையோரும்தான் இந்த வாகனங்களை இன்னும் பயன்படுத்துகிறார்களாம்.

அமைச்சர் தலைவி அதிரடியாகத் தகுந்த நடவடிக்கை எடுப்பார் என்று தெரிகிறது.

## தமிழருக்கு மேலும் ஒரு ஆபத்து

இலங்கையில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றவர்களினால் ஐரோப்பிய நாடுகளுக்குப் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றனவாம். இதனால் புலம்பெயர்ந்து செல்வோர்களைக் கட்டுப்படுத்த அதிகாரத் தரப்பார் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்று வற்புறுத்தப் பட்டிருக்கிறதாம்.

அயல் விவகாரங்களுக்குப் பொறுப்பான ஓர் அலுவலகத்தில் மிக அந்தரங்கமாக இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் போதே இவ்வாறு வற்புறுத்தப்பட்டிருக்கிறது. வற்புறுத்திய உயர்மட்ட அதிகாரிகள் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்தவர்கள்.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து சென்றவர்களில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த நாடுகளில் தான் இருக்கிறார்கள். இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் இவர்கள் 75 சதவீதம். இவர்களில் 90 சதவீதமானவர்கள் தமிழர்கள். யாழ்ப்பாணத்தவர்களின் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து இருப்பவர்கள் அனுப்பும் பணமாகும். இப்படிப் புள்ளி விவரங்கள் அள்ளி வீசப்பட்டனவாம்.

புலம்பெயர்ந்து செல்பவர்களைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் முதலில் சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கிடையில் நீதித்துறைக்கு மதிப்பளித்து, மனித உரிமைகளைப் பேணுதல் வேண்டும். பொருளாதார அபிவிருத்தி, பொருளாதாரக் கூட்டுறவு பொருளாதாரப் பங்களிப்பு மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கு அதிகாரத்தரப்பு அதிக முக்கியத்துவம் அளிக்கவேண்டும். பூரண ஆர்வத்துடன் இதற்கான திட்டங்களை செயற்படுத்தவும் வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.

பிரிட்டனிலும், ஜெர்மனியிலும் புலம்பெயர்ந்த தமிழர்களை வெளியேற்றுவது குறித்தும் இந்த நாடுகளுக்கு ஆட்களைக் கடத்தும் தொழிற்துறை வளர்ந்து வருவதைக் கட்டுப்படுத்துவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டிருக்கிறதாம்.

## அமைச்சரின் இன பேதம்

சமுர்த்தி விவகாரங்களுடன் தொடர்புபட்ட பதவி நியமனங்களில் அந்த அமைச்சர் முற்றிலும் பேரினவாதப் போக்கையே கடைப்பிடித்து வருகிறாராம்.

அதே நேரம் அதிகாரத்தரப்பால் வழங்கப்படும் நியமனங்களில் இனவிகிதாசாரத்தைப் பேணுவதில்லை என்றும் அதனைத் தடுக்கும் பணியிலும் அவர்தான் முக்கிய ஈடுபாட்டுடன் செயற்படுவதாகவும் குசுகுசுக்கப்படுகிறது.

அண்மையில் நாடளாவிய ரீதியில் 312 சமுர்த்தி முகாமையாளர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன. இந்த நியமனங்கள் பட்டதாரிகளுக்கே வழங்கப்படுகின்றன.

வழங்கப்பட்ட 312 நியமனங்களில் இரண்டே இரண்டு முஸ்லிம் பட்டதாரிகள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருக் கிறார்கள்.

இந்த விவகாரம் குறித்து அதிகார அம்மணியிடம் முறையிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. முஸ். காங் அதியுயர்பீடத்திலும் இது குறித்து விவாதிக்கப்பட்டிருக்கிறது.

## தலைவரின் கனவல்ல ஒலுவில்

மறைந்த தலைவருக்குப் பின்னால் இருந்து அவரை இயக்கிய சூத்திரதாரி தானே என்று அந்தத் தலைவி கூறிவருகிறாராம்.

''அடடா இவ்வளவு நாளும் நான்இதனைப் புரிந்து கொள்ளவில்லையே''என்று வாய்பிளந்து நிற்கிறார் மறைந்த தலைவருக்கு வலது கரம் போல இருந்த ஒரு செயலர்.

ஒலுவில் விவகாரத்தில் இருவருக்கும் இப்போது பலப்பரீட்சை நடந்து வருகிறதாம்.

அதேநேரம் ஒலுவில் விவகாரம் மறைந்த தலைவரின் கனவு அல்ல என்று அந்தத் தலைவி கூறியிருக்கிறாராம்.

இக்கனவு அதிகார அம்மணியின் கனவுதான் எனறு அவர், அண்மையில்தாம்விஜயம் செய்த பிரதேசத்தில் நடத்த சிறு கூட்டம் ஒன்றில் விளக்கியிருக்கிறாராம். மறைந்த தலைவர் 1994 இல் துறைமுகப் பொறுப்பை ஏற்க மறுத்த போது அதிகார அம்மணிதான், இதன் மூலம் கிழக்கில் பிராந்திய துறைமுகம் அமைக்க முடியும் என்று வலியுறுத்தியிருந்தார் என்று தலைவி விளக்கம் கூறியிருக்கிறாராம்.

## காக்கை உட்கார்ந்த பனம் பழம்

ஒரு சில பச்சைக்கட்சிக் காரர்கள் 'பட்ஜெட் சூறாவளி' ஆட்சி கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது பழைமையான தமிழ்க்கட்சி ஒன்றின் அதிகார மன்ற உறுப்பினர் ஒருவர் திடீரென அயல் நாடு போனார்.

அவர் போனதாகத் தகவல் வெளியானதுடன் மீன் பாடும் தேன் நாட்டில் அவரைத் திட்டிக் குதறி வசைபாடும் போஸ்டர்கள், துண்டுப்பிரசுரங்கள் தலைகாட்டின.

அந்த அதிகார மன்ற உறுப்பினர் பச்சைக் கட்சிக்காரர்களின் திட்டத்தை அறிந்த பின்பு, அதிகாரத்தரப்பாரின் 'வளங்களை'ப் பெற்றுக் கொண்டே முக்கிய வாக்களிப்பு ஒன்றில் கலந்து கொள்ளாமல் ஓடிவிட்டார் என்று பிரசுரங்கள் கூறின.

இந்தப் பிரசுரங்களை ரகசியமாக வெளியிட ஏற்பாடு செய்தவர் உள்வீட்டுக் காரர்களில் ஒருவர் தானாம். இந்த விவரம் இப்போது வெளியாகியிருக்கிறது.

''அயல் நாடு போனது உண்மைதான். தனிப்பட்ட தேவைக்காக 10 பேர்கொண்ட குடும்ப அங்கத்தவர்களுடன் தான் போனேன். கட்சியின் சகலரும் அறியத்தான் போனேன். இதில் என்ன தப்பு? காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாக எனது நிலை அந்தச் சில நாட்களில் ஆகிவிட்டது'' என்று வருத்தப்படாமலே சிரிக்கிறாராம் அந்த அதிகார மன்றின் உறுப்பினர்.

# பிறப்பு இறப்பு பதிவு வேலை திருகோணமலையில் மந்தகதி

திருகோணமலை பிறப்பு இறப்புப் பதிவாளர் அலுவலகத்தின் அலுவல்கள் மந்தகதியில் நடைபெறுகின்றன என்று மக்கள் குறை படுகின்றனர்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை அவசரமாகப் பெறுவது என்றால் அது முடியாத காரியம் என்று கூறப்படுகிறது.

சில சமயங்களில் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவம் இல்லாமல் இருக்கும். அங்குள்ள ஜன்னலில் விண்ணப்பப்படிவம் ஒட்டப்பட்டிருக்கும். தேவையானோர் அதனைப் பார்த்து எழுதிக்கொடுக்கும் நிலையும் ஏற்படுவதுண்டு.

இத்தனைக்கும் அலுவலகத்தில் போட்டோப் பிரதி இயந்திரமும் உள்ளது.

தற்போது பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுப் பத்திரங்களை கையால் எழுதிக்கொடுக்கும் நடைமுறை இல்லை.

பதிவுப் புத்தகத்தை அப்படியே நிழல் பிரதி எடுத்து றப்பர் முத்திரையிட்டு கையெழுத்திடுவது தான் வேலை.

இதற்கு நாள் கணக்கில் காலம் கடத்துவது ஏன்? என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

அண்மையில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் கலந்துகொள்வதற்காக ஒருவர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஒன்றிற்கு விண்ணப்பித்திருந்தார். இரு நாட்களில் தரும்படி கேட்டிருந்தார். அவரிடம் இன்று தருவதாகவும் நாளை தருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கிடைக்கவில்லை.

சில நாட்களின் பின் சென்றபோது தபாலில் அனுப்பிவிட்டதாகக் கூறினர்.

ஆனால் தபாலிலும் வரவில்லை.

அந்த நபர் தபால்கந்தோர் சென்று நன்றாக விசாரணை செய்தார். அங்கு அவரது பெயரில் அப்படி ஒரு தபால் வரவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

மீண்டும் பிறப்பு இறப்பு அலுவலகத்துக்குச் சென்றார். அங்கு கேட்டபோது அவர்கள் சொன்ன பதில் ''அலுவலக அதிகாரி இன்னும் கையெழுத்திடவில்லை'' என்பதுதான்.

பொறுப்பற்ற பதில்களைக் கூறலாமா? இவர்கள் படித்தவர்கள் அல்லவா? பொதுமக்களை அலைக்கழிக்கலாமா?

இப்படி மிகவும் கவலையோடு அவர் சுடர் ஒளிக்குத் தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கில் பல்வேறு துன்பங்களினால் நொந்துபோயிருக்கும் மக்கள் இவ்வாறான நிலைமைகளையும் தாங்கவேண்டியுள்ளது.

— சுஜா

# கன்னியா வெந்நீர் ஊற்றுகளை அபிவிருத்தி செய்வது அவசியம்

திருகோணமலை, கன்னியா பிரதேசத்தில் உள்ள வெந்நீர் ஊற்றுக் கிணறுகளைக் கொண்ட பகுதி இன்று அதிகமானோர் வருகை தரும் இடமாக மாறி வருகிறது.

திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச சபையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவாவது வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பிரதேசபை முன்வர வேண்டும்.

இங்கு வருவோர் தாம் கொண்டுவரும் உணவைக்கூட, அமர்ந்திருந்து சாப்பிட இடமில்லாமல் அங்கலாய்க்கின்றனர். மலசலகூட வசதிகளும் கிடையாது.

ஒரு காலத்தில் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதிக்கு வருபவர்கள் சமைத்து சாப்பிடும் அளவுக்கு அங்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

தினமும் பெரும்தொகையான வாகனங்கள் இங்கு வருகின்றன. சனி, ஞாயிறு தினங்களில் இத்தொகை மேலும் அதிகரிக்கும்.

இவற்றுக்குக் கட்டணமாக அறவிடப்படும் பணத்தில் இருந்து பொதுமக்களுக்கான வசதிகளை பிரதேச சபை செய்து கொடுக்க முடியும்.

இப்படியாகக் கிடைக்கும் பணம் மூலம் உடைந்து கிடக்கும் யாத்திரிகர் விடுதியை திருத்தி அமைக்கலாம். மூடிக்கிடக்கும் மண்டபத்தைத் திறப்பதற்கு வழிவகை செய்யலாம்.

வெளி மாவட்டங்களில் இருந்து மேற்படி பிரதேசத்துக்கு வருகை தருபவர்கள் வாகன தரிப்பிட கட்டணத்தை செலுத்தும் போது இவ்வாறான வசதிகளை எதிர்பார்ப்பதில் தவறு இல்லை.

அவர்களுக்காக இல்லாவிட்டாலும் திருகோணமலைப் பிரதேசத்தின் ஒரு வரலாற்றுச் சின்னமாக விளங்கும் மேற்படி பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதும் பாதுகாப்பதும் எமது கடமையே.

எனவே இந்த விடயத்தில் பிரதேச சபை கவனம் செலுத்தவேண்டும்.

# அதிபாதுகாப்பு கடல் பகுதியில் 8 பேர் கைது

கொழும்பு, காலிமுகத்திடல், அதி பாதுகாப்பு பிரதேச கடல் பகுதியில் நுழைந்த எட்டுப்பேர் கடற்படையினரால் சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயணம் செய்த படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கடலில் இரண்டு படகுகளைக் கண்ட கடற்படை ரோந்துப் படகின் வீரர்கள் படகுகளை நிறுத்த உத்தரவிட்டனர்.

ஒரு படகு நிறுத்தப்பட்டது. மற்றைய படகு தப்பியோடியது. படையினர் எச்சரிக்கை வேட்டுகளைத் தீர்த்தனர். தப்பியோடிய படகு பின்னர் பம்பலப்பிட்டி கரையோரத்தில் கைவிடப்பட்டிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டோர் துறைமுக பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மீன்பிடிக்க வந்ததாக அவர்கள் கூறியுள்ளனர்.

# ஒரே குடும்பத்தில் அறுவர் கொலை! மற்றொரு கொடூரம்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் வெட்டிக்கொல்லப்பட் சம்பவம் கொடகவெல பகுதியில் இடம்பெற்றது.

நள்ளிரவுக்குப் பின்னர் பொடிமாத்தயா (வயது 48) என்பவரின் வீட்டைத் தாக்கி உட்புகுந்த கொலையாளிகள் வீட்டிலிருந்தோரைக் கொலை செய்தனர். பொடிமாத்தயா, அவரது மனைவி சிறியாவதி,மகள் மதுகா (14 வயது), மகன் இந்துநில்(20 வயது), உறவினரான தயானந்த (வயது 35), ரொஸலின் நோனா (வயது 65) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

ஜகத் என்பவரே இச்சம்பவத்தில் பிரதான சந்தேக நபராவார். அவரும் அதே இடத்தைச் சேர்ந்தவர். அவர் தனது தாயாரை அடித்துத் துன்புறுத்தி வீட்டை விட்டுத் துரத்தி இருந்தார்.

அந்த வயோதிபப் பெண்ணுக்கு கொல்லப்பட்ட குடும்பத்தினர் தஞ்சமளித்திருந்தனர். இதனால் இரு குடும்பங்களிடையேயும் பகை மூண்டு இறுதியில் இக்கொலைகளுக்கு வழி வகுத்தது.

பொடிமாத்தயாவின் 12 வயது மகன் ஒருவர் இச்சம்பவத்தில் உயிர்தப்பியுள்ளார்.

# துண்டுப் பிரசுரங்களை அடுத்து படையினர் கெடுபிடி அதிகரிப்பு!

## மட்டக்களப்பில் சமூக விழிப்பில் அக்கறை காட்டாத அரச அலுவலர்களுக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பில் கடந்த சில வாரங்களுக்கு முன் ''இராஜசிங்கன் படைப்பிரிவு'' என்ற பெயரில் வெளியான துண்டுப்பிரசுரங்களை அடுத்து படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

சமூக விழிப்பு நடவடிக்கைகளில் அக்கறை காட்டாத பேராசிரியர்கள், அதிபர்கள், அரச ஊழியர்கள் மற்றும் அரசாங்கத் தரப்பு பிரதி அமைச்சர்கள் ஆகியோரை எச்சரித்தே துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

இதனை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தலைமையகம் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

கடந்த 27ஆம் திகதி மட்டக்களப்பு 23 — 2ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேணல் அன்ரனீஸ் இந்தக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தார்.

இரவுவேளைகளில் வீதிகளில் நடமாடுவதைத் தவிர்க்கும்படியும் —

அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியே செல்பவர்கள் மட்டும் அரிக்கன்லாம்பு, தீப்பந்தம், ரோர்ச் லைட் என்பவற்றுடன் செல்லும்படியும் — பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புப் படையினரின் முகாம்களை சூழவுள்ள பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வெளியில் நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப்புலி உறுப்பினர்கள் இரவுவேளைகளில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடமாடுகிறார்கள் என்றும் —

பொதுமக்களையும் விடுதலைப்புலி உறுப்பினர்களையும் இனங்கண்டுகொள்வதற்கே மேற்கண்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் — படைத்தரப்புத் தெரிவிக்கிறது.

இராணுவத்தினரின் புதிய உத்தரவு காரணமாக மட்டு. நகரில் உள்ள கடைத் தொகுதிகள் அனைத்தும் இரவு 7.30 மணியுடன் பூட்டப்படுகின்றன. மக்கள் மத்தியில் அச்ச உணர்வு நிலவுகிறது.

வழமையாக இக்கடைகள் இரவு 9 மணிக்கு பின்பே பூட்டப்பட்டு வந்தன.

இதேவேளை மட்டக்களப்புப் பகுதியில் படையினரின் சுற்றிவளைப்புகளும் திடீர்சோதனைகளும் அதிகரித்துள்ளன.

பொதுமக்களை முகமூடி மனிதர்கள் முன் நிறுத்திப் பரிசோதிக்கும் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மார்ச் மாதம் மட்டக்களப்பு இராணுவத் தளபதி கேணல் அன்ரனீஸ், ''மட்டக்களப்பில் ஊரடங்குச் சட்டம் என்பதே இல்லை. பொதுமக்கள் இரவுவேளைகளில் நடமாட எவ்வித தடைகளும் இல்லை'' எனக்கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

— நேரன்

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் எதிர்ப்புப் போராட்டம்

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த 27ஆம் திகதி பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு மணிநேரம் எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

படையினரின் பாலியல் சித்திரவதையைக் கண்டித்தும் —

கடந்த வருடம் வெசாக் தினங்களில் மட்டக்களப்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இறந்த 13 பொதுமக்களை நினைவு கூர்ந்தும் — இந்த எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதேவேளை ''எங்களைத் துரத்தும் துயரமும் துன்பமும்'' என்னும் தலைப்பில் துண்டுப்பிரசுரம் ஒன்றும் மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், கொடுமைகள், மனித உரிமை மீறல்கள் என்பனவற்றுக்கு எதிராகக் கிழக்கு மாகாணத்தில் குரல்கொடுக்கும் சக்தியாகப் பல்கலைக்கழகம் விளங்குகின்றது.

கடந்த காலங்களில் சமாதானத்தை வலியுறுத்தி பொங்கு தமிழ்எழுச்சி என்ற பெயரில் கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகம் நடத்திய நிகழ்வினைத் தொடர்ந்து அப்பல்கலைக்கழக மாணவர்கள் மீது புலிச்சாயம் பூசப்பட்டிருந்தது.

அதன் பின்னர் மாணவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கழுகுப் பார்வையுடன் நோக்கப்படுகின்றனவாம்.

— சத்துருக்கன்

# இணைப்புக்கு பாராட்டு

மட்டக்களப்பு விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரியை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைத்தமைக்கு மட்டு. நகரில் துண்டுப்பிரசுரங்கள் மூலம் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு — கிழக்கு தமிழ் விவகார, இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தே துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கிழக்குப் பல்லைக்கழக நுண்கலைப்பீட மாணவர்கள் என்ற பெயரிலும் மாணவர் ஒன்றியம் மட்டக்களப்பு என்ற பெயரிலும் இரண்டு துண்டுப் பிரசுரங்கள் வெளியாகி யுள்ளன. துண்டுப்பிரசுரங் களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சி களால்தான் இசை, நடனக் கல்லூரி இணைக்கப் பட்டதாகவும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரி மாணவர் ஒன்றியம் இந்த இணைப்புக்கு உதவிய அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி தெரிவித்து, அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

# களுவன்கேணியில் புதிய முகாம்

மட்டக்களப்பு மாவட்ட களுவன்கேணிப் பகுதியில் அரசபடையினர் புதிய இராணுவ முகாம் ஒன்றை நிறுவியுள்ளனர்.

களுவன்கேணிக் கடல் மார்க்கமாகப் புலிகள் மேற்கொள்ளும் போக்குவரத் தினைக் கட்டுப்படுத்தவே இந்த முகாம் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இப்பகுதியில் சில வருடங்களுக்கு முன் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு பின்னர் அது அகற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது மீண்டும் இந்த இடத்தில் இராணுவ முகாம் நிறுவப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர்.

# நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு

## —புலிகள் அறிவிப்புக்கு வரவேற்பு

இந்நாட்டு தமிழ் மக்களுக்குத் தனிநாட்டு அபிலாஷை இல்லை. புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்க அம்மக்கள் விரும்பவில்லை என்பதை யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டில் வந்ததும் அறிய முடிந்தது. இருந்தாலும் தமிழ் மக்களின் நலனுக்காக இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க அரசு எப்பொழும் தயாராக உள்ளது.

ஊடகத்துறை அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்று இவ்வாறு தெரிவித்துள்ளது.

அது மிக நீண்டதொரு அறிக்கையாகும்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்களில் சில வருமாறு:—

2000 டிசம்பர் 24ஆம் திகதி புலிகள் இயக்கம் போர் நிறுத்தத்தை அறிவித்தது. இருதரப்பினரையும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்த ஏற்கனவே வழி வகுத்துக்கொண்டிருந்த நோர்வே அரசுக்கு இப்போர் நிறுத்தம் குறித்து புலிகள் தரப்பினால் அறிவிக்கப் படவில்லை.

போர் நிறுத்தம் ஆரம்பம் முதலே நேர்மையானதாக அறிவிக்கப்படாததால் இலங்கை அரசு அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தது.

இரு தரப்பும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்த உடனேயே அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் போர் நிறுத்தம் பற்றி ஆராய முடியும் என்று அரசு கூறியிருந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதாக கடந்த 5 மாதங்களாக புலிகள் இயக்கம் உறுதி அளித்திருந்தது.

ஏப்ரல் 6ஆம் திகதி நோர்வேத் தூதுவர் பேச்சுவார்த்தை ஒழுங்கு முறைகள் குறித்து ஆராய இயக்கத் தலைவர் களைச் சந்தித்தார்.

ஆனால் புலிகள் எந்த ஒரு முடிவுக்கும் வந்திராததால் தூதுவர் கொழும்பு திரும்பவேண்டியதாயிற்று.

தங்களின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தின் போது நான்கு மாதங்களில் புலிகள் 224 தடவைகள் மீறியுள்ளனர்.

2000 நவம்பர் மாதத்தில் புலிகள் இயக்கத் தலைவரை வன்னியில் நோர்வேப் பிரதிநிதி சந்தித்தார். நிபந்தனையின்றிப் பேச்சு நடத்த புலிகள் இயக்கத் தலைவர் முன்வந்தார்.

பின்னர் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை புலிகள் தாமதப்படுத்தினர். பல நிபந்தனைகளை விதித்தனர்.

நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக புலிகள் போர்நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் அறிவிப்பில் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிவிப்பு உண்மையானால் அது மிகவும் பெறுமதியான ஓர் அறிவிப்பாகும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர பேச்சுவார்த்தை ஆரம்பிக்க அரசு எண்ணியுள்ளது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் விழா 2001

கலைவிழா, கலை வண்ணம், இசை விழா, முத்தமிழ் விழா என்ற தலைப்புக்களில் தமிழுக்கு உலகளாவிய ரீதியில் விழாவெடுக்கும் திருமறைக் கலாமன்றம், இவ்வாண்டு யாழ்நகரில் மே 05 முதல் 13ஆம் திகதி வரை ''தமிழ் விழா 2001'' கொண்டாடுகின்றது.

''கன்னித் தமிழ் வேர்களுக்குள் முத்தெடுப்போம்—
காலந்தோறும் முத்தம் பதிப்போம்''

என்பது இவ்விழாவின் முழக்கம்.

ஒன்பது நாட்கள் நடைபெறும் இவ்விழாவில், வடக்கிற்கு வெளியேயிருந்தும் மன்றத்து உறுப்பினர்களும் கலைஞர்களும் கலந்து கொள்வார்கள்.

கிராமியப்பாடல்கள், ஆடல்கள், இசைக் கச்சேரிகள், நடனங்கள், கூத்துக்கள், நவீன நாடகங்கள், வில்லிசை ஆகிய கலைநிகழ்ச்சிகள் திருமறைக் கலாமன்றத்தின் பல்வேறு பிரிவுகளினால் தயாரித்து மேடையேற்றப்படும்.

நிகழ்ச்சிகளில் முதல் ஏழு நாட்கள் திருமறைக் கலாமன்ற திறந்த வெளியரங்கிலும், எட்டாம் நாள் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கிலும், நிறைவு நாள் நிகழ்ச்சி இளவாலை திருமறைக் கலாமன்றத்திலும் நடைபெறும்.


**மனோதத்துவ வைத்தியம்**

GENERAL PSYHO THERAPHY

[illegible]

Dr. P.ஆறுமுகம் அவர்களை

கொழும்பில் மே 20 - 25 திகதிகளில்

DR.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Band Building, Entrance Bankshall Street,
No.10, Reclamation Road, Colombo-11.
T.P 074-715547, 074-715546, செல்டல் - 072 664867

கல்முனையில் மே 5 - 6 திகதிகளில்

T.M.M. பாமசி கல்முனை. T.P: 067-29329

வவுனியாவில் மே 12 - 13 திகதிகளில்

(தயவுசெய்து பதிவு செய்துகொள்ளவும்)

Vanni Inn, 2ம் குறுக்குத் தெரு, [illegible] வவுனியா. T.P:- 024-22074, 21406

மலைநாட்டினருக்காக கண்டியில் மே 26 - 29 திகதிகளில்

ASIRI MEDICALS
45,Paradaniya Road, Kandy.

கடிதத் தொடர்பு

Resident Tele Phone:- 065-24019
Dr.P. Arumugam,
No.51/5, Koolavady Road, Batticaloa, Sri Lanka.



CROMPTON MERCHANTS

- கல்வனைஸ்ட் தகடுகள்
- 5.5mm M.S. Rods
- 6mm and 8mm M.S. Ribbed Steel

மற்றும்
ராம்கோ (RAMCO)
அஸ்பெஸ்டஸ்
கூரைத்தகடுகள், சீலிங்
தகடுகளின்
ஏகவிநியோகஸ்தர்கள்.

Ramco
Asbestos Sheets



CROMPTON MERCHANTS
No.81, Maha Vidyalaya Mawatha,
Colombo-13, Sri Lanka.
Tele : 422120, 330668, 321831, Fax : 330668

# டேபிள் டெனிஸ் வீராங்கனைகளுக்கு கவர்ச்சி உடை

டேபிள் டென்னிஸ் வீராங்கனைகள் போட்டியின்போது அணியும் உடைகளை கவர்ச்சியானதாக வடிவமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வதேச டேபிள் டென்னிஸ் சம்மேளனம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

டென்னிஸ் வீராங்கனைகள் கவர்ச்சியான உடைகளை அணிந்து போட்டிகளில் பங்குபற்றுகின்றனர். மகளிர் டென்னிஸ் விளையாட்டு அதிகமாகப் பிரபலமடைந்துள்ளதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

தற்போது டேபிள் டென்னிஸ் சம்மேளனமும் இதே பாணியைக் கடைபிடிக்கத் திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் டேபிள் டென்னிஸ் விளையாட்டுக்கு பெருந் தொகையான பார்வையாளர்களை ஈர்க்கலாம். போட்டிகளை ஒளிபரப்புவதற்கான தொலைக்காட்சி உரிமைகள் மற்றும் அனுசரணை ஆகியவற்றிலிருந்து அதிக பணத்தை ஈட்டவும் முடியும். இவ்வாறு சர்வதேச டேபிள் டென்னிஸ் சம்மேனளம் கருதுகிறது.



தற்போதைய டேபிள் டென்னிஸ் உடையில் வீராங்கனையொருவர்

தற்போது டேபிள் டென்னிஸ் வீராங்கனைகள் ஆண் போட்டியாளர்களைப் போன்றே கட்டைக் காற்சட்டையும் தளர்வான ரீசேர்ட்டுகளையும் அணிகின்றனர்.

தற்போது ஜப்பானின் ஒசாக்கா நகரில் உலக டேபிள் டென்னிஸ் போட்டிகள் நடைபெறுகின்றன. இச்சுற்றுப்போட்டியின் போது வீராங்கனைகளுக்கான நவீன பாணி உடைகளை அறிமுகப்படுத்த சர்வதேச சம்மேளனம் எண்ணியுள்ளது.

"இவ்வுடைகளுக்கான தயாரிப்பாளர்களை தேடிக் கொள்வது சிரமமானது. எனினும் நவீன உடைகளை அறிமுகப்படுத்துவதே எமது விருப்பம்" என சம்மேளனத்தின் பேச்சாளர் பீட்டர் ஜேன்சென் கூறுகிறார்.

ஜேர்மன் டேபிள் டென்னிஸ் சம்மேளனம் இத்திட்டத்திற்கு தனது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளது.

"டேபிள் டென்னிஸ் ஒரு பழைய பாணி விளையாட்டு என பெரும்பாலானோர் கருதுகின்றனர். இக் கருத்து மாற்றப்பட வேண்டும்" என ஜேர்மன் டேபிள் டென்னிஸ் சம்மேளனத்தின் பேச்சாளரான மன்பிரட் செல்லிங்ஸ் கூறியுள்ளார்.

# உலக கனிஷ்ட டென்னிஸ் சுற்றுப்போட்டி இலங்கையில்

உலக கனிஷ்ட டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளுக்கான தகுதிகாண் சுற்றுப் போட்டிகள் மே 1ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறுகின்றன. சகல போட்டிகளும் கொழும்பிலுள்ள இலங்கை டென்னிஸ் சங்கத்தின் மைதானங்களில் நடைபெறும்.

தெற்காசிய நாடொன்றில் இச்சுற்றுப் போட்டி நடைபெறுவது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிய-ஓசானியா பிரிவுக்கான இப்போட்டிகளில் 15 நாடுகள் பங்குபற்றுகின்றன. அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, சீனா, ஜப்பான், தாய்லாந்து, இந்தியா, கொரியா, தாய்வான், உஸ்பெகிஸ்தான், ஹொங்கொங், இந்தோனேஷியா, மலேசியா, பாகிஸ்தான், சிரியா, இலங்கை ஆகியனவே இதில் பங்குபற்றும் நாடுகளாகும்.

இவற்றில் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள் உலகக் கனிஷ்ட சாம்பியன்ஷிப் போட்டிகளின் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகும். இறுதிச் சுற்றுப்போட்டி இவ்வருட இறுதியில் செக் குடியரசில் நடைபெறவுள்ளது.

14 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்.

கடந்த தடவை இலங்கை ஆண்கள் பிரிவில் 11ஆவது இடத்தையும் பெண்கள் பிரிவில் 15ஆவது இடத்தையும் பெற்றது.

இம்முறை இலங்கை அணியின் ஆண்கள் பிரிவில் பிராங்ளின் இமானுவல், அம்ரித் ரூபசிங்க, ஓஷத விஜேமானே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மூவர் மட்டுமே ஒரு அணியில் இடம் பெறலாம் என்பதால் மற்றொரு சிறந்த வீரரான என்.எஸ். நிஷேந்திரன் மாற்று வீரராக மட்டுமே இடம்பெற்றுள்ளார். இந்நிலையில் வீரர்களின் தேர்வை ஆட்சேபித்து விளையாட்டுத்துறை அமைச்சரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் அணியில் ஜேன்ஸி பரமநாதன், ஷாங்கி தென்தெனிய, தெயூமி அபேசிங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மே 1,5,6ஆம் திகதிகளில் நடைபெறும் போட்டிகள் 'சனல் ஐ' தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்படவுள்ளன. நுழைவுச்சீட்டுக் குலுக்கல் மூலம் பார்வையாளர்களுக்கு துவிச்சக்கரவண்டி மற்றும் டென்னிஸ் மட்டைகளை பரிசாக வழங்கவும் இலங்கை டென்னிஸ் சங்கம் தீர்மானித்துள்ளது.




உலக கனிஷ்ட டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி தொடர்பான ஊடகவியலாளர் மாநாட்டின்போது எடுக்கப்பட்ட படத்தில் இலங்கை டென்னிஸ் சங்கத் தலைவர் லலித் வித்தான, சுற்றுப்போட்டி பணிப்பாளர் ட்ரிபோன் மிரன்டோ, 'ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்' நிறுவனத்தின் வர்த்தகத் தலைவர் ஜி.ரி. ஜெயசீலன், சங்கத்தின் செயலாளர் மெக்ஸ்வெல் டி. சில்வா ஆகியோர் காணப்படுகின்றனர்.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# 50 கோடி ரூபா நஷ்டஈடு கோருகிறார் திலங்க

"விளையாட்டுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல என்னிடம் மன்னிப்புக் கோரவேண்டும் அல்லது 50 கோடி ரூபா நஷ்ட ஈடு வழங்கவேண்டும்." இவ்வாறு இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால கோரியுள்ளார்.



திலங்க

'எனக்கும் எனது சகாக்களுக்கும் எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை விளையாட்டுத்துறை அமைச்சர் ஊடகங்களில் கூறியுள்ளார். இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மேற்படி நஷ்ட ஈட்டைக் கோருவதாக திலங்க சுமதிபால கூறுகிறார்.

"அமைச்சர் 7 நாட்களுக்குள் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும். அல்லது 14 நாட்களுக்குள் 50 கோடி ரூபா நஷ்ட ஈடு தரவேண்டும். தவறினால் வழக்குத்தொடரப்படும்' என திலங்கவின் சட்டத்தரணிகள் அமைச்சர் கிரியெல்லவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். கடந்த 26 ஆம் திகதி இக்கடிதம் அனுப்பப்பட்டது.

மார்ச் 28 முதல் ஏப்ரல் 11வரை பல்வேறு செய்தி ஊடகங்களில் திலங்க பற்றி அமைச்சர் தெரிவித்த விடயங்களும் இக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிரிக்கெட் அபிமானிகளிடமும் பொது மக்களிடமும் தனக்குள்ள நற்பெயருக்கு அமைச்சரின் கருத்துக்கள் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளதாகவும் திலங்க குறிப்பிட்டுள்ளார்.



லக்ஷ்மன் கிரியெல்ல

இதேவேளை கிரிக்கெட் நிர்வாகத்திலிருந்து தான் ஒதுங்கத் தீர்மானித்திருப்பதாகவும் செய்தியாளர் மாநாடொன்றில் திலங்க கூறியுள்ளார்.

"நான் எந்தவொரு மோசடியிலும் ஈடுபடவில்லை. ஆனால் என்மீதும் எனது குடும்பத்தினர், உறவினர்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நான் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளேன். ஆனால் எனதும் எனது சகாக்களினதும் பெயரை தூய்மையாக்குவதற்கு நான் தீவிரமாகச் செயற்படுவேன்" என்கிறார் திலங்க சுமதிபால.

# 'கிரிக்கெட் சபை யாப்பு திருத்தப்படும்'

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் யாப்பைத் திருத்தியமைக்க உத்தேசித்துள்ளதாக சபையின் இடைக்கால நிர்வாகக் குழுத் தலைவர் விஜய மலலசேகர கூறியுள்ளார்.

"எதிர்காலத்தில் கிரிக்கெட் சபையின் நிதிப் பொறுப்புகளை நிர்வாகிகளிடமிருந்து வேறாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. சபையின் கீழ் இயங்கும் நம்பிக்கை நிதியமொன்றினாலேயே நிதி விடயங்கள் கையாள வேண்டுமென நாம் கருதுகிறோம்" என மலலசேகர கூறுகிறார்.

இது தொடர்பாக ஆராய விஜய மலலசேகர தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. நளின் அபேசேகர, மைக்கல் ஸ்பிரெளல், ரோஹினி கொப்பேகடுவ, முஹமட் அனஸ் ஆகியோர் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.


சுடர் ஒளி

சார்ஜா கிரிக்கெட் பரிசுப்போட்டி!

## பரிசுபெறுவோர் விவரம்

*சரியான விடைகள்:*

1. சாம்பியன் அணி: **இலங்கை**
2. தொடரின் சிறப்பாட்டக்காரர்: **இன்ஸமாம் உல் ஹக்**
3. தொடரில் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற வீரர்: **சயீட் அன்வர்**
4. தொடரில் கூடுதலான விக்கட்டுகளைப் பெற்ற வீரர் : **முத்தையா முரளிதரன் அல்லது சக்லைன் முஸ்தாக்**
5. இன்னிங்ஸ் ஒன்றில் வேகமான அரைச்சதம் பெற்ற வீரர்: **சஹீட் அஃப்ரிடி**

சுடர் ஒளி நடத்திய இந்தப் போட்டியில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கிரிக்கெட் ரசிகர்கள் கலந்து கொண்டனர். விடைகள் பெரும் எண்ணிக்கையில் கிடைத்ததால்தான் பரிசுக்கு உரியவர்களைத் தெரிவு செய்வதற்குக் கால அவகாசம் தேவைப்பட்டது.

ஐந்து கேள்விகளுக்கும் சரியான விடைகளை ஒருவரும் அனுப்பவில்லை. 32 பேர் நான்கு கேள்விகளுக்குச் சரியான விடைகளை அனுப்பியிருந்தனர். போட்டி விதிகளின்படி அவர்களிலிருந்து பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.

*பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்:*

* **முதலாம் பரிசு - ரூபா 5,000/-**
  ஏ.எம். லக்ஷ்மன், 85/1 அருணகிரி வீதி, திருகோணமலை.
* **இரண்டாம் பரிசு- ரூபா 3,000/-**
  எம். ராஜேந்திரன் குணா, 46 சென்றல் எலியர்ஸ், வட்டவளை.
* **மூன்றாம் பரிசு - ரூபா 2,000/-**
  சி. நிர்மல்ராஜ், 27 ஆறாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**ஆறுதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூபா 1,000/-**

* எம்.வை. கமிலா ஃபர்வீன், 86 மகளிர் பாடசாலை வீதி, சாய்ந்தமருது -11, கல்முனை.
* தி. பார்த்திபன், 1ஆம் ஒழுங்கை, ஐயனார் வீதி, பருத்தித்துறை.
* க.ச. குமாரசாமி 280 விநாயகர் வீதி, உக்குளாங்குளம், வவுனியா.

பரிசுகளுக்கு அனுசரணை:

*முதலாவது பரிசு:*
ஹரி மார்க்கட்டிங் என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
5, டாம் வீதி, கொழும்பு -12.

*இரண்டாம், மூன்றாம் பரிசுகள்:*
வேர்ல்ட் பஸார் டெக்ஸ்ரைல் சென்டர்
4, ரோஹினி வீதி, கொழும்பு -06.

*ஆறுதல் பரிசுகள்:*
லான்ட்மார்க் என்டர்பிரைசஸ், 36/2, பிரெட்ரிகா ரோட், கொழும்பு -06.

பரிசு பெறும் அதிஷ்டசாலிகளுக்கு சுடர் ஒளியின் பாராட்டுக்கள்.
பரிசுத் தொகைகள் உரியவர்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.
போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

# பெயரளவில் பாடசாலை; உண்மையில் சாக்கடை!



மாணவர்கள் தண்ணீரை அள்ளி வகுப்பறையைத் துப்புரவு செய்கிறார்கள்






குடியிருப்புப் பகுதிகளில் இருந்து அடித்து வரப்பட்ட குப்பைகளும் கழிவுகளும் வடிகாலை நிறைந்து விட்ட கோலம்

எவருடனோ டெலிபோனில் நீண்ட நேரமாகப்பேசிக் கொண்டிருந்தார் ஆசிரியர். டெலிபோனை வைத்ததுதான் தாமதம். ''மிஸ்டர் க்றோ!'' என்று ஆபீஸே அதிரும்படியாகக் குரல் கொடுத்தார்.

மிஸ்டர் க்றோ இதை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போனார். ஆசிரியரின் அறைக்குச் சென்றதும் உடனே படப்பிடிப்பாளர் சகிதம் ஜிந்துப்பிட்டி புனித அந்தோனியார் ஆண்கள் தமிழ் மகா வித்தியாலயத்துக்குப் பறக்குமாறு உத்தரவு பிறந்தது.

மிஸ்டர் க்றோவுக்கு விஷயம் புரிந்துவிட்டது. வித்தியாலயம் நோக்கிச் சிறகடித்தார்.

வித்தியாலயத்தினுள் நுழைந்ததும் ஒரே நாற்றம். எங்கும் சேறும் சகதியும்.

''நீங்கள் சுடர் ஒளியிலிருந்துதானே வருகிறீர்கள்? வாருங்கள்'' என்று சில மாணவர்கள் அன்பொழுக வரவேற்று அதிபரின் அறைக்கு அழைத்துச் சென்றனர்.

'' நீங்கள் எங்களுடைய ஆசிரியருக்கு டெலிபோனில் ஏதோ சொன்னீர்களா?'' இது ''மிஸ்டர் க்றோ'' வின் கேள்வி



வகுப்பறைகளுக்குச் செல்லும் வழியில சாக்கடை வெள்ளம் பாய்கிறது

'' நான் அல்ல. எங்களுடைய அதிபர்தான் சொன்னார். அவசர காரியமாக அவர் கல்வித் திணைக்களத்துக்குப் போய் விட்டார், என்னை (பிரதி அதிபர் வரதராஜ்) உங்களுக்கு வேண்டிய தகவல்களைக்கொடுத்து உதவும் படி பணித்திருக்கிறார்.

''நல்லது என்ன பிரச்சினை என்று வினவினார் மிஸ்டர் க்றோ.

''நீங்களே நேரில் பாருங்களேன்'' என்று பாலர் பிரிவுக்கு மிஸ்டர் க்றோவை அழைத்துச் சென்றார் பிரதி அதிபர்.

என்ன ஆச்சரியம்! வகுப்பறைக்குள் சாக்கடை நீர் நிறைந்து இருந்தது. கதிரைகளும் மேசைகளும் அந்த அழுக்கு நீரில் மிதந்து கொண்டிருந்தன. சில மாணவர்கள் தண்ணீரை அள்ளி வெளியே ஊற்றுவதிலும் பெருக்கித் தள்ளுவதிலும் ஈடுபட்டிருந்தனர்.

விஷயம் புரியாத சின்னஞ் சிறிசுகள் அந்தச் சாக்கடை நீரில் காலை நனைத்து உதறுவதில் ஒரு வகை இன்பம் கண்டு கொண்டு இருந்தனர்.

வகுப்புகளுக்கு முன்னுள்ள மைதானம் குப்பைகள் கஞ்சல்களுடன் நீர் நிறைந்தசதுப்பு நிலமாகக் காணப்பட்டது.

வகுப்பறைகளுக்குச் செல்லும் பாதைகள் ஊடாக கழிப்பறை நீர் வழிந்தோடி வருகிறது. துர்நாற்றம் சகிக்க முடியவில்லை.

ஒருவாறு பொறுத்துக் கொண்டு மிஸ்டர் க்றோ தனது ஓரக்கண் பார்வையைச் செலுத்தினார்.

பிரதான வடிகால் இப்பாடசாலையை ஊடறுத்துச் செல்கிறது. மண்ணும், குப்பையும் நிறைந்து வடிகால் மூடிக்கிடக்கிறது. குப்பைகள், கழிவுகள், தகர டப்பாக்கள், அட்டைகள், பொலித்தீன் பைகள் முதலானவற்றால் வடிகால் அடைபட்டிருக்கிறது. அதனால் சாக்கடை நீர் வழிந்து ஓட முடியாத நிலையில் வகுப்பறைக்குள் புகுந்து விடுகிறது.

சாக்கடை நீர் வெளியே செல்ல முடியாததால் கழிப்பறைகளும் நிறைந்து வழிகின்றன. அதனால் ஒரே நாற்றம்.

மேல் மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசன் பெரும் பணச் செலவில் கட்டித்தந்த கழிப்பறைகள் என்று நன்றியுடன் எடுத்துச் சொன்னார்கள். இன்றைய நிலைமையை அறிய அவரின் மனம் எவ்வளவு வேதனைப்படும்!

எல்லாம் சரி, சாக்கடை நீர் வெள்ளம் போல் வந்து வகுப்பறைகளை நிறைப்பதன் மர்மத்தை அறிய மிஸ்டர் க்றோ பாடசாலைச் சுற்றாடலை நோட்டமிட்டார்.

புனித அந்தோனியார் ஆண்கள் தமிழ் மகா வித்தியாலயம், புனித மரியாள் சிங்கள வித்தியாலயம், புனித அந்தோனியார் மகளிர் தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய மூன்றும் ஒரே வளவில் இருக்கின்றன.

இவற்றுள் புனித அந்தோனியார் ஆண்கள் தமிழ் மகா வித்தியாலயம் தான் ஆகப் பள்ளத்தில் இருக்கிறது.

ஜிந்துப்பிட்டி மேடு, விவேகானந்தா மேடு, மலிபன் பகுதி ஆகிய இடங்களிலிருந்து வரும் பிரதான வடிகால் புனித அந்தோனியார் ஆண்கள் தமிழ் மகா வித்தியாலயம் ஊடாகவே செல்கிறது.

எத்தனையோ சட்ட விரோதக் கட்டடங்கள் அமைக்கப்பட்டதாலும் வடிகால் சரியாகப் பராமரிக்கப்படாததாலும் அது அடைபட்டுக் கிடக்கிறது. சாக்கடை நீர் குறுக்கே பாடசாலை வகுப்பறைக்குள் பெருக்கெடுக்கிறது.

இந்த விவரங்களை எல்லாம் நேரில் பார்த்தும் கேட்டும் அறிந்து கொண்டதும் மிஸ்டர் க்றோ பிரதி அதிபரிடம் ஒரு கேள்வி கேட்டார்.

''பிள்ளைகள் படிக்க வருகிறார்களா அல்லது சாக்கடை நீரில் நீந்தி விளையாட வருகிறார்களா? சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்து நிலைமையைச் சீராக்கி இருக்கக் கூடாதா?

''முயன்று பார்த்தோம் முடியவில்லை அதனால் சுடர் ஒளியின் உதவியை நாடினோம்'' என்று பதில் வந்தது.

''அப்படியா? அப்புறம்'' என்று மிஸ்டர் க்றோ மீண்டும் குடைந்தார்.

''இந்தப் பிரச்சினை பற்றி மாநகர சபைக்கும் மாகாண சபைக்கும் அதிபர் எத்தனையோ முறை அறிவித்தார். உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

குடியிருப்புப் பகுதியிலிருந்து குப்பைகளும், கஞ்சல்களும் அடித்து வரப்படுவதைத் தடுப்பதற்கு ஆங்காங்கே மூன்று சல்லடைகள் பொருத்தப்பட்டன. ஆயினும் அவை அடித்து நொறுக்கப்பட்டுவிட்டன.

அதிபரின் புகாரின் பேரில் மாநகர சபையின் வடிகால் அமைப்புப் பிரிவின் பெண் பொறியியலாளர் ஒருவர் நிலைமையைப் பார்வையிடச் சென்றார். காடையர்கள் அவரை விரட்டி விட்டனர். அதன் பின்னர் வேறெந்த அதிகாரியும் பார்வையிடச் சென்றது கிடையாது.

உயரத்தில் இருக்கும் இரு பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படும் போது கட்டட ஒப்பந்தக்காரர்கள் அந்தப் பாடசாலைகளின் வடிகால்களை நேர்சீரற்ற முறையில் புனித அந்தோனியார் ஆண்கள் தமிழ் மகா வித்தியாலயம் ஊடாகச் செல்லும் பிரதான கால்வாயுடன் இணைத்து விடுகின்றனர்.

இது தொடர்பாகக் கொழும்பு மாநகர சபையிடம் முறையிட்டால் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் போகச் சொல்கிறார்கள். அங்கே சென்றால் பொறியியலாளரைச் சந்தித்துப் பேசுங்கள் என்று சொல்லித்தட்டிக் கழிக்கிறார்கள்.

வேறு வழியின்றி வலயக்கல்விப் பணிப்பாளரிடம் சென்றால் அவர் தாம் இதற்கு என்ன செய்ய முடியும் என்று கையை விரிக்கிறார். சாக்கடை நீர் நிறைவதால் வகுப்பு நடத்த முடியவில்லை என்றால் '' லொக்'' புத்தகத்தில் எழுதிவிட்டுப் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பி விடுங்கள் என்கிறார்.

''சபாஷ் அப்படியா சொன்னார்? கையில் புண் வந்தால் கையையே வெட்டி விடும்படி



சாக்கடை நீர் கழிப்பறைகளையும் நிரப்பி அவற்றை உபயோகிக்க முடியாமல் செய்துவிட்டது

சொல்வார்போல இருக்கிறதே'' – இது மிஸ்டர் க்றோவின் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள்.

ஜீ.சி.ஈ. உயர்தரம் வரை 1350 மாணவர்கள் கல்வி பயிலும் கொழும்புப் பாடசாலையின் கதி இதுவா?

ஆசிரியர் பற்றாக்குறை, இந்தப் பாடசாலைக்கான பொது வழி அடைக்கப்படும் என்ற எச்சரிக்கை – இப்படி இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் என்று உப அதிபர் அடுக்கிக் கொண்டே போனார்.

ஆரோக்கியமான சூழலில் பாடசாலைகளைத் திறம்பட இயங்கவைக்க முடியவில்லை என்றால் அதற்கு கல்வி அமைச்சு ஏன், கல்வித் திணைக்களம் ஏன்? கையால் ஆகாதவர்களுக்கு மக்களின் வரிப்பணத்தை மாதந்தோறும் வாரி இறைத்து விரயம் செய்வதா?

மிஸ்டர் க்றோவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அருகில் நின்ற தனது சகாவான போட்டோ க்ராபரைப் பார்த்தார். படங்கள் எல்லாம் ஓ.கே என்றார் அவர். நேரே ஆபீஸூக்குச் சிறகடித்தார் மிஸ்டர் க்றோ.




நியூ திவ்யா ஜுவலர்ஸ்

கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்னம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர்வித்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்

NEW DHIVIYA JEWELLERS

42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery

இதோ விற்பனையாகின்றன!

Shan Series

G.C.E (A/L), GAQ

உயர்வகுப்புக்களுக்குரியவை.

அதிவிஷேட பெறுபேறுகளுக்கு

- பொருளியல் படிப்பு வழிகாட்டிகள் I - ரூ.180/= II - ரூ.240/=
- பொருளியல் பரீட்சை வழிகாட்டிகள் (8 Exams) ரூ.180/=
- கணக்கீடு, வணிகக்கல்வி, பொருளியல் } அகராதி ரூ.96/=
- நவீன வியாபாரக் கணக்கீடு ரூ.60/=
- சுட்டெண்கள், வெளிவாரி விளைவுகள் ரூ.20/=
- உற்பத்தி, உற்பத்தி செலவு கோட்பாடு ரூ.120/=
- பல்தேர்வு வினா - விடைகள் (அச்சில்)

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

தபால், வி.பி.பி கட்டளைகள் மூலமும் பெறலாம்



A.SHANMUGALINGAM
(Royal College, Col -7)

RATHY PUBLICATION
NO.47, DR.E.A COORAY MAWATHA,
WELLAWATTA, COLOMBO - 6. T.P : 598097



நியூ திவ்யா ஜுவலர்ஸ்

கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்னம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர்வித்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்

NEW DHIVIYA JEWELLERS

42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery